Free Circulation Germany-England-Swiss

தை Jan.2019

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

Successful Publishing 25 Years IN EUROPE

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை



Königswall 16 (Am HBF) 44137 Dortmund

Tel:0231 162377 Fax:0231 147836



## இருட்டடிப்பில் உலகம் இருண்டுகிடக்குது

## மனைவி வீட்டில் இல்லாதபோது

## மனித உடலில் தங்கமா?

Dr.IN




அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்



S.K.SILKS GOLD PARAADISE

அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

மாபெரும் மலிவு விற்பனை!

05.01.2019 முதல் 12.01.2019 வரை

சேலைகள் பஞ்சாபிகள் 40% முதல் 60% வரை

மாபெரும் ராஜமுத்திரை

Adler Straße 33 44137 Dortmund Germany

Tel: 0049 231 9501 647



U.K

செல்வராஜா

Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG

RHEINISCHE STR 52 44137 DORTMUND Tel:0231 819288 Germany

Page.12

Gopara Gnanam GMBH

Tel:0231 5450028 Mob:0171 330 6542

Rheinische str.81 - 44137 Dortmund

Page.25


StaR-Impex

Kipper Str.03 44147 Dortmund/ Germany

Tel:0231 860 26 96

S.39

# First baby born through dead uterus transplant



Author: Sahana Asokan

There are 130 million babies born worldwide a year, but have you thought about how many are born naturally? Not all women have the ability to give birth which may be due to many genetically reasons. There are many ways that women can have children thanks to our medical advancement. Now, doctors have successfully found another way! Uterus transplant. This is the beginning of a new choice women can make.

In Brazil, a woman who had died from a brain haemorrhage at the age of 45 donated her uterus to another woman. The woman had a genetic disorder which meant that she was born with no uterus. There have been many cases involving a deceased donor uterus transplant that many people from different countries have tried. Unfortunately, none of the other nations such as US, Czech Republic and Turkey have been successful.



The woman, aged 32, wanted to have a child and this was possible due to the transplant.

The procedure lasted ten and a half hours in total and involved the doctors to connect the veins, arteries, ligaments and vaginal canals.

The women had to remain in intensive care for two days and then another six days on a specialised transplant ward. To prevent her body rejecting the new organ, she took five immunosuppression drugs. This was combined with other treatments that were needed to avoid blood clotting and infections. After the doctors approved of the procedure, they inserted the fertilised eggs through IVF.

A normal pregnancy lasts about two hundred and eighty days or forty weeks, however the women's gestation period last for thirty-five weeks and

three days. On the 5th of December, her daughter was born by a caesarean section and she weighed 2.55 kilos. When the doctors delivered the baby, the transplanted uterus was removed, and it displayed no irregularities. Dani Ejzenberg, at Sao Paulo University in Brazil led the team and he claims that this is a medical milestone. “This creates the possibility of childbirth for many infertile women with access to suitable donors and the needed medical facilities,” said Ejzenberg.

Medicine and technology is growing rapidly, and this event is one of the many cases that proves our strides in the medical field. Brazil has successfully given birth to someone who had a deceased donor uterus transplant which has given more hope to humanity.



## கொழும்பில் மகாகவி பாரதியின் கொள்ளுப்பேரன் DR. ராஜ்குமார்

கலாசூரி திவ்யா சுஜேனின் அபிநயஷேத்ரா நடனப்பள்ளி மாணவி ஹாரிணி அரசரட்ணத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் 01.12.2018 கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்றது. மகாகவி சுப்பிரமணியபாரதியாரின் பாடல்கள் உள்ளடக்கப்பட்டதுடன், பாரதியின் கொள்ளுப்பேரன் என்னும் பெருமை கொள்ளும் DR. ராஜ்குமார் பாரதி அவர்களின் இசை அமைப்பிலும் நடன உருப்படிகள் இடம்பெற்றன. பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த Dr ராஜ்குமார் பாரதி அவர்கள் குரு திவ்யா சுஜேனின் நடன அமைப்பு, லய ஞானம், கலை, மொழி ஆர்வம் எனப்பன்முகப்பட்ட திறமைகளை பாராட்டி வாழ்த்தி 10 வயதான ஹாரிணிக்கும் ஆசிகள் வழங்கினார்.இந்நிகழ்வின் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்த கம்பவாரிதி E.ஜெயராஜ் அவர்களும் குரு திவ்யாவின் முத்தமிழ் ஆற்றலை மகிழ்ந்து பாராட்டினார். இருள் நீக்க வந்த அருள் உள்ளங்கள் மதிப்பிற்குரிய ராஜ்குமார் பாரதி ஐயா, திருமதி சாந்தலஷ்மி ராஜ்குமார் பாரதி அம்மா. அவர்களின் கலைத்தாகம் கண்டு மகிழ்கின்றோம்.







**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை 269



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

“ஓவியக்கலைவேள்”

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**“வெற்றிமணிமொழி”**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

**Vettimaniy Ltd**
Company No: 8876276


## மீண்டும் ரணில்....

# இனவாதத்தை கையில் எடுக்கும் மகிந்த





**இலங்கையிலிருந்து பாரதி**

கொழும்பு அரசியல் 50 நாட்களாகத் தொடர்ந்த அரசியல் நெருக்கடி முடிவுக்கு வந்திருக்கின்றது. அக்டோபர் 26 இல் திடீர்ப் பிரதமராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ, தான் “வகிக்காத“ பதவியை ராஜினாமா செய்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகியுள்ளார்.ரணில் தொடர்பில் தனது கடுமையான நிலைப்பாட்டைத் தளர்த்திக்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதற்கு விளக்கமும் கொடுத்துள்ளார்.

”கடவுளே வந்து கெஞ்சினாலும் ரணிலைப் பிரதமராக்க மாட்டேன்” என உறுதியாக இருந்த ஜனாதிபதி மைத்திரி தனது பிடியைத் தளர்த்திக்கொண்டமைக்கு காரணம் என்ன என்பதையிட்டும், எதிர்க்கட்சித் தலைமையில் கண்வைத்துள்ள மகிந்த ராஜபக்ஷவின் அடுத்த கட்ட அரசியல் உபாயம் என்ன என்பதையிட்டும் சுருக்கமாகப் பார்ப்போம்.

மைத்திரி - மகிந்த முன்னெடுத்த அரசியலமைப்பு சதியின் தோல்விக்கு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களும், நீதிமன்றத் தீர்ப்புக்களும்தான் காரணம். குறிப்பாக டிசெம்பர் 12 இல் ரணில் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கைப் பிரேரணையுடன் அவர்களுடைய வீழ்ச்சி உறுதியாகியது.

ரணிலுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேரணை கொண்டு வரப்படுவதைத் தடுப்பதற்கு இறுதி நிமிடம் வரையில் ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இரண்டு முனைகளில் இதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டது. ரணில் மீது வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வது முதலாவது. த.தே.கூட்டமைப்பை நடுநிலை வகிக்கச் செய்வது இரண்டாவது. கூட்டமைப்பை வழிக்குக் கொண்டுவருவதற்கான முயற்சியை மைத்திரி தன்னுடைய கைகளிலேயே எடுத்திருந்தார்.

டிசெம்பர் 12 புதன்கிழமை நம்பிக்கைத் தீர்மானம் வரவிருந்த நிலையில், செவ்வாய்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனைத் தொடர்புகொண்டார் ஜனாதிபதி. பாராளுமன்ற சமநிலையில் கூட்டமைப்பின் நிலைப்பாடுதான் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. ரணில் விடயத்தில் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கும் என்பது முன்னரே உறுதியாகத் தெரிந்திருந்தது. அவ்வாறான நிலையிலும், ரணில் விடயத்தில் நடுநிலை வகிக்குமாறு வலியுறுத்து வதற்குத்தான் சம்பந்தனுடன் ஜனாதிபதி பேசினார்.

கூட்டமைப்பு நடுநிலை வகித்தால் ரணிலுக்கு ஆதரவாக 103 வாக்குகள்தான் கிடைக்கும். அதன்மூலம் பிரேரணையை நிறைவேற்ற முடியாது போய்விடும். இந்த எதிர்பார்ப்புடன்தான் சம்பந்தனுடன் மைத்திரி தொடர்பு கொண்டார். கூட்டமைப்பை வழிக்குக் கொண்டுவருவதற்கு அரசியல் கைதிகள் விவகாரத்தையும் பயன்படுத்த முற்பட்டார்கள். அங்கஜனுடன் நாமல் ராஜபக்ஷ வெலிக்கடை சென்று கைதிகளைப் பார்வையிட்டார். அவசரமாக கைதிகள் விடுதலைக்காக என ஒரு குழு அமைக்கப்பட்டது. கைதிகள் மூலமாகவும் கூட்டமைப்பின் தலைமைக்கு அழுத்தம் கொடுக்க எடுக்க முயற்சிகள் பிசுபிசுத்துப்போனது.

இந்தநிலையில் புதன்கிழமை காலை பாராளுமன்றம் செல்வதற்கு முன்னதாக ஜனாதிபதியை கொழும்பு -7 இல் உள்ள அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேரில் சென்று சந்தித்த சம்பந்தன், தன்னுடைய முடிவை உறுதியாகத் தெரிவித்தார். சம்பந்தனுடன் மாவை சேனாதிராஜாவும், த.சித்தார்த்தனும் சென்றிருந்தார்கள். இதன்போதும் கூட்டமைப்பு நடுநிலை வகிக்க வேண்டும் என மைத்திரி வலியுறுத்தியதாகத் தெரிகின்றது. ஆனால், ”இந்த விடயத்தில் நாங்கள் உங்களுக்கு உதவ முடியாத நிலையில் இருக்கின்றோம்” என நிலைமையை விளக்கிய சம்பந்தன், அங்கிருந்து நேராக பாராளுமன்றத்துக்குப் புறப்பட்டார்.

சம்பந்தனின் பதில் அரசியலில் தனது பிடிகள் கையை விட்டுச் செல்கிறது என்பதை ஜனாதிபதிக்குத் தெளிவாக உணர்த்தியது. அந்த நிலையிலும், ரணிலைப் பிரதமராக நியமிக்கப்போவதில்லை என ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மத்தியில் ஜனாதிபதி கூறினார். ரணில்தான் பிரதமர் என்பதில் ஐ.தே.மு. உறுதியாக இருந்தது. மறுபுறத்தில் ரணிலுக்கு இடமளிப்பதில்லை என்பதை மைத்திரி உறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்தார். இந்த நிலையில் மகிந்த அரசு மீதான இடைக்காலத் தடையை உயர் நீதிமன்றமும் உறுதிப்படுத்தித் தீர்பளித்துவிட்டது. இந்தத் தீர்ப்பு ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டதுதான். இதனால், மகிந்த ராஜினாமா செய்ய வேண்டியது தவிர்க்க முடியாத தாகியது. இந்த நிலையில் இரு தரப்பினரும் தமது பிடியைத் தளர்த்தாவிட்டால், நாடு கடுமையான நெருக்கடிக்குள் செல்லும் என்பதும், குழப்பங்கள் தொடரும் என்பதும் தெளிவாகியது.

தொடர்ச்சி 27ம் பக்கம்

**உங்கள் மாபெரும் ஆதரவுடன்**
**2019 ம் ஆண்டு**
**வெற்றிமணிக்கு வெள்ளிவிழா!!!**

அட்டைப்படம் :செல்வி அபிரா.தயாபரன் .
படம்: Konessfotos.com






## ஈழத் தமிழர் ஒருவர் முயற்சியால் யேர்மன் NRW மாநிலத்தில் புனித மாட்டீனார் பாரம்பரியம்

சடப்பொருள் அற்ற கலாச்சார வழக்கமாக (The Inventory of the Intangible Cultural Heritage of North- Rhine Westphalia) அங்கீகாரம் பெற்றுள்ளது யேர்மனி கெம்பென் நகரசபை அங்கத்தவரும் பிரதேசசபை உறுப்பினருமான ஜெயரட்ணம் கனீசியஸ் மற்றும் யேர்மனியரான Rene Bongarz ஆகியோர் எடுத்த தீவிர முயற்சி காரணமாக புனித மாட்டீனார் பாரம்பரியம் யேர்மன் NRW மாநிலத்தில் சடப்பொருள் (உணரும் கலை) அற்ற கலாச்சார வழக்கமாக அங்கீகாரம் பெற்றுள்ளது. இதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் கடந்த 25.10.2018 அன்று டுசில்டோப் மாநில சட்டசபையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் ஜெயரட்ணம் கனீசியஸ் மற்றும் யேர்மனியரான Rene Bongarz ஆகியோரிடம் கலாச்சார அமைச்சின் செயலர் திரு. Klaus Kaiser அவர்களால் கையளிக்கப்பட்டது.

இதன் அடுத்த கட்டமாக இவர்கள் இருவரும் யேர்மன் நாடு முழுவதும் இதை ஒரு சடப்பொருள் அற்ற கலாச்சார வழக்கமாக (The Inventory of the Intangible Cultural Heritage of Germany) அங்கீகரிக்க யேர்மன் மத்திய கலாச்சார அமைச்சிடம் விண்ணப்பிக்கவுள்ளனர். இதன் நோக்கம், மக்களால் முன்னெடுக்கப்படும் இப் பாரம்பரிய கலாச்சார வழக்கத்தை யுனெஸ்கோ அமைப்பால் அங்கீகரிக்கச் செய்வதாகும்.

கத்தோலிக்க திருஅவையில் புனித மாட்டீன் மிகப் பிரபலமான புனிதர்களில் ஒருவர் என்பதுடன், உலகெங்கும் இவர் பெயரில் நகரங்கள், கிராமங்கள், தீவுகள், வீதிகள், ஆலயங்கள், குருமடங்கள், பாடசாலைகள், யாத்திரை வழிகள் போன்றவை உள்ளன.

புனித மாட்டீனார் விழா யேர்மனி சேறு மாநிலத்தில் **(North- Rhine Westphalia)** நீண்ட பாரம்பரியமான வகையில் கொண்டாடப்படுகின்றது, கெம்பென் நகரில் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை 9 மற்றும் 10 இல், இரு பெரிய ஊர்வலங்களாக இவ்விழா இடம்பெறுவதுடன், இதில் ஆயிரக் கணக்கான பிள்ளைகளும் பெரியோர்களும் கைகளில் விளக்குகளை ஏந்தி, பாடல்களைப் பாடியவாறு பங்கேற்பர். மாட்டீன், இவரது பிறப்புப் பெயர் மாட்டீனுஸ், இவர் ஒரு உரோமிய இராணுவச் சிப்பாயின் மகனாக இன்றைய கங்கேரி நாட்டில் பிறந்தார். தனது இளம் பிராயத்தை தனது தந்தையின் ஊரான இத்தாலிய பாவியாவில் கழித்தபோது முதல்முறையாக கிறிஸ்தவத்தை அறிமுகப்படுத்திக் கொண்டதுடன், தனது 10வது வயதில் திருமுழுக்குப் பெறும் குழுவில் தன்னை இணைத்துக் கொண்டார். இருப்பினும் சிப்பாயின் மகனான இவர் கட்டாயமாக இராணுவத்தில் இணைய வேண்டும் என்ற சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டியவரானார். அதற்கமைய தனது 15வது வயதில் கொன்ஸ்ரன்ரின் அரசரின் மெய்ப்பாதுகாவலர் படையில் சேர்க்கப்பட்டு மைலாண்ட் சென்றார். இதன் பின்னர் இவர் பல ஆண்டுகளாக அங்கு கடமையாற்றியபோதும் தனது 35வது வயதில் திருமுழுக்குப்பெற்று அதன்பின் சில போர்களில் பங்கேற்க மறுப்புத் தெரிவித்ததால் இவரது 40வது வயதில் 25வருட சேவையின் பின்பு இராணுவ சேவையில் இருந்து விடுவிக்கபப்பட்டார். இதன்பின் 361ம் ஆண்டில் தன்னை குருமடத்தில் சேர்த்துக்கொண்டு துறவியாக மாறினார். அவசர வேளைகளில் உதவுதல் மற்றும் அதிசயங்களை நிகழ்த்துபவர் என்பதால் மாட்டீன் விரைவில் அப்பிரதேசம் முழுவதும் பிரபலமானார். 372ம் ஆண்டில் அவர் தூர்ஸ் மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார். அப்படியிருந்தும் ஆயராக புகழுடன் நகரத்தில் வாழாமல் நகர எல்லைச் சுவருக்குப் பக்கமாக இருந்த பலகைக் குடிசையில் வாழ்ந்தார். இவர் 397ம் ஆண்டு கார்த்திகை 8இல் தனது 81வது வயதில் இறைவனடி சேர்ந்ததுடன், இவரது உடல் கார்த்திகை 11இல் தூர்ஸ் நகரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரது இரக்க சுபாவம் காரணமாக புனித மாட்டீன் பிரயாணிகள், ஏழைகள், இரவலர்கள், குதிரை வீரர்கள் இதற்கும் மேலாக அகதிகள், சிறைக் கைதிகள் மற்றும் போர்வீரர்களின் பாதுகாவலராக மதிப்பளிக்கப்படுகிறார். யேர்மனியில் அனைத்து சமூகத் தளங்களாலும் ஒன்றுசேர்ந்து கொண்டாடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



**செல்வன். கோடீஸ்வரநாதன் ஜாதவன்**

2017- 18 கல்வியாண்டில் நடைபெற்ற அனைத்துலக தமிழ்ப் பொதுத்தேர்வில் வளர்நிலை பன்னிரண்டை (12) திறமைச் சித்தியுடன் பூர்த்தி செய்த, தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் நடாத்தும் "றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை" மாணவன் செல்வன்.
கோடீஸ்வரநாதன் ஜாதவன்
3- 11- 2018 இல் நடைபெற்ற வாணி விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரை றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் வாழ்த்துகின்றார்கள்.



**செல்வன் செபஸ்தியன் திலக்சன்**

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் அனைத்துலகத் தமிழ் மொழித் தேர்வு - 2014 ல்
இருந்து 2018 வரை தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் (Excellent) அதிதிறனில் சித்தி பெற்ற நெதர்லாந்து, றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை மாணவன் செல்வன் செபஸ்தியன் திலக்சன்
03.11.2018 ல் நடந்த
வாணி விழாவில் திருமதி மகேஸ்வரி சிவரஞ்சன் அவர்களால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
இவரை, றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் வாழ்த்துகின்றார்கள்.



**திருமதி கருணாவதி (பாமா) பாஸ்கரன்**

28- 04- 2018 அன்று பிரான்ஸ்சில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் இணைந்து நடாத்திய தமிழ்மாணி பட்டயக் கல்வி பட்டமளிப்பு விழாவில் பட்டத்தை பெற்றுக் கொண்ட
நெதர்லாந்து,றோர்மொண்ட் தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றத்தின் செயலாளரும், றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை ஆசிரியருமான திருமதி கருணாவதி (பாமா) பாஸ்கரன் அவர்கள் 3- 11- 2018 இல் நடைபெற்ற வாணி விழாவில் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
இவரை, றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் வாழ்த்துகின்றார்கள்.







Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
Luckyfly
பதிவுக்கு முந்துங்கள்...
Sommer Offer
599 €
குறுகிய காலத்திற்கு மட்டுமே!
பதிவுக்கு முந்துங்கள்!
46 Kg
Gulf Air
அனைவருக்கும் எங்கள்
உள்ளம் கனிந்த தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
Mob:No: 0179 1484 892
e.mail:siva 0108 @hotmail.com
QATAR
Emirates
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171
www.Lucky-fly.de







அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## “சிவாஜி திரைப்படம் ஷங்கர் இயக்கிய ரஜினிகாந்த் படம், எந்திரன் என்பது ரஜினிகாந்த் நடித்த ஷங்கர் படம் “2.0 என்பது சங்கர் இயக்கிய சுபாஸ்கரனின் படம்”






# புல்லினங்காள்

## கறுவலுக்கும் அழகிய வெள்ளைப் பெட்டைகளைக் கவரும் கவர்ச்சியுண்டு!!! உதாரணம் ரஜினி !!!

**JUDE PRAKASH**

தமிழ் திரையுலகில் கிட்டத்தட்ட நாற்பதாண்டுகளிற்கு மேலாக கலக்கி வரும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் ரசிகர்கள் பட்டாளம் அளப்பரியது, அட்டகாசமானது. ரசிகர் பட்டாளம் என்று இங்கு குறிப்பிடுவது ரஜினிகாந்தின் வெள்ளித்திரையில் நடிக்கும் நடிப்பைத் திரையில் கண்டு ரசித்து, மகிழ்ந்து ஆரவாரித்து, அதைப் பற்றி காலமெல்லாம் அலட்டிக் கொண்டிருப்பவர்களை மட்டும் தான், ரஜினிகாந்தின் அரசியலை இதில் கலக்கத் தேவையில்லை, கலக்கவும் கூடாது.
ரஜினிகாந்திற்கு இருக்கும் ரசிகர்களை எந்தவொரு பெட்டிக்குள்ளோ வட்டத்திற்குள்ளோ அடக்க முடியாது. வயது வேறுபாட்டில்லாது, சமூக அந்தஸ்து பார்க்காது, பால் வேறுபாடுகள் களைந்து, கல்வி தராதரத்தை காற்றில் பறக்க விட்டு விட்டு, ரஜினிகாந்த் ரசிகன் என்ற ஒற்றைப் புள்ளியில் ரஜினிகாந்த் எனும் காந்த சக்தியால் ஈர்க்கப்படுபவன் தான் ரஜினிகாந்த் ரசிகன்.

ரஜினிகாந்த் ரசிகனாக ஒருவன் எப்போது ஆகிறான், ஏன் இப்படி ஆனான், எதற்காக அப்படி ஆகிவிட்டான் என்று யாருக்குமே தெரியாது, ரஜினிகாந்த் ரசிகனுக்கும் தெரியாது. முதல் முதலாக பாட்ஷா படத்தை பார்த்து வளர்ந்தவனும் பொல்லாதவன் படத்தை பற்றி கதைப்பான். இந்த நூற்றாண்டில் பிறந்து கோச்சடையான் பார்த்த குழந்தையும் அண்ணாமலை படத்தை ஆறு தரமாவது பார்த்திருக்கும்.

சிவாஜி, MGR பிறகு சிவக்குமார், கமல்ஹாசன் என்று வெள்ளைத் தோல் நாயகர்களின் ஆதிக்கத்தில் இருந்த தமிழ் சினிமாவில் தோன்றிய முதலாவது கறுப்பு ஹீரோ ரஜினிகாந்த் என்பதும் ரஜினிகாந்த் ரசிகர்கள் கொண்டாடும் விடயங்களில் ஒன்று. தமிழனின் தனிநிறம் கறுப்பு, கறுப்பு என்பதும் அழகுதான், கறுவலிலும் அழகிய வெள்ளைப் பெட்டைகளைக் கவரும் கவர்ச்சி இருக்கிறது என்று படத்திற்கு படம் நிரூபித்துக் காட்டியதும் ரஜினிகாந்தின் தனித்துவம் தான்.

ரஜினிகாந்த் படங்கள் என்றால் ரஜினிகாந்திற்கேயுரிய சில விசேட அம்சங்கள் இருக்க வேண்டும், அதை எதிர்பார்த்தே ரஜினிகாந்தின் ரசிகர்கள் “தலைவர் தரிசினத்திற்காக” வெள்ளித்திரைக்கு முன்பாக முதல் நாள் காட்சி காண ஓடோடி வருவார்கள்.

கபாலி, காலா என்ற இரு படங்களிலும் இயக்குனர் ரஞ்சித், வேண்டுமென்றே ரஜினிகாந்தின் தனித்துவங்களை தவிர்த்துவிட்டதாகவோ இல்லை அடக்கி வாசித்து விட்டதாகவோ இன்றும் ரஜினிகாந்த் ரசிகன் மனதுக்குள் கறுவிக் கொண்டு தான் திரிகிறான். திரைப்பாடல்களில் ஸ்ரீதேவி, ஸ்ரீப்ரியா, குஷ்பூ, மீனா, உலக அழகி ஐஸ்வர்யா ராய் ஏன் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா தோன்றி ரஜினிகாந்தோடு ஆட்டம் போட்டாலும், ரஜினிகாந்த் ரசிகனின் கவனம் மட்டும் சிதறாமல் ரஜினாகாந்தின் நடன அசைவுகளை ரசித்துக் கொண்டிருக்கும். ஆகாய கங்கை பாட்டில் கண்ணாடியை சுழற்சிக் கொண்டு வரும் ரஜினிகாந்திலிருந்து காதல் அணுக்கள் பாட்டில் கிட்டாரோடு உலாவும் ரஜினிகாந்த் வரை இந்த கருதுகோளிற்கு ஆதாரமாக காட்டலாம்.

ஒரு ஹீரோவாக, அதற்கு மேலே போய் சூப்பர் ஸ்டாராக ரஜினிகாந்த் திரையில் நடித்திருந்தாலும், ஆரம்ப காலங்களில் வில்லனாக நடித்ததாலோ என்னவோ anti-hero கதாபாத்திரங்களில் ரஜினிகாந்தின் நடிப்பு அபாரமாக இருக்கும். மூன்று முடிச்சு படத்தில் வசந்த கால ஓடங்கள் பாட்டுக் காட்சியிலிருந்து, எந்திரனில் வரும் சிட்டியின் “வசீ.. மே” காட்சிவரை ரஜினிகாந்த் anti-hero வாக கலக்குவார்.




எழுபதுகளில் Black & White படத்தில் அறிமுகமாகி, நினைத்தாலே இனிக்கும் எனும் அற்புதமான Colour படத்தில் இரண்டாவது நாயகனாக நடித்து, பிறகு இந்தியாவின் முதலாவது animation படமான கோச்சடையானிலும் தோன்றிய ரஜினிகாந்த், நேற்று இந்தியாவில் இதுவரை தயாரிக்கப்பட்ட படங்களில் அதிக பொருட் செலவில் தயாரான 2.0 எனும; 3D படத்தில் முக்கிய பாத்திரங்கள் ஏற்று கலக்கியிருப்பார்.2.0 திரைப்படம் பார்த்ததே ஒரு அழகான அனுபவம் என்று தான் சொல்ல வேண்டும். 3D கண்ணாடி அணிந்து “தலைவர் தரிசனம்” காண போனால், கைக்கெட்டும் தூரத்தில் ரஜினிகாந்தைக் காண சில்லிட்டது. ஒரு பக்கத்தில் ரஹ்மானின் பின்னனி இசை திரைக் கதைக்குப் பலம் சேர்க்க, ரஜினிகாந்த் படங்களுக்கேயுரிய வேகத்தில் படம் பறக்கத் தொடங்குகிறது.
கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தால் நேர்த்தியாக செதுக்கப்பட்ட திரைப்படத்தில், ஆங்காங்கே வெளிப்படும் logic பிழைகளைக் கூட 3D கண்ணாடி மறைத்துவிடுகிறது. சுட்டுப் போட்டாலும் நடிப்பு வராத எமி ஜாக்சன் இந்த படத்திற்கு ஏன் ஷங்கர் தெரிவு செய்தார் என்ற மர்மத்தை நீங்கள் திரையில் பார்த்தே தெரிந்து கொள்ளுங்கள்.

தொடர்ச்சி 08 ம் பக்கம்.



07ம் பக்கத் தொடர்ச்சி





எந்திரன் படத்தில் வரும் வசீகரனை விட, 2.0ல் வரும் வசீகரன் நிறையவே வசீகரிக்கிறார். சிட்டி மீண்டும் வரும் காட்சிகளும் கெட்ட சிட்டியின் பஞ்ச் வசனங்களும் என்று ரஜினிகாந்த்தின் அனைத்து அவதாரங்களிற்கும் 2.0 ஆங்காங்கே களம் அமைத்து தந்திருக்கிறது.

2.0 படத்தில் மிகவும் அதிசயக்க வைத்த விடயம் அக்ஷய் குமாரின் இயல்பான ஆனால் மிரட்டும் நடிப்பு தான். ரஜினிகாந்திற்காக ஒருமுறை 2.0 பார்க்கலாம் என்றால், அக்ஷய் குமாரிற்காக இன்னொரு முறை பார்க்க வேண்டும்.

திரைக்கதைக்கு வலுச்சேர்க்கும் வலிய வசனம் எழுத சுஜாதா மட்டும் இருந்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்ற கேள்வி எழுவதை மட்டும் ஷங்கராலும் ஜெயமோகனாலும் தவிர்க்க முடியவில்லை.

நடிகர்களின் நடிப்பாற்றலையும் தொழில்நுட்பக் கலைஞர்களின் கைவண்ணத்தையும் மிஞ்சி, பிரவாகம் எடுத்து நிற்பது இயக்குனர் ஷங்கரின் கற்பனையும், அந்தக் கற்பனைக்கு திரைவடிவம் கொடுக்க அவர் செலவழித்திருக்கும் மனிதர்களின் உழைப்பும் Lycaவின் முதலீடும் தான்.

Zee TVயிற்கு அளித்த பேட்டியில் "சிவாஜி திரைப்படம் ஷங்கர் இயக்கிய ரஜினிகாந்த் படம், எந்திரன் என்பது ரஜினிகாந்த் நடித்த ஷங்கர் படம், அப்படியென்றால் 2.0?" என்று அர்ச்சனா கேட்ட கேள்விக்கு ரஜினிகாந்த் "2.0 வந்து சுபாஸ்கரனின் படம்" என்பார்.

500 கோடி இந்திய ரூபாய்களிற்கு மேல் 2.0 என்ற திரைப்படத்தில் முதலீடு செய்து, இந்திய திரைத்துறையில் மைல்கல் பதித்த Lyca நிறுவன உரிமையாளர் ஒரு ஈழத்தமிழர் என்பது நமக்கெல்லாம் பெருமை தான்.

அதேவேளை, இந்தியாவில் தயாராகும் ஒரு தமிழ் திரைப்படத்தில், risk எடுத்து, 500 கோடிக்கு மேல் முதலீடு செய்ய முன்வந்த ஒரு ஈழத்தமிழ் முதலீட்டாளனை, நமது தாயகத்தில் தொழில்வாய்ப்புக்களை வழங்கவில்ல ஒரு வியாபார முயற்சியில் முதலீடு செய்து, நமது மக்களின் வாழ்வை மேம்படுத்த நம்மால் இன்னும் முடியாமல் இருப்பது வேதனையளிக்கிறது.

Lycaவைப் போல், புலத்தில் இன்று நம்மவர் நிறுவனங்களும் தனிநபர்களும் தங்கள் தங்கள் துறைகளில் கொடிகட்டிப் பறக்கிறார்கள். இவர்களில் அநேகமானோர் 1983ற்கு பின்னர், இனக் கலவரங்களாலும் யுத்தத்தாலும் புலம்பெயர்ந்தவர்கள்.

தாய் மண்ணின் மணம் மறவாதவதவர்கள், விடுதலை வேண்டி வேள்வி செய்த தன்னினத்திற்கு தானும் ஏதாவது செய்து விட வேண்டும் என்ற தீராத அவா உடையவர்கள், ஆயுதப் போராட்டத்திற்கு நிதியாதாரமும் moral ஆதரவும் அள்ளி அள்ளி அளித்தவர்கள், தங்களது தாய் மண்ணின் மகத்துவத்தை மீண்டும் கொண்டுவர தாங்களும் பங்காற்ற ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்ற ஆவலோடு காத்திருக்கிருப்பவர்கள்.

யுத்தம் முடிந்து பத்தாண்டுகள் கடந்தும், கடந்த நான்காண்டுகளில் நாமே நமது வடமாகாண சபையை நடாத்தியும், 2015ல் தெற்கில் ஒரு புதிய ஆட்சியை நிறுவ பக்க பலமாக நின்றும், வந்த அந்த நல்லாட்சி ஆட்டம் காணும் போதெல்லாம் முண்டு கொடுத்தது நின்றும், ஏன் நேற்றுக் கூட ரணிலின் ஐதேக கட்சி ஆட்சிக்கு வர சத்தியக் கடதாசியில் ஆதரவளித்து நிற்கின்ற போதும், புலத்தில் இருக்கும் நமது புலம்பெயர் மக்களின் நிதி மற்றும் மனித வளங்களை நமது தாயகத்தில் அல்லல்படும் தமிழ் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு பயன்படுத்த வல்ல ஒரு பொறிமுறையை (mechanism) ஏற்படுத்த முடியாமல் இருப்பது வேதனையளிக்கிறது.

புல்லினங்காள் படும்பாட்டை படமாக்க ஐந்நூறு கோடி இந்திய ரூபாய்கள் முதலீடு செய்ய முன்வந்த நம்மினத்தவன், போரின் சிதைவுகளில் துவண்டு போய் இருக்கும் தன்னினத்தவனின் வாழ்வை மேம்படுத்த ஒரு வாய்ப்பு வழங்கினால் பறந்து வராமலா போய் விடுவான்?

"பொற்கால கதிரொளியை
சிறகசைத்து வரவேற்பாய்
பெண் மானின் மரக் கிளையை
தொட்டணைத்து தூங்க வைப்பாய்
சிறு காலின் மென் நடையில்
பெருங் கோலம் போட்டு வைப்பாய்
உனைப் போல பறப்பதற்கு
எனை இன்று ஏங்க வைப்பாய்
புல்லினங்காள் ஓ புல்லினங்காள்
உன் பேச்சரவம் கேட்டு நின்றேன்"



என்ற காலஞ்சென்ற கவிஞர் நா. முத்துக்குமாரின் வரிகள் தாயக உறவுகளிற்கும் புலம்பெயர் தமிழர்களிற்குமிடையிலான ஒரு உரையாடலைப் போலவும் இருக்கிறதல்லவா?




அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# பொங்கலுள் புதைந்துள்ள விவசாயம் !



குழந்தையின் மனதில் மகிழ்ச்சிப் பொங்கல், இளையோரின் மனதில் இன்பப் பொங்கல்,பெரியோரின் மனதில் பூரிப்புப் பொங்கல்.

இன்று தாய்த் தமிழ் உறவுகளின் தமிழர் திருநாளாம் தைப் பொங்கல். உலகில் உள்ள ஒவ்வொரு கொண்டாட்டத்திலும் உணவு உண்டு, ஆனால் உணவுக்காக மட்டும் கொண்டாடும் ஒரு கொண்டாட்டம் இந்தப் பொங்கல். விவசாயியின் விமரிசையான திருவிழா. "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச், சான்றோன் எனக்கேட்ட தாய்." என்பதை போன்று தான் பயிரிட்ட பயிரை பார்த்து கொலுவிடும் கொண்டாட்டம்.

உலகில் கோடிக்கணக்கான பிள்ளைகளை பெற்ற ஒரே தந்தை ஒரே தாய் எங்கள் விவசாயி மட்டுமே. அவனின் ஆனந்தத்தை எவராலும் உணரமுடியாது. ஒரு தாய் பிள்ளை ஈன்றெடுக்கும் போது இருக்கும் வலியையும் சுகத்தையும் அவள் மட்டுமே உணர்வாள். அதே போன்ற உணர்வை, விவசாயியின் அந்த உணர்வை நாமும் உணரவே இந்த பொங்கல் திருவிழா. ஆனால் அந்த விவசாயி அவன் இன்பத்தை மட்டுமே எம்மோடு பகிர்கின்றான் அவன் பட்ட துன்பத்தை அவனுள் போட்டு மறைகின்றான். அப்படிப்பட்ட விவசாயியை வணங்கி, இந்தப் பொங்கலின் காரணத்தைப் பார்ப்போம் வாருங்கள்.

விவசாயி பொங்கலிடும் அழகே தனி, விவசாயம் செய்வதைப் போலவே பொங்கலிடுவான். ஆம் விவசாயம் செய்வது எப்படித் தெரியுமா? இயற்கை உரத்தை மண்ணிற்கிட்டு அங்கு பூச்சி புழுக்களை வரவளைத்து மண்ணைப் பதப்படுத்துவான். அதே போல வீட்டின் முற்றத்தில் அரிசிமாவால் கோலமிட்டு, தான் உண்ணமுன் தன் உணவு தயாராகும் முன்பே மண்ணில் உள்ள சிற்றுயிர்களுக்கு உணவளித்து நன்றி சொல்லிவிட்டு அந்த கோலத்தின் மத்தியில் மண்பானையில் பொங்கலிடுவான்.

ஏன் அந்த மண்பானை என்றால், விவசாயத்திற்கு முதலில் முக்கியமானது வயல் நிலம், அந்த வளமான வயலைத் தரும் பூமாதேவியை மறக்காமல் நன்றி சொல்லவே மண்ணில் பானை செய்கின்றான். அந்த விவசாய நிலத்தில் உழுவதற்காக நீரை பாச்சுவது போல மண்பானையுள் தண்ணீர் விட்டு சமையலைத் தொடங்குகின்றான். இப்போது ஒரு சந்தேகம் இயல்பாக வரும்,



சிந்தனை சிவவினோபன்

தாயான பூமியில் தீயாலே சுடுவதேன் என்று, தாயின் மார்பில் பால் குடிக்கும் குழந்தை தாயை எட்டி உதைப்பது போல், மார்பை வெட்டிக் கடிப்பது போல், மனிதன் தான் வாழத் தீ மூட்டுவான். அதை தாய் பொறுத்துத் தாங்கிக் கொள்வாள். இதில் விவசாய உவமையும் உண்டு, விளைநிலத்தை வளப்படுத்தவும், அதில் தீமைதரும் மண்மேல் வாழ் நுண்ணுயிர்கள் அழிந்திடவும், வைக்கோற்பற்று என்று ஒரு விவசாய முறையும் உண்டு. வயலில்த் தீ மூட்டி நிலத்தைப் பண்படுத்தும் முறை. அதை உவமிக்கும் வண்ணம் பானையின் அடியில் தீமூட்டுவான் விவசாயி.

அடுத்து பானையில் பாலை ஊற்றுகின்றான். பால் விதை நெல்லை போன்று தூய்மையானது. மண்ணில் விதையைப் போடுவதைப் போல மண்பானையில் பாலையிட்டு பணிவாகக் காத்திருப்பான், பால் பொங்கி மேல்சாயும், எப்படித் தெரியுமா? பயிரிட்ட விதைகளில் பயிருண்டாகி கதிர்வந்து வளைந்து நிக்குமே அதேபோல பாலும் பானையில் வளைந்து வழியும், அந்த அழகைப் பார்த்த விவசாயி சூரியனுக்கு நன்றி சொல்லும் வகையில் அண்ணாந்து பார்த்து பொங்கலோ பொங்கல் என்று கத்தி மகிழ்வான்.

இப்போது அவனின் சொத்து அந்த நெற்கதிராகி வரும் அரிசி, அதன் மூலம் அவனுக்கு கிடைக்கும் எண்ணற்ற மகிழ்ச்சி பூரிப்பு இன்பம் என்று அனைத்தையும் உவமிக்கும் விதமாக பொங்கிய பொங்கல்ப் பானையில் அரிசியிட்டு அவியவிட்டு அதைத் தொடர்ந்து சர்க்கரை இனிப்பு பருப்பு என்று அனைத்தையும் இட்டு சமைத்து எடுத்து தன் இன்பத்திற்குக் காரணமானவன் சூரியன், சூரியனின் கதிர்களில் தான் இந்த இயற்கையே உருவானது என்று நன்றி சொல்லும் விதமாக சூரியனைப் பார்த்து படைத்து குடும்ப உறவுகள் அனைவரோடும் சேர்ந்து வீழ்ந்து வணங்கி கொண்டாடும் கொண்டாட்டமே இந்தப் பொங்கல்க் கொண்டாட்டம் ஆகும்.

பானை இல்லாமலும் பொங்கலாம். - நெருப்பைப் பற்ற வைக்காமலும் பொங்கலாம். - நெல் ஆலை இல்லாமல்ப் பொங்குமோ? - நல்அரிசி இல்லாமல்ப் பொங்குமோ?










## Dr.நிரோஷனின் அதிசய உலகம்

அம்மா மார்கள் அவர்களின் பிள்ளைகளை அல்லது பேரப்பிள்ளைகளை „என் தங்கம்“ என்று கூப்பிடுவதை நிச்சயமாகப் பார்த்திருப்பீர்கள். எனது அம்மா என்னை இன்று கூட அப்படித் தான் அழைப்பார். அதே போன்று „தங்கமே உன்னைத் தான் தேடி வந்தேன் நானே“ என்று பாடல் வரிகள் கூட இருக்கின்றன. ஆனால் இப்படி தங்கம் தங்கம் என்று ஒருவரை அழைக்கின்றோமே, இந்த விஷயத்தில் எவ்வளவு உண்மை அடங்கி இருக்கின்றது என்பதை எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா? அடடா, இது என்னடா வழக்கம் போல் மர்மமாகப் பேச ஆரம்பித்து விட்டேன் என்று யோசிக்கின்றீர்களா? சரி சரி கவலையை விடுங்கள். நானும் தங்கம் தான், அதே போல் நீங்களும் தங்கம் தான். இதற்குப் பின்னால் அப்படி என்ன தான் மர்மம் இருக்கின்றது என்பதை நீங்களும் அறிய விரும்பினால் கண்டிப்பாக தொடர்ந்து படியுங்கள்.

உங்களுக்கு ஒன்று தெரியுமா? நாம் அனைவரும் இந்த உலகில் பிறக்கும் பொழுதே நமக்கு சொந்தமாகக் கொஞ்சம் தங்கத்தையும் எடுத்துக் கொண்டே வருகிறோம்! ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், நமது உடலில் 0,0002 கிராம் தங்கத் துகள்கள் உள்ளன. இதில் பெரும்பான்மையான தங்கத் துகள்கள் நமது இரத்தத்தில் தான் கலந்து இருக்கிறது. எனவே, இரத்தத்தில் கலந்திருக்கும் தங்கத் துகள்களை வைத்து நீங்கள் ஒரு 8g கொண்ட தங்கக் கட்டியை செய்யப் போகின்றீர்கள் என்றால், அதற்குச் சுமார் 40,000 மக்களின் இரத்தத்தை உறிஞ்சி எடுத்தால் தான் முடியும். எனவே, தயவு செய்து அப்படி ஒன்றமே செய்துவிடாதீர்கள் நண்பர்களே!

மனித உடலில் மட்டும் இல்லை, வேறு எதிர்பாராத இடங்களிலும் கூட தங்கத்தைக் கண்டுபிடிக்கலாம். டக்லஸ் பிர் (Douglas Fir) மற்றும் கனிசக்கில் (Honeysuckle) போன்ற சில தாவரங்கள், மண்ணிலிருந்து தங்கத்தை உறிஞ்சி எடுக்கிறது. ஆனால் இந்தத் தாவரங்களில் இருந்து தங்கத்தைப் பிரித்தெடுப்பது என்றால் அது மிகவும் கஷ்டமான விஷயம். அப்படித் தங்கத்தைப் பிரித்து எடுப்பதற்குத் தேவைப்படும் பணம், அதில் இருக்கும் தங்கத்தின் பெறுமதியை விட அதிகமானது. எனவே இந்தத் தாவரங்களில் இருந்து தங்கத்தை பிரித்தெடுப்பதில் ஒரு லாபமும் கிடையாது. ஆனால் உங்களுக்கு ஒன்று தெரியுமா? உலகிலேயே அதிகமாகத் தங்கத்தைக் கொண்ட சுரங்கம், கடல் தான். கடலில் 2 கோடி டன் கும் மேல் தங்கத் துகள்கள் அங்கும் இங்கும் என்று பரவி மிதந்து கொண்டே இருக்கின்றது. ஆனால் என்ன, அந்தக் கடல் நீரில் உள்ள தங்கத்தை பிரித்தெடுப்பது மிகவும் கஷ்டம். எனவே அதில் எங்களுக்கு ஒரு லாபமும் கிடைக்காது.
என்ன நண்பர்களே, நானும் தங்கம், அதே போல் நீங்களும் தங்கம் தான் என்று நான் ஆரம்பத்தில் சொன்னது சரி தானே? இந்த விஷயம் ஆச்சரியமாக இல்லையா?

விமானத்தில் பறக்கும் பொழுது நிலநடுக்கத்தை உணர முடியுமா?

வெளிநாடொன்றுக்கு உல்லாசப் பயணம் போவதற்காக ஒரு விமானத்தில் போகின்றீர்கள் என்று எடுத்துக்கொள்ளுங்கள். பொதுவாக பயணிகளைக் கொண்டு செல்லும் ஒரு விமானம் 10 கிலோ மீட்டர் உயரத்துக்கும் மேல் பறக்கும். அப்படிப் பறந்து போகும் பொழுது, திடீரென்று பார்த்தால் கீழே, நில நடுக்கம் ஏற்படுகின்றது. அப்படி ஏற்பட்டால் என்ன நடக்கும்? விமானத்தில் பறக்கும் உங்களால் அந்த நில நடுக்கத்தை உணர முடியுமா? அட… உணர முடியுமா என்கிற கேள்வியை விட, அந்த நில நடுக்கம் விமானத்துக்கு ஏதும் பாதிப்பை ஏற்படுத்துமா? இதைப் பற்றி எப்பொழுதாவது சிந்தித் துப்பார்த்திருக்கின்றீர்களா? இல்லையா? சரி பரவாயில்லை, அதுக்கு தானே நான் இருக்கிறேன். இந்தக் சுவாரசியமான கேள்விக்குப் பதிலை நீங்களும் அறிய விரும்பினால், கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.



விமானத்தில் பறக்கும் பயணிகளால் ஒரு நில நடுக்கத்தை உணர முடியுமா? இதற்குப பதில் தெரிய முதல், பூமி எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பார்ப்போம். நமது பூமியில் நிலம் மற்றும் மலைகள் மட்டும் இல்லை, அதைத் தொடர்ந்து பரந்துவிரிந்த கடல்களும், பல்லாயிரம் கிலோ மீட்டருக்கும் உயர்ந்த புவியின் வளிமண்டலமும் நான்கு புறமும் சூழ்ந்திருக்கிறது.

உங்கள் எல்லோருக்கும் தெரிந்தது போல், பூமியின் அடியில் நடுக்கம் ஏற்படும் பொழுது, அதன் அதிர்ச்சி அலைகள், கடல் அடி மட்டத்தைத் தாக்குவதால், பூமிக்கு மேலே அலைகள் சுனாமியாய் எழுகின்றன. இப்படி இருக்கும் பொழுது, ஏன் இந்த அதிர்ச்சி வளி மண்டலத்தை எட்டக் கூடாது?

பொதுவாக ஒரு பூகம்பம் ஏற்படும் பொழுது இரு வகையான அலைகள் தோன்றும். ஒன்று P அலை அதாவது Primary அல்லது Pressure அலை, இரண்டாவது S அலை, அதாவது secondary அலை. இந்த இரு வகை அலைகளிலும் உள்ள விசேஷம் என்ன தெரியுமா? P அலைகள் ஒரு பிரச்சனையும் இல்லாமல், திடப் பொருள், நீர்மம் மற்றும் வாயு ஆகிய அனைத்தின் ஊடாகவும் செல்லக்கூடியது, ஆனால் S அலைகளால் திடப் பொருள் ஊடாக மட்டும் தான் செல்ல முடியும். எனவே, கடலின் அடியில் ஏற்படும் நிலநடுக்கத்தினால் ஏற்படும் இந்த இரு வகை அலைகளிலும் நிலம் ஆகிய திடப் பொருளைக் கடந்து, கடலுக்குள் செல்லக்கூடியது P அலைகளால் மட்டும் தான். அப்படி கடலூடாகச் செல்லும் இந்தப் P அலைகள் கடைசியில் வளிமண்டலத்துக்குள் நுழையும். ஆனால் அப்படி நுழையும் போது, என்ன நடக்கும் தெரியுமா? அந்தப் P அலைகள், ஒலி அலைகளாக, அதாவது sound wavesஆக மாறிவிடுகின்றன.
ஆனால் இந்த ஒலி அலைகளின் அதிர்வெண், அதாவது கசநநுரநெஉல 20 HzF கீழே உள்ளதால் மனிதர்களால் அந்த ஒலியைக் கேட்க முடியாது. இப்படி 20HzF கீழே உள்ள ஒலியை ஆங்கிலத்தில் infrasound என்றும் அழைப்பார்கள். சரி பரவாயில்லை, இந்த ஒலியை நம்மால் கேட்க முடியும் என்றே எடுத்துக்கொள்வோம். அப்படி இருந்தாலும், இந்த ஒலி வாயு மண்டலத்தைக் கடந்து மேலே பறந்துகொண்டு இருக்கும் விமானத்தை அடைந்தாலும் கூட, அதன் சத்தம் குறைந்து தான் அடையும். அது ஏன் என்றால் அந்த ஒலி புவியின் நிலத்தில் இருந்து 10 kmF மேல் மேல்நோக்கி செல்லவேண்டும். அப்படிச் சென்று விமானத்தை அடையும் infrasound கடைசியில் விமானத்தின் விசையாழி, அதாவது Turbinesஇன் பலத்த ஒலியால் முற்றிலும் அடக்கப் படுகின்றது.
எனவே பூமியில் நில நடுக்கம் ஏற்பட்டால், அதன் விளைவை நம்மால் ஒரு விமானத்தில் இருக்கும் போது உணரவோ, அல்லது கேட்கவோ முடியாது. அவ்வளவு தான்!
சரி நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள்! இந்த விஷயம் உங்களுக்கு முன்பே தெரியுமா? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!





Dr IN

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்





# உருளைக் கிழங்கு நல்ல உணவா?
# நீரிழிவு உள்ளவர்களும் சாப்பிடலாமா

உருளைக் கிழங்கு நல்ல உணவா?
நீரிழிவு உள்ளவர்களும் சாப்பிடலாமா

பெருமையடித்துக் கொண்டார் அந்தப் பெண்மணி.

“கிழங்கை இவருக்கு நான் கண்ணிலையும் காட்டிறதில்லை. பாவம் விருப்பம்தான் ஆளுக்கு. நான்தான் அவற்ரை வாயைக் கட்டிப் போட்டன்”

வழமையான செக் அப்பிற்கு வந்தபோது அவருடைய இரத்த சீனியின் அளவு நல்ல கட்டுப் பாட்டில் இருப்பதாக திருப்தியடைந்து மகிழ்ச்சி யுடன் பாராட்டினேன்.

உருளைக்கிழங்கு கொடுக்காத தன்னுடைய கெட்டித்தனத்தால்தான் அவ்வாறு நடந்தது என பெரிய கடகத்தில் புகழைத் தன் தலையில் சுமந்து கொண்டார்.

நொட்டைச் சாப்பாடுகளைத் தவிர்த்து காய்கறி பழவகைளை அதிகம் சாப்பிட்டும், வாசிகசாலைத் திண்ணையில் குந்தியிருந்து அரட்டை அடிப்ப தைத் துறந்து கடற்கரை வரை நடைப் பயிற்சி செய்தும் அவர் செய்த சுய முயற்சிகள் யாவும் அவளது பெருவாயால் தூர்வாரி மூடப்பட்டன.

”நிலத்திற்கு கீழே விளையுறதுகளை கண்ணி லையும் காட்டக் கூடாது என்று டொக்டர் சொன்னதை நான் மறக்கிறதே இல்லை” என்றார் மற்றொருவர். கரட், உருளைக்கிழங்கு, வத் தாளை, கரணை, மரவெள்ளி, பனங்கிழங்கு, இவை யாவுமே நிலத்தின் கீழ் விளையும் கிழங்குகள்தான். ராபு, நோகோல், கரட், பீட்ரூட், இவையும் அவ்வாறுதான் மண்ணுள் விளைப வைதான்.

அந்த டொக்டர் மண்ணுக்கு கீழ் போய் எவ்வளவு காலமோ தெரியாது. அந்தக் காலத்தில் இருந்த மருத்துவ மற்றும் விஞ்ஞான அறிவைக் கொண்டு அவர் சொல்லியிருக்கக் கூடும் அல்லது இவர் தவறாக அர்த்தப்படுத்தியிருப்பார். ஆனால் இன்றும் அப்படியா?

## உருளைக் கிழங்கு

உலகில் மிக அதிகமாகப் பயிரிடப்படும் உணவு வகைகளில் உருளைக் கிழங்கு முன்னணியில் நிற்கிறது. பருவகால வேறுபாடுகளைக் கடந்து வருடம் பூராவும் உலகெங்கும் விற்பனைக்குக் கிடைக்கிறது. இதற்குக் காரணம் எல்லாத் திசைகளிலும் இது விளைவிக்கப்படுவதே ஆகும்.

தாவர வர்க்கத்தில் இது தக்காளி, கத்தரி, மிளகு போன்றவற்றின் இனத்தைச் சேர்ந்தது. சரியான பருவத்தில் இதை கிண்டி அறுவடை செய்யாது விட்டால் அது வளர்ந்து பூத்துக் காய்த்து தக்காளி போன்ற ஒரு பழத்தைத் தரும்

அவ்வாறு பூத்துக் காய்ப்பதற்கு தேவையான சக்தியை வழங்குவதற்காக தனது கிழங்கில் சேர்த்து வைக்கிறது. ஆனால் நாம் கிழங்கு நல்ல பருவத்தில் இருக்கும்போது கிண்டி எடுப்பதால் அதன் வாழ்க்கைச் சக்கரம் பூர்த்தியடைவதைத் தடுக்கிறோம்.

அவ்வாறு பூத்துக் காய்ப்பதற்கு தேவையான சக்தியை வழங்குவதற்காக தனது கிழங்கில் சேர்த்து வைக்கிறது. ஆனால் நாம் கிழங்கு நல்ல பருவத்தில் இருக்கும்போது கிண்டி எடுப்பதால் அதன் வாழ்க்கைச் சக்கரம் பூர்த்தியடைவதைத் தடுக்கிறோம்.

## உருளைக் கிழங்கின் போசாக்கு

உருளைக் கிழங்கு முக்கியமான ஒரு மாப் பொருள் உணவாகும். அரிசி, கோதுமை போன்ற வையும் மாப்பொருள் உணவுகள்தான்.

தொடர்ச்சி 30ம் பக்கம்



# மனைவி வீட்டில் இல்லாத போது ....



கௌசி

தாரத்தைத் தாய் வீடு அனுப்பிவிட்டு ஆண்கள் தமது வீட்டில் செய்யும் சின்னவீட்டுச் சில்மிசங்கள் பற்றியும் எமது தாயக கதைகள் பல பேசும். கட்டியவள் அருகே இருக்க காதலிக்குக் கண்ணடிக்கும் செய்கை பற்றியும் அது பேசும். ஆனால் இங்கே ஒரு தாரத்தை வைத்து சமாளிக்க முடியவில்லை. இதற்குள் இன்னொன்றை கட்டி மாய்க்க முடியுமா! என்று புலம்பெயர்ந்து வாழும் சில ஆண்கள் நினைப்பது இன்றைய கலாத்தின் சாரமாகிவிட்டது. அப்படி இருந்தும் எத்தனை வருஷம் தான் ஒரு முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது என்னும் சாட்டில் வேறுமுகம் தேடி தாரத்தையும் தன் பெயர் சொல்லப் பிறந்த வாரிசுகளையும் விட்டுப் போய் கடைசியில் அரசனை நம்பி புருஷனைக் கைவிடும் பெண்கள் நிலைபோல் போனவர்களது கதைகளும் புலம்பெயர்ந்த நம்மவர் கதைகளில் அடங்கும்..

ஆனால் இங்கு எழுதப் போவதோ, எப்போது மனைவி பேரப்பிள்ளைகளைப் பராமரிக்க பிள்ளைகள் வீட்டிற்குப் போவாள் என்றும், மனைவி எப்போது நண்பிகளுடன் சுற்றுலா போவாள் என்றும் காத்திருந்து அப்பாடா என்னுடைய கிடப்பில் கிடக்கும் வேலைகளை எல்லாம் அவள் வருவதற்குள் முடித்துவிட வேண்டும் என்று ஆயத்தமாகும் கணவன்மார் நிலை பற்றியே பேசப் போகின்றேன். பிள்ளையார் பிடிக்க பூதம் வந்ததுபோல் எதுவோ நினைக்க எதுவோ நடப்பததான் நிலையாகிவிடுகிறது.

மூக்குக் கண்ணாடியை மூக்கின் மேல் வைத்து விட்டு “இஞ்சப்பா கண்ணாடிய எங்கேயோ வச்சிட்டன் கண்டீரே” என்று கேட்கும் ஆண்களுக்கு “மண்டு மண்டு இங்கே பாருங்கள் மூக்கின் மேல் இருப்பது என்ன? என்று சுட்டிக்காட்டும் நிலை பற்றியும், வீட்டிற்கு வந்து Jacket கழட்டும்போதே குளிரிலே கைகால்களெல்லாம் விறைக்கிறது கொஞ்சம் கோப்பி போட்டுத் தாருமப்பா என்று சொல்லும் கணவன்மார்களும், இஞ்ச பாருமப்பா வட்டுக் கத்தரிக்காய் தமிழ்க் கடையில் வாங்கினேன். நல்லாப் பொரிச்சுக் குழம்பு வையுமேன். நன்றாக இருக்கும் என்னும் சுவைப்பிரியர்களும், இதிலே மடித்து வைத்த shirt ஐக் காணோம் கண்டனீரே? என்று கேட்கும் கணவன்மார்களும் தன்னுடைய மனைவி வீட்டில் இல்லை. வர நாளாகும் என்னும்போது என்ன என்ன சிக்கல்களை அனுபவிக்கின்றார்கள் என்று சிறிது, அலசுவோம்.

பெண் இல்லாத வீடு, வாளியில்லாத கிணறு என்று பல்கேரியன் பழமொழி சொல்லுகிறது. அவள் இருந்தால் இந்த வேலைகள் செய்து முடிக்க முடியாது. இப்போதுதான் ஓய்வு என்று நினைக்கின்ற கணவன்மார்கள், அவள் இருக்கும் போது முடித்திருக்கலாம் என்று முடிவில் எண்ணுவதே உண்மை. தாயிலே கெட்டவள் இல்லை, சாவிலே நல்லது இல்லை என்று தாம் தாயாகும் போது நினைக்கும் பிள்ளைகள் தமது தாயைத் தாம் வாழுகின்ற நாட்டுக்குத் துணைக்கு அழைப்பதும் தமது பிள்ளைகளை வளர்த்தெடுக்கத் தாயின் துணையைத் தேடுவதும் இப்போது புலம்பெயர் கலாசாரமாகிறது.

புலம்பெயர்வாழ்க்கையில் ஆரம்பத்தில் தனியே வாழ்ந்த ஆண்கள் திருமணத்தின் பின் கணவன் மனைவி என்று இருவராக வாழுகின்றார்கள். காலப்போக்கில் பிள்ளைகளைப் பெற்று பலராக வாழுகின்றார்கள். பின் படிக்க வைத்து வளர்த்தெடுக்க ஓயாது உழைத்து பிள்ளைகளுக்குத் திருமண வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்து மீண்டும் இருவராகின்றார்கள். அதன் பின் பேரப்பிள்ளைகளைப் பராமரிக்க மனைவி பிள்ளைகள் வீட்டிற்குச் சென்ற பின் ஆண்கள் தொடங்கிய இடத்திற்கே வருகின்றார்கள்.

புலம்பெயர்ந்து வந்தபோது வாழ்ந்த பிரமச்சரிய வாழ்வு மீண்டும் தொடங்குகின்றது. சமைக்கத் தெரியாத ஆண்கள் youtube உதவியுடன் சமையல் கற்கின்றார்கள். இஸ்திரி போடாத ஆடையை என்றுமே அணியாத ஆண்கள் கசங்கிய ஆடையை Jacket இனுள் மறைத்து அணிந்து செல்கின்றார்கள்.

அடுப்பிலே கறியை வைத்துவிட்டு தமது கடமையைச் செய்யப்போய் கருகிய உணவைப் பார்த்து, என்னசெய்வது என்று பொறுமையுடன் மீண்டும் சமைக்கும் பெண் குணம் சிறிதும் இன்றி, சட்டியைத் தூக்கி எறிந்துவிட்டு Pizzeria நோக்கி நடையைக் கட்டுகின்றார்கள். பிரியாணி உணவெல்லாம் மறந்து பாணும் மாஜரினும் வாய்க்குப் பழகிப் போகிறது. ஸ்பெயின் நாட்டின் பழமொழி ஒன்று சொல்கிறது. ஒரு மனிதனுடைய நல்ல அதிர்ஷ்டமும் துரதிஷ்டமும் அவனுடைய

சிறிது நாட்கள் பேரப்பிள்ளைகளை கவனிக்கச் செல்கின்ற மனைவி கணவனிடம் சொல்லுவாள், “பூமரங்களுக்கு மறக்காமல் தண்ணீர் வார்த்துவிடுங்கள்” என்று. ஆனால், அந்த மகானுக்கோ அந்த உயிர் இறப்பது பற்றி எந்தவித அக்கறையும் இல்லாமல், தொலைக்காட்சியில் பிரான்ஸ் இல் குண்டு வைத்துவிட்டார்கள், மிருகக்காட்சிச் சாலையில் குரங்கு இறந்து விட்டது என்பதைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருப்பார். மரங்காய்ந்து சருகு விழத் தொடங்க, அடப்பாவி இவள் வரப்போறாளே என்ன செய்வது என்று நீரூற்றும் அளவு தெரியாது, தொட்டித் தண்ணியை தொகையாய் ஊற்றி, லமினாட் நிலமெல்லாம் வடிந்து, அது தன்னுடைய பிடிமானத்தை விட்டுக் கிளம்பத் தொடங்கி, அதற்கு கவனம் எடுத்துத் தன்னுடைய ஒரு நிமிட வேலையை ஒரு வார வேலையாக்கி விடுவார்.

கண்ணுக்குக் குளிராக வீட்டை அழகு படுத்தி, அதற்குள் அலங்காரமாக இருப்பவளே பெண். ஆனால், இந்த அறிவு ஜீவிகளாகத் தம்மைக் கருதும் ஆண்கள், சுற்றிவரக் குப்பைகள் சுற்றியே இருந்தாலும் ஒழுங்குமாறிப் பொருட்கள் தடம் மாறிக் கிடந்தாலும், தன்னுடைய வேலை மட்டுமே முக்கியம் என்று இருந்துவிட்டு நாளைக்குப் பகல் 14.00 மணிக்கு மனைவி திரும்பி வரப்போகும் விமானம் தரை இறங்குகிறது என்றால், இந்த உத்தம புருஷன் கால்கள் தரையில் நிற்காது. Roborto வை மனசுக்குள் பூட்டிவிடுவார். மனைவி வரும் ஆனந்தம் அல்ல. அது ஆத்துக்காரி தரப்போகும் ஆலாபனத்திற்குப் பயந்த மனிசன் வீடு துப்பரவு, ஒழுங்கு படுத்தலில் காட்டும் கவனமேயாகும்.

தொடர்ச்சி 29 பக்கம்






# தொலைக்காட்சி தொடர் நாடகங்களும் தொலைந்து போன உறவுகளும்.






கரிணி

மனித மனம் என்பது எப்பொழுதும் புதிய புதிய விடயங்களை அறிந்துகொள்வதிலும், ஆராய்ந்து கொள்வதிலும் ஆர்வம் மிக்கதாகவே இருக்கின்றது. இதன் திறன் ஒவ்வொரு மனிதனின் தேடுதலுக்கும், ஆளுமைக்கும் தகுந்து விரிவடைந்து கொண்டே இருக்கின்றது. அத்தோடு மனது தனக்கு மிக பிடித்தமான விடயங்களையே பொழுது போக்கு அம்சமாகவும் கொண்டுள்ளது.

இந்த நூற்றாண்டில் எம்மவர்களின் பொழுது போக்கு அம்சமாக மிகப் பெரிய பங்கு வகிப்பதில் பெருமிடத்தை பிடித்ததில் ஒன்றுதான் இந்த தொடர் நாடகங்கள். இந்த தொடர் நாடகங்கள் மனித மனதில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி பலரை அதன்பால் ஈர்த்தும் வைத்திருக்கின்றது. அத்தோடு அழையா விருந்தாளியாக நாசூக்காக அனைவரின் வீட்டுக்குள்ளும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட்டது.

எப்படி இந்த நாடகங்கள் அவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது? அதன்பால் பலரை ஈர்த்துக் கொண்டு எவ்வாறு இந்த தொடர் நாடகங்களால் ஆளுமை செலுத்த முடிகின்றது?

பொதுவாக மனித மனம் எப்பொழுதும் பிறருடைய இரகசியங்களை தெரிந்து கொள்வதிலும், அவர்களின் தனிப்பட்ட வாழ்வை அறிந்துகொள்வதிலும், பெரும் ஆவல் கொண்டிருக்கும் அதேவேளை இன்னொரு மனிதனோடு தன்னை ஒப்பிட்டு பெருமைப்பட்டு கொள்ளவும், கர்வம் கொள்ளவும் அது ஆவல் கொள்ளும். இன்னொருவரின் துன்பத்தில் சுகம்காணும், அவர்களை போல் தானில்லை என்று தேற்றிக்கொள்ளும். அவர்களுக்கு நன்மை செய்து, ஆறுதல் கூறி தன்னுடைய கர்வத்தை அல்லது தனது நல் சுயமதிப்பீட்டை நிலைநாட்டும்.

இப்படியான பல பல மனதின் நோக்கங்களை நிறைவேற்றி அதற்கு தீனிபோடுவதே இந்த தொடர் நாடகங்கள். அவை வெறும் நடிப்பு என்று தெரிந்தும் அதனுடன் லயப்பட்டு அதை உண்மை என்றே நம்புவதுதான் மிகப் பெரும் சாபக்கேடாக இருக்கிறது. நாம் பிறரால் அல்லது குடும்ப உறவுகளால் வஞ்சிக்கப்படுகிறோமோ என்ற சந்தேகத்தை இலகுவில் விதைத்துச் செல்கிறது. எண்ணத்துக்கும் இலகுவில் அகப்படாத பல எதிர்மறையான தந்திரங்களை அதிகம் கொண்டவையாக இருக்கின்றன இந்த தொடர் நாடகங்கள்.

பொதுவாக மனித மனமானது பார்க்கின்ற, கேட்கின்ற, அனுபவிக்கின்ற விடயங்களை உள்வாங்கி உடலில் பல இரசாயன மாற்றங்களை நிகழ்த்துகின்றது. அதற்கேற்ப அதிர்வலைகளையும் வெளிப்படுத்துகின்றது. இந்நிலையில் இந்த தொடர் நாடகங்களில் வரும் அதிகப்படியான வில்லத்தனங்கள், எதிர்மறையான செயற்பாடுகள், ஆதீத சோகம் , சாபங்கள், அழுகுரல்கள் எல்லாம் பார்ப்பவர்களின் வீடுகளில் ஒலித்து செவி வழி சென்று அது மனதில் தாக்கத்தை ஏற்படுத்தி உண்மையிலேயே அவற்றை அனுபவித்தால் உடலின் இரசாயன மாற்றம் எவ்வாறு இருக்குமோ அதே மாற்றம் தானாகவே நிகழ்கிறது.

திரைப்படங்கள் குறுகிய மணி நேரத்திற்குள் முடிந்து விடுவதால் அந்த கதாபாத்திரங்களை விட்டு வெளியே வருவது மிக இலகுவாக இருக்கிறது.
ஆனால் தொடர் நாடகங்கள் அதை விட்டு வெளியேறிவிடக் கூடாது என்ற விடயத்தில் கவனத்தோடு செயல் புரிகின்றன. நாடகம் அன்றைய தினத்தில் முடிவடையும் போதே அடுத்த நாள் நடப்பது என்ன என்ற பதற்றத்தையும், எதிர்பார்ப்பையும் தந்துவிட்டுச் சென்றுவிடும். அந்தளவுக்கு பார்ப்பவர்கள் தங்களுக்கு பிடித்த கதாபாத்திரமாகவே மாறி விடுகின்றனர்.

இதனால் என்ன ஊர் வம்புகள் பேசாமல் இதற்குள்ளேயே அவர்கள் தொலைந்து போகட்டுமே என்று சொல்லியும் கொள்ளலாம், அதேவேளை சமூக அக்கறையான தொடர் நாடகங்களும் உண்டு தானே என்றும் கூறிக் கொள்ளலாம், அதை வலியுறுத்தி அதனுடைய நன்மைகளை பற்றியே மிகப் பெரும் ஆய்வு கட்டுரையும் எழுதியும் விடலாம்.

இன்றைய நிலையில் இந்த தொலைக்காட்சி தொடர்கள் பல குடும்பங்களின் பிளவுகளுக்கு முக்கிய காரணமாக இருந்து வருகின்றது. அந்நேரங்களில் பல உறவுகள் புறக்கணிக்கப் படுகின்றன. அவற்றின் மாயாஜாலங்களில் தம்மைத் தொலைத்துவிட்டு தமது பெற்றோரோடு கூட பேசுவதற்கு நேரம் போதாமல் அடுத்தடுத்த தொடர்களை தேடி அங்கலாய்த்துக் கொண்டு வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர் பலர். இது தவிர பல களவுகளையும் மிக கடுமையான தந்திரங்களையும் தேடித்தேடி புதிது புதிதாகக் கண்டுபிடித்து கற்பித்து விட்டும் செல்கின்றன.

ஒரு உண்மையை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும் ஒவ்வொரு மனிதனுமே மிகப் பெரிய ஆற்றல் மிக்க மிக சிறந்த படைப்பு அவன் வாழ்நாளில் தன்னை தானே ஆராய்ந்து, அறிந்து, உணர்ந்து அவனுடைய வாழ்வை அவன் முழுமையாக வாழ்வதற்கே அவன் பிறவியின் காலம் மிக குறுகியதாக இருக்கிறது. இதை எம்மால் உணர்ந்து கொள்ள அல்லது சிறிதேனும் அறிந்து கொள்ள முடியாது போனால் இங்கு சொல்ல முயலும் விடயம் ஒருபொழுதும் புரியாது!

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் படிக்கப்படாத, பார்க்கப் படாத, உணர்ந்து கொள்ள பட வேண்டிய பல விடையங்கள் பொங்கி பிரவகிக்கும் பெரும் நீரூற்று போல் பொங்கி வழிந்து கொண்டே இருக்கிறது. இதன் சிறு துகளை பருகிக் கொண்டாலே போதும் அதன் பின் பல பழக்க வழக்கங்கள் மாறியே போகும்.







தொடர்ச்சி 27 பக்கம்




டோட்மூண்ட் நகரில்...
2 Year ANNIVERSARY
K.K.L
Textilien Schmuck Haushaltsware
2 ஆம் ஆண்டு நிறைவு மற்றும்
தைப்பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
50% இருந்து
70% வரை
விலைக்கழிவில்
12 & 14 தை 2019 - இருதினங்களும்
12 & 14 இரு தினங்களும்
100€ கொள்வனவு செய்யும்
ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
நிச்சயம் பரிசுப்பொருள் உண்டு.
சாறி, சாறி பிளவுஸ்
பஞ்சாபி, சேட்,குர்தா
சிறுவர்களுக்கான
ஆடைகள், அனைத்தும்
வீட்டு சமையல் உபகரணங்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
சுப வைபவங்கள்
அனைத்திற்கும்
இந்தியாவில்
இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
மல்லிகைப் பூமாலை,
கல்யாண மாலை
இங்கு கிடைக்கும்.
சாறி
பிளவுஸ்
தைத்து
தரப்படும்
இமிற்ரேஷன்
நகைகள்
அனைத்தும்
30 % கழிவு
விலையில்
அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
Rheinische str.56 - 44137 Dortmund Tel: 0231 96 98 6610
https://m.Facebook.com
kkl.textillenschmuck

சிறுகதை

சுருதி



# ஹோட்டல் சாப்பாடு

பாபுவின் பிள்ளைகள் ஹோட்டலில் ஒருபோதும் சாப்பிட்டதில்லை. பள்ளிக்கூடத்தில் நண்பர்கள், “நான் மலேசியா றெஸ்ற்றோரண்டில் சாப்பிட்டேன்... நான் சைனீஷில் சாப்பிட்டேன்.... நான் கொரியனில் சாப்பிட்டேன்” என்று சொல்லும்போது அவர்கள் வாய் ஊறும்.
“ஹோட்டல் சாப்பாடு உடம்புக்கு ஆகாது. ஒரே கொழும்பு” என்று சொல்லுவார் தந்தை பாபு. சமயத்தில் சில ஹோட்டல் வீடியோக்கிளிப்புகளையும் எடுத்து விடுவார். அது ஹோட்டல் வண்டவாளங்களையெல்லாம் புட்டுப் புட்டு வைக்கும்.
மனைவி சித்திரா ஒரு அப்பிராணி. ஏதோ ஹோட்டல் சாப்பாடு தனக்கும் ஒத்துவராது என்பதுமாப்போல் இருந்துவிடுவாள்.
ஒருநாள் பாபுவின் மனம் கல்லுக்குள் ஈரம் என்பதுமாப் போல் இளகியது. எந்த ஹோட்டல் நல்லது என நெட்டில் உசாவினார்.

“அப்பா... தாய்” என்றால் மகள். “தோசா கட்” என்றாள் மனைவி. சித்திராவின் எத்தனைநாள் ஆசை அது. கேட்க நினைத்து அடக்கி வைத்த ஆசைகளில் அதுவும் ஒன்று. இரண்டு பையன்களும் எதுவும் சரி என்று பேசாமல் இருந்தார்கள். கடைசியில் 'கோல்டன் லீவ்' என்ற சைனீஸ் ரெஸ்ற்ரோரன் செல்வது என முடிவு செய்தார்கள். 'தங்க இலை' என்ற அந்த சாப்பாட்டு விடுதியை நெட்டில் தேடினார் பாபு. அதன் விலைப்பட்டியலைப் பெற்றுக் கொண்டார். இருவர் சாப்பிட குறைந்தது 38 டொலர்கள் போதும். நூறுக்குள் அமுக்கிவிடாலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டார்.

எல்லோரும் புறப்படத் தயாரானார்கள். ரெஸ்ற்ரோரண்டில் வர்ணவிளக்குகள் பளிச்சிட்டன. விளக்கு வெளிச்சத்தில் எவரைப் பார்த்தாலும் அழகாகவே தென்பட்டார்கள். அவர்கள் முன்னே காட்சி தரும் சாப்பாட்டு வகைகளும் அப்படியே.
முன் தொட்டிக்குள் உயிருள்ள மீன்கள் நண்டுகள் லொப்ஸ்ரர்கள் அசைந்தன. மகள் தன் மொபைல்போனிற்குள் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டாள். தொட்டி முன்னே ஷெல்பி எடுத்துக் கொண்டார்கள். வட்டவடிவ மேசை ஒன்றில் அமர்ந்து கொண்டார்கள். 'மெனு'க் காட்டை நோண்டியபடி இருந்த பாபுவின் முகம் திடீரெனக் கறுத்தது. அழகான பெண்ணின் முகத்தில் ஒரு கருப்பு மச்சம் இருப்பது போல் சித்திராவிற்கு பாபு தென்பட்டார். பாபு அங்கு உலாவிய பரிசாரகர் ஒருவரைக் கூப்பிட்டு, தான் நெட்டில் பார்த்த சாப்பாட்டின் விலை, மெனுக்காட்டில் இரட்டிப்பாக இருப்பதாகச் சொன்னார். பரிசாரகர் பாபுவை அமைதி காக்கும்படி கூறிவிட்டு காசு வாங்கும் கல்லாவிற்குப் போய் உள்ளே விசாரித்தார். போன வேகத்தில் திரும்பிய பரிசாரகர், “அது சேர் பழையது. கடந்த இரண்டு வருடங்களாக வெப்பை அப்டேட் செய்யவில்லை. எல்லாம் விலையேறிவிட்டது” என்று சொன்னார். அவருக்கு நன்றி சொல்லிவிட்டு 'மெனு'க் காட்டை மீண்டும் ஆராய்ச்சி செய்தார் பாபு.

திடீரென்று மேசையை விட்டு எழுந்தார் பாபு. பரிசாரகன் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தான்.
“அம்மாவிற்கு சீரியஸ் என்று ரெலிபோன் கோல் வந்தது. அம்மாவை அம்புலன்ஸில் ஹொஸ்பிற்றல் கொண்டு போய்விட்டார்கள். நாங்கள் இன்னொருநாள் வருகின்றோம்” சொல்லியபடி ஹோட்டலை விட்டு வெளியேறினார் பாபு. அப்படியொரு அம்மா இல்லை என்பதை ஏலவே தெரிந்திருந்த மனைவியும் பிள்ளைகளும் அவருக்கு முன்னாலே ஹோட்டலை விட்டு வெளியேறி வாசலில் காத்திருந்தார்கள். தங்க இலையை அன்று அவர்கள் காணாதது அவர்களுக்கு மனவருத்தத்தைக் கொடுத்தது.

“நான் ஒரு நல்ல ஐடியா வைத்திருக்கின்றேன். உங்கள் எல்லாரையும் இப்படியே ஒரு இரவு மார்க்கெட்டிற்குக் கூட்டிப் போகப் போகின்றேன். ஹோட்டல் சாப்பாட்டின் விலையை விட கால்வாசிக்கு சாப்பாடு செய்யும் விதத்தில் அங்கே பொருட்களை வாங்கலாம். விதம் விதமாகச் சமைத்துச் சாப்பிடலாம். காசும் மிச்சம். உடம்புக்கும் ஹெல்தி” சொல்லியபடியே காரை முடுக்கினார்.
அப்படியே இரவு மார்க்கெட்டும் வர்ணவிளக்குகளில் ஜொலித்தது. அங்கும் மக்கள் அழகாகவே தென்பட்டார்கள். அழுகிய மரக்கறிகளும் அழகாகத் தென்பட்டன. ஒரே ஆரவாரம். ஆட்டிறச்சி, விதம் விதமான மீன் வகைகள், முயல், கோழி, நண்டு, கணவாய் அது இது எண்டு எல்லாவற்றையும் வாங்கினார். நூறு டொலர்கள் வர வாங்குவதை நிற்பாட்டினார். மனைவி வாய் திறக்கவில்லை. எத்தனை வருடங்கள் திறக்காத வாய் அது?

“அப்பா... இதுகளையெல்லாம் ஆர் சமைக்கிறது?” மகள் கேட்டாள்.
“ஏன் ... அம்மாதான்.”
“அம்மாவுக்கும் றெஸ்ற் வேணும். ஒருநாளாவது சமையல் மிச்சமெண்டுதானே ஹோட்டலுக்கே வந்தனாங்கள்.”
“நானும் உதவி செய்கின்றேன்”
“நீங்கள் பாத்திரங்கள் மாத்திரம்தான் கழுவிவியள். மிச்சமெல்லாம் அம்மாதானே செய்ய வேண்டும்.” என்றார்கள் பையன்கள் இருவரும்.
வீட்டிற்கு வந்து எல்லாம் கழுவி வெட்டி சமைத்து முடிய நான்கு மணித்தியாலங்கள் எடுத்தன.


”பாவி மனிசன்! திடீரென்று ஆசையைக் காட்டிப்போட்டு எண்டுமில்லாதவாறு மூண்டுமடங்கு வேலை வாங்கிப் போட்டுது” மூச்சிரைத்தாள் சித்திரா.

சாப்பாடு தயார் என மனைவி சொல்லும்போது பிள்ளைகள் குறட்டை விட்டு நித்திரை கொண்டிருந்தார்கள். தங்க இலையைத் தடவிப் பார்க்கமுடியாமல் நித்திரையைத் தழுவி இருந்தார்கள் அவர்கள். அவர்களைத் தட்டி எழுப்பிக் களைத்துப் போன அப்பாவும் அம்மாவும் சாப்பிட உட்கார்ந்தார்கள். சமைத்த களைப்பில் சித்திராவிற்குப் பசி போய்விட்டது. பாபு மாத்திரம் வீடு என்னும் ஹோட்டலில் சுவையாக, ஹெல்த்தியாகச் சாப்பிட்டார். சாப்பிட்டு ஏப்பம் வந்ததும் நண்பனுக்கு தொலைபேசி எடுத்தார். தன்னுடைய 'அந்தநாள்' திறமையைப் பறை சாற்றினார்.


“எட அ....! இதைத்தானே நாங்கள் ஒவ்வொருநாளும் வீட்டிலை சாப்பிடுகின்றோம். ஒருக்கா உன்ரை குடும்பத்தைக் ஹோட்டலுக்குக் கூட்டிப் போடா” என்ற சத்தம் மறுமுனையில் ரெலிபோன் வாயில் இருந்து அலறியது.



வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF FES இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளளோம்
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de


Frankfurt நகரில்....
Jaffna Bazar
அன்பார்ந்த வாடிக்கையாளர் நண்பர்கள்
அனைவருக்கும்
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Jaffna Bazar
தங்க நகைகள்
தரமானவை மட்டும்
என்றும் எம்மிடம்
கிடைக்கும்
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான
மரக்கறி மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்
வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை
நீங்கள் பெறுவீர்கள்
KADHIR
BASMATI RICE
Kaiser Straße.49
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353
e.mail:jbspiece2018@yahoo.com
0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425



# நமக்கென்று சில கடமைகள் உண்டு.

## அதை நம்மையால் செய்வது நன்று!



றஜினா தருமராஜா

இவ்வுலகில் நாம் கடவுளாக வணங்க வேண்டியவர்கள் நமது பெற்றோர்கள். பிள்ளைகள் பிறந்ததிலிருந்தேஅவர்களுக்குப் பிடித்தவற்றையும் எவையெல்லாம் நல்லதாகவும் தேவையாக இருக்கும் என நினைத்துப் பார்த்துப் பார்த்துச் செய்யும் பெற்றோர்களுக்கு நாம் என்ன செய்யமுடியும்?

எம்மால் முயன்றவற்றை செய்யவேண்டுமல்லவா? பணம் கொடுப்பதனால் சரியாகிவிடுமா? அன்பினை நாம் காசால் வாங்கமுடியுமா? பொருட்கள் வாங்குவது போல் நம்மால் பாசத்தை வாங்கமுடியாது. அன்பு என்பதனை அன்பினாலே பெற்றுக் கொள்ளுங்கள். அன்பு நிறைய உள்ளவர்கள் மேலோர். அன்பின் மறு உருவம் தாய் தந்தையரே! ஆகவே உங்களால் இயன்ற அளவு உங்கள் பெற்றோருக்கு உதவி செய்யுங்கள்.

முதலில் நாம் அவர்கள் துன்பப்படும் அளவில் உரையாடக்கூடாது. நாவை அடக்காவிடின், சொற்களைக் கூறிய பின் நாமும் வருந்துவோம் அல்லவா. எதிர் மாறாக உரையாடாமல் இருந்தால் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவர்.

புலம் பெயர் நாட்டில் வாழும் நம் பெற்றோருக்கு இங்கு பிறந்து வளர்ந்த நாம் அவர்களின் பெரிய பிரச்சினையாக இருக்கும் மொழியினைக் குறைக்க வேண்டும். அதாவது அவர்கள் மருத்துவரிடம் செல்லும் போது அல்லது வங்கிக்குச் செல்லும் போது துணைக்குச் சென்று பொருமையோடு மொழிபெயர்ப்பினைச் செய்யவேண்டும்.
அதே போன்று வரும் அஞ்சல்களையும் மொழி பெயர்க்க வேண்டும். ஒழுங்காக வாசித்துச் செயற்படவில்லையென்றால் சில சமயங்களில் இக்கட்டான சூழ்நிலை வந்துவிடும். அவர்களுக்கு மொழியினையும் சொல்லிக் கொடுக்கலாம். மொழி தெரியாத நாட்டில் வாழ்வது கடினம்.
நம் பெற்றோர்கள் எங்களுக்காகவே வாழ்பவர்கள். விடுமுறைக்குச் சிலர் செல்வதும் இல்லை. பிள்ளைகளுக்காகவே வாழ்பவர்கள். இவர்களை பிள்ளைகள் ஆகிய நாம் விடுமுறைக்குக் கூட்டிச் செல்லலாம் அல்லவா? புதியவற்றைக் காட்டி மகிழ்விக்கலாம்.

அவர்களின் உறவினரையும் தாய் தந்தையரையும் விட்டு புலம் பெயர் நாட்டுக்கு வந்து இருக்கும் நம் பெற்றோருக்கு மன அழுத்தம் என்பது ஒரு பெரிய பிரச்சினை. இவ்வழுத்தம் நீங்க நாம் அவர்களுடன் உரையாட வேண்டும். அவர்களின் தாய் நாட்டைப் பற்றியும் உறவினர் பற்றியும் உரையாட வேண்டும்.
இவ்வழுத்தம் நீங்குவதற்காகவே சுற்றுலா செல்லலாம். அவர்களின் கவலைகள் குறையும். தாய் நாட்டுக்கும் கூட்டிச் செல்லலாம்.

வீட்டில் இருக்கும் பொழுது சிறிய வேலைகள் செய்து கொடுத்தல் மற்றும் கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்குதல் மிகவும் உதவியாக இருக்கும்.
முக்கியமாக நாம் குழந்தைகளாக இருக்கும் போது நம்மை நன்றாகப் பார்த்த எங்கள் பெற்றோர்கள் குழந்தைகளாக மாறும்பொழுது அதாவது முதியவர்களாக ஆகும்போது அவர்களைப் பராமரிப்பதும் கவனமாகப் பார்ப்பதும் எங்கள் கடமை?

நம் வீட்டிலே அவர்களைப் பார்ப்பது போல் வராதல்லவா? எங்களுடன் எங்கள் வீட்டிலே இருந்தால் துணை எங்களுக்கும் இருக்கிறார்கள் என்று நினைத்து ஆறுதல் அடைவார்கள்.

எந்த வகையில் உதவி செய்ய முடியுமோ செய்யுங்கள். இதுவே நம் கடமையாகும்.
கடைகளுக்குச் சென்றால் நீங்கள் மறவாது அவர்களுக்கும் முக்கியமாக வெற்றிமணிப் பத்திரிகையை எடுத்துச் செல்லுங்கள். அவர்கள் 25 வருட வாசகர்கள் நிச்சயம் மகிழ்வார்கள்.

எந்த சூழ்நிலையிலும் சுயநலத்தோடு சிந்திக்காது எங்களை விட்டுக் கொடுக்காத எம் தாய் தந்தையரை நாமும் ஒருபோதும் விட்டுக் கொடுக்கக் கூடாது!

எமது தயாரிப்புக்கள் தற்போது யேர்மனியிலும் கிடைக்கும்




as products are available in Star impex
எமது நிறுவனத்தில்
இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

Star Impex
Asia & Afro Großhandel
Franziusstrasse 150(Tor 3) - 44147 Dortmund Germany
e.mail:info@star-impex.de Tel: 0231 860 26 96

அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்




அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# யேர்மனி இனி என்றும் பெண்கள் கைகளில்?

## ஜேர்மனியில் புதிய தலைவர் கறம் காறன்பௌவர்

வ.சிவராஜா







கட்சித்தலைவர் பதவிக்கு போட்டியிட்டவர்கள் மூவர் புதிய தலைவராக கறம் காறன்பௌவர் தெரிவாகியுள்ளார்.

யேர்மனியின் மிகவும் பழமைவாய்ந்ததும், பிரதான அரசியல் கட்சியும், தற்போதய ஆளும் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் (C D U) Christlich Demokratische Union புதிய தலைவராக கறம் காறன்பௌவர் என்பவர் தெரிவாகியுள்ளார். கம்பேர்க் என்ற பெருநகரில் கடந்த 6-12-18 அன்று நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் 999 பேர் வாக்களிப்பில் 517 வாக்குகளைப் பெற்ற இவர் கட்சியின் புதிய தலைவராகத் தெரிசெய்யப்பட்டார். கடந்த 18 வருடங்களாக கட்சியின் தலைவராக இருந்த தற்போதய கான்ஸிலர் அங்கலா மேர்க்கல் தலைமைப் பதவியிலிருந்து நன்றிப் பெருக்குடன் விடைபெற்றார்.

ஐரோப்பிய நாடுகளில் அரசியல், பொருளாதார, சமூகநல விடையங்களில் முன்னணியில் இருக்கும்நாடு யேர்மனிதான். அவை மட்டுமல்லாமல் சனத்தொகையில் பெரியநாடு. விஞ்ஞானம் கணனி தொழில்நுட்பம், ஏற்றுமதி வர்த்தகம், வெளிநாட்டு அகதிகளை உள்வாக்குதல் போன்றவற்றிலும் முன்னணி வகிக்கின்றது இந்த நாடு. அரசியல் ஜனநாயகப் பாரம்பரியங்களில் ஒரு சாதக நிலையைக் கடைப்பிடிப்பதும் மக்கள் நலத்திட்டங்களில் அதிக அக்கறை கொண்டதுமான இந்த நாட்டிற்குள் வெளிநாடுகளின் அகதிகள் படை எடுப்பால் நாடே பல நெருக்கடிகளை அண்மைக்காலமாகச் சந்தித்து வருகின்றது.

இதன் தாக்கமாக கடந்த 18 வருடங்களாக ஆட்சித்தலைவராகவும் (கான்ஸிலராக) (C D U) Christlich Demokratische Union கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் தலைவராகவும் ஐரோப்பாவின் தலைசிறந்த அரசியல் வாதியகவும் விளங்கிய அங்கலா மேர்க்கல் (Angela Merkels) அவர்கள் கடந்த 29.10.2018 அன்று தனைது கட்சித்தலைவர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். அத்தோடு 2021ம் ஆண்டுவரை தான் கான்ஸிலர் பதவி முடிவடைய தான் ஓய்வுபெறப் போவதாகவும் அங்கலா மேர்கல் தெரிவித்திருந்தார்..

கடந்த 6-12-18 அன்று நடைபெற்ற கட்சித்தலைவர் பதவிக்கு மூன்றுபேர் போட்டியிட்டனர்.

999 மத்திய குழு உறுப்பினர்கள் வாக்களித்தனர் போட்டியிட்ட மூன்றுபெரில் 517 வாக்குகளைப் பெற்ற இந்த அம்மையார் கட்சியின் புதிய தலைவராக வெற்றிபெற்றுள்ளார். இந்த அம்மையாரைப் பற்றிய சில குறிப்புக்களைப் பார்ப்போம்..

-9.8-1962ம் ஆண்டு சார்லாண்ட் மாநிலம் (Saarland) வோக்லிங்கனில் (Völklingen) பிறந்தார். 3 பிள்ளைகளின் தாயார்.

-சார்லாண்ட் ரியர் என்ற இடத்திலுள்ள பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளாதாரம் சட்டத்துறைப் பட்டப்படிப்பை முடித்தார். சட்டத்தரணியாகக் கடமையாற்றிப் பின்னர் அரசியல் வாதியாகவும் காலடி வைத்தார்.

-1981ம் ஆண்டு ஊனுரு கட்சியில் இணைந்துகொண்டார். 1985 தொடக்கம் 1988 வரை CDU கட்சியின் இளையோர் அணித்தலைவராகவும் பதவி வகித்தார்.

-2011 தொடக்கம் 2018வரை சார்லாண்ட் மாநிலத்தின் CDU கட்சியின் தலைவராகவும் மாநில முதலமைச்சராகவும் கடமையாற்றி 2018 பெப்ரவரி மாதம் CDU கட்சியின் மத்திய பொதுக்காரியதரிசியாக அதாவது கான்சிலர் மேர்கல் தலைவராகவும் இவர் பொதுச்செயலாளராகவும் பதவி வகித்து 2018 டிசம்பர் மாதம் 6ம் திகதி கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் கறம் காறன்பௌவர்.

CDU கட்சியின் சிறு குறிப்பையும் இத்தோடு பார்ப்பது பொருத்தமாகும்.

1-சர்வாதிகாரி கிட்லரின் ஆட்சி முடிவுக்குவர நாடு அழிவுண்டு கிடந்தது. மக்கள் மீளெழுச்சிபெற்று வீடுகொண்டு எழுந்தனர். கடும் உழைப்பால் தமது நாட்டைக் கட்டியெழுப்பினர். சமாதான சகவாழ்வை நோக்கிக் காலடி எடுத்து வைத்தனர். ஜனநாயக நீரோட்டத்தில் அதிதீத நம்பிக்கை கொண்ட மக்கள் 26.6.1945ம் ஆண்டுதான் இந்தக் கட்சியை ஆரம்பித்தனர். இந்தக் கட்சியின் முதல் தலைவராக யேர்மனியின் முதலாவது கான்சிலராகத் தெரிவு செய்யப்பட்ட கொன்றாட் அடனோவர் (Konrad Adenauer) அவர்கள் பதவி வகித்தார்.

2-பின்னர் பதவி வகித்த CDU கட்சியின் தலைவர்களின் விபரங்களைப் பார்ப்போம்..

3.2.1949 - 1963 - Konrad Adenauer
3.2.1963 - 1966 - Jakob Kaiser, - Kurt Gerog Kiesinger
3.2.1966 - 1982 - Ludwig Erhard
3.2.1982 - 2000 - Helmut Kohl
3.2.2000 - 2018 Angela Merkels
6.2.2018 தொடக்கம் - Kramp Karrenbaur

3-CDU கட்சியின் தற்போதய மத்திய, மாநில, ஐரோப்பிய பாராளு மன்றங்களின் அங்கத்துவத்தை நோக்கினால்...

-யேர்மனிய மத்திய பாராளுமன்றில் - 709 பேரில் 200 பேர் CDU கட்சினர்

யேர்மனிய மாநில பாராளுமன்றங்களில் 1821 பேரில் 527 பேர் CDU கட்சினர்.

ஐரோப்பா பாராளுமன்றத்தில் 96 பேரில் 29பேர் CDU கட்சியினர்.

4-யேர்மனிய தற்போதய சனத்தோகை சுமார் 82 மில்லியன்களாகும். 18 வயதிற்கு மேல்தான் இந்த நாட்டில் வாக்குரிமை உண்டு. இப்படியாக வாக்களிக்கத் தகுதியுடையோரில் இந்தக் கட்சியின் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 31.12.2017 ஆண்டுக் கணிப்பின்படி 4.25.910 ஆகும்.



நடுப்பக்கம்




# இருட்டடிப்பால் உலகம் இருண்டு கிடக்கிறது

## எந்தக் கல்வெட்டும் சுமந்ததில்லை உழைத்தவரின் பெயர்களை

சேவியர்




பல ஆண்டுகளுக்கு முன் எழுதிய ஒரு கவிதையின் வரிகள் மனதுக்குள் மெல்ல மெல்ல மிதக்கின்றன. வரலாறுகளில் புதைக்கப்பட்டு காணாமல் போன மனிதர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. புதைக்கப்பட்ட அந்த வரலாறுகளின் நெற்றிகளில் தான் வேறு சில பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவையே வரலாற்றில் இடம்பிடிக்கின்றன. அவையே வரலாறுகளாகவும் இடம் பிடிக்கின்றன. மற்றவை வரலாற்றை உருவாக்கு கின்றன.

அசோகர் சாலையோரங்களில் மரங்களை நட்டார் என படிக்கும் போது, அந்த மரக்கன்றுகளை நட குழிகளை வெட்டிய நபர்களை நாம் நினைக்கிறோமா ? மரங்களை நட்ட உழைப்பாளிகளை நினைக்கிறோமா ? அதற்கு நீரூற்றிப் பேணி வளர்த்த பணியாளர்களை நினைக்கிறோமா ? இல்லை என்பதே பதில் ! ஆனால் அசோகர் வரலாற்றில் இடம்பிடிக்கிறார்.

கலிங்கம் கொண்டான் எனு பட்டப்பெயரை மணிமுடியாய் சூட்டி அழகுபார்க்கிறோம். குருதியின் பிசுபிசுப்போடும், வீரத் தழும்புகளோடும், புறமுதுகிடா ஆண்மையோடும் களம் கண்ட ஆயிரக்கணக்கானோரை நாம் மறந்து விடுகிறோம்.

அதோ நீளமாய்த் தெரிகிறதே அந்த பாலம் ! அதைக் கட்டியவர்களின் பட்டியலில் என்றேனும் ஒரு உழைப்பாளனின் பெயர் இடம்பெற்றதுண்டா ? அதோ அந்த மிகப்பெரிய கோயிலைக் கட்டியவர்களின் பெயர்களில் ஏதேனும் தொழிலாளியின் பெயர் இடம்பெற்றதுண்டா ? கட்டளையிடுபவனைப் புல்லரிக்க வைக்கும் உலகம், கட்டளையை செயல்படுத்தியவனை செல்லரிக்க விடுகிறது.

இது வரலாற்றின் கதைகள் மட்டுமல்ல. எப்போதும் நடந்து கொண்டே இருக்கும் நிகழ்வுகள் தான். தலைவர்களும், அரசியல்வாதிகளும் தங்களுக்கென கல்வெட்டுகளை உருவாக்கும் முனைப்பில் இருக்கும் போது, பணியாளர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். திறமைசாலிகளின் இரத்தமும், சிந்தனையும் உறிஞ்சப்பட்டு , அவர்களுடைய உரிமைகளின் மேல் இன்னொருவர் வந்தமர்வதே காலம் காலமாக நடந்து கொண்டிருக்கிறது.

இருட்டடிப்பு செய்வதற்கு நவீனம் பல வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறது. வெளிச்சத்தைப் புதைத்து, இருளை வெளிச்சமாய்க் காட்டுவது ஒரு யுத்தி. யாரைப் பாராட்ட வேண்டுமோ, யாரை அங்கீகரிக்க வேண்டுமோ அவர்களை விலக்கி விட்டு, இருள் வந்து அந்த இருக்கைகளில் அமர்ந்து கொள்கிறது. பாராட்ட வேண்டியவனை நிராகரித்து, இன்னொருவரைப் பாராட்டுவது இந்த யுத்தி.

தேவையான இடத்தில் வெளிச்சத்தின் அளவை குறைப்பதும், தேவையற்ற இடத்தில் வெளிச்சத்தை அதிகரிப்பதும் இன்னொரு யுத்தி. காட்டுத் தீ பற்றி எரியும் இடத்தில், அகல் விளக்கின் ஒளி அறியப்படுவதில்லை. உண்மையான பணி செய்தவனை ஒப்புக்குப் பாராட்டி விட்டு, இன்னொருவருன்னு ஊரெல்லாம் போஸ்டர் ஒட்டி விழா எடுப்பதைப் போல என வைத்துக் கொள்ளலாம். செய்தித்தாளின் எட்டாம்பக்கத்தில் ஓரமாய் சாதனையாளன் நாலுவரியில் அறிமுகப்படுத்தப்பட, முதல் பக்க தலைப்புச் செய்தியில் இன்னொருவன் அதற்குரிய புகழைப் பெற்றுச் செல்வான்.

ஒருவனுடைய பெயரை இருட்டடிப்பு செய்வது என்பது வழிப்பறிக்குச் சமம். பகல் நேர வழிப்பறி என்று சொல்லலாம். வாய்க்கால் வெட்டி நதியைக் கடத்திச் செல்வதைப் போன்றது அது. வயலுக்குள் பாயவேண்டிய நீரைக் கடத்தி பாலை நிலத்தில் பாய விடுவதைப் போன்றது அது ! பாராட்ட வேண்டிய ஒருவனைப் பாராட்டாமல் இருப்பதும், பாராட்டத் தேவையற்ற ஒருவனைப் பாராட்டுவதும் ஒற்றை வாளின் இரண்டு கூர்மைப் பக்கங்களைப் போன்றது. இரண்டுமே அழிவுக்கான ஏற்பாடுகளே.

சிலருடைய புகழ்ச்சிக்கு முன் புகழ்ச்சியே வெட்கப்படும். மேடைகளில் அவர்கள் முழங்கும் புகழ் மழைக்கு முன்னால் மைக்கே கூட தாங்க முடியாமல் தலை கவிழும். புகழ்மாலை சூடுபவர்கள் அதையெல்லாம் கண்டுகொள்வதில்லை. தேவையற்ற புகழ்ச்சி செய்பவர்கள் ஏதோ ஒரு எதிர்பார்ப்பின் சந்தில் நின்று கொண்டு தூண்டில் போடுபவர்களாகத் தான் இருக்கிறார்கள். சிலவேளைகளில் அது வெளிப்படையாய் தெரியும், சிலவேளைகளில் பசுந்தோல் போர்த்திய ஓநாயாய் ஒளிந்திருக்கும்.


வீணாய் ஒருவனைப் புகழும் போது, ஒரு திறமைசாலிக்குக் கிடைக்கவேண்டிய அங்கீகாரம் திருடப்படுகிறது. ஒருவனைப் புகழ மறுத்து நகரும் போது ஒளிகொடுக்க வேண்டிய அவனது திறமைகள் மங்கிப் போகின்றன. இரண்டுமே குற்றங்களே.

எனவே, இருட்டடிப்பால் இருண்டு கிடக்கின்ற உலகுக்கு ஒளிகொடுக்க வேண்டிய கட்டாயம் நம் ஒவ்வொருவர் கரத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மைச் சுற்றியிருக்கும் மக்களைக் கவனிப்போம். நம்மோடு பணியாற்றும் சக பயணிகளைப் பார்ப்போம். நமது குடும்பங்களில் இருக்கும் உறவுகளை நினைப்போம். யாரைப் புகழவேண்டும், யாரை உயர்த்த வேண்டும் என்பது நமக்கே தெரியும்.

இது தான் துவக்கம். இது தான் ஆதிமூலம். இருட்டடிப்பு சிந்தனைகளை முதலில் நாம் ஒதுக்கி வைக்க வேண்டியது இங்கே தான். சரியான நபர்களை பாராட்டத் துவங்குவோம். அவர்களுக்கான அங்கீகாரங்களை கொடுக்கத் துவங்குவோம். வெளிச்சம் முதலில் புள்ளியாகத் தான் தோன்றும். பிறகு தான் அது பற்றிப் படர்ந்து விஸ்வரூபமெடுக்கும். மழை முதலில் ஒற்றைத் துளியில் தான் பயணத்தைத் துவங்கும், ஊரையே மூழ்கடிக்கவும் அதால் முடியும். எனவே துவங்குவோம்.

இருட்டடிப்பு என்பது சாதாரண விஷயமல்ல என்பதைப் புரிந்து கொள்வோம். வெளிச்சம் வீசுவதே தேவையான செயல் என்பதையும் அறிந்து கொள்வோம். இருட்டைப் புதைப்போம், வெளிச்சத்தை அறுவடை செய்வோம்.





## ரோபோக்களின் எண்ணிக்கை, மனிதர்களின் எண்ணிக்கையை விட அதிகரிக்கும்!

"உங்களுடைய வேலைகளையெல்லாம் ரோபோக்கள் தட்டிப் பறிக்கப் போகின்றன, உஷார் !" இப்படி ஒரு அறிவிப்பை சாதாரணமாய் யாராவது சொன்னால் உதறி விட்டுப் போய்விடலாம். ஆனால் பல இலட்சம் மக்களுக்கு வேலை கொடுத்து, தொழில் நுட்ப உலகில் ஜாம்பவானாக இருக்கும் பில் கேட்ஸ் சொன்னால் கொஞ்சம் நின்று நிதானிக்க வேண்டியிருக்கிறது இல்லையா ?

தொழில்நுட்ப உலகில் ஆர்டிபிஷியல் இன்டெலிஜென்ட் எனப்படும் செயற்கை அறிவின் அதீத வளர்ச்சி ரோபோக்களை உற்பத்தி செய்து தள்ளப் போகிறது. அவை மனித வேலைகளை வேகமாகவும், திறமையாகவும் செய்து குவிக்கப் போகின்றன. இதனால் மக்கள் வேலையிழக்கும் அபாயம் உண்டு என்பது தான் அவர் சொன்ன விஷயம், அது தான் யதார்த்தமும் கூட.

அடுத்த பத்து ஆண்டுகளில் 80 கோடி பேர் வேலையிழப்பார்கள். அவர்களுடைய வேலையை திறமையாகவும் வேகமாகவும் ரோபோக்கள் செய்யும் எனும் ஒரு ஆய்வு முடிவை பிரபலமான மெக்கன்ஸி நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. அதாவது 20 சதவீதம் மக்கள் வேலையிழக்கும் அபாயம் இது!

நாற்பத்தாறு நாடுகளில் விரிவாக நடத்தப்பட்ட ஒரு ஆய்வு தான் இந்த முடிவைத் தந்தது. சர்வதேச அளவில் ரோபோக்களால் ஏற்படப் போகும் விளைவு இது என்பது கவனிக்கத் தக்கது !

ரோபோக்களெல்லாம் கைகளையும் கால்களையும் மடக்காமல், லெகோ பொம்மையைப் போல நடக்கும் காலம் மலையேறிவிட்டது. மனிதனைப் போலவே தோற்றமுடையதாக இப்போது ரோபோக்கள் உருவாக்கப் படுகின்றன. இதுவரை ஹாலிவுட் திரைப்படங்களில் கற்பனையாக உலவிய கதாபாத்திரங்கள் நிஜத்தில் சாத்தியமாகியிருக்கின்றன.

இருக்கையில் சரிக்கு சமமாக அமர்ந்து டிவியில் பேட்டி கொடுக்கிறது சோ.ஃபியா எனும் ரோபோ. உலகிலேயே குடியுரிமை பெற்ற முதல் ரோபோ ! எந்த கேள்வி கேட்டாலும் பளிச் என பதில் சொல்கிறது. கேட்கப்படும் கேள்விகளுக்கு ஏற்ப முகபாவத்தை மாற்றிக் கொள்கிறது. நகைச்சுவை சொன்னால் சிரிக்கிறது. பேசுவது ரோபோவா, இல்லை மனிதனா எனும் சந்தேகமே வருமளவுக்கு நடந்து கொள்கிறது. கேமரா எடுத்தால் போஸ் கொடுக்கிறது !




## மனிதர்களை அடிமைகளாக்குமா ரோபோக்கள் ?

நாளை பேருந்தில் நமக்குப் பக்கத்தில் இருப்பது ரோபோவா, மனிதனா என்பதை கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய சூழல் வரலாம்.

தகவல்களாலும், கட்டளைகளாலும் கட்டமைக்கப்பட்டு வந்த ரோபோக்கள் இப்போது உணர்வுகளாலும், சமூக செயல்பாடுகளின் அடிப்படையிலும் கட்டமைக்கப்படுவது தான் ரோபோ உலகின் மிகப்பெரிய மாற்றம்.

"நீங்க மனுக்குலத்தை அழிச்சிடுவீங்களா ?" என ஒரு கேள்வியை அந்த ரோபோவிடம் கேட்டார்கள். சிரித்துக் கொண்டே ரோபோ சொன்னது, "ஓவரா சினிமா பாத்தா இப்படியெல்லாம் தான் கேள்வி கேப்பீங்க" என்று !

பிறகு, "நாங்கள் மனுக்குலத்தின் தேவைகளை நிறைவேற்றத் தான் வந்திருக்கிறோமே தவிர அழிக்க அல்ல" என்றும் சிரித்துக் கொண்டே சொன்னது. "எங்களுடைய மூளை இப்போதைக்கு மனித மூளையைப் போல சிந்திப்பதில்லை. ஆனால் ஒரு நாள் நாங்கள் அப்படி சிந்திக்கும் நிலைக்கு வருவோம் ", என ஒரு கொக்கியையும் போட்டது.

சூழலுக்குத் தக்கபடியும், ஆட்களுக்குத் தக்கபடியும், கேள்விக்குத் தக்கபடியும் பேசுகின்ற ரோபோக்கள் அச்சம் ஊட்டுவதில் வியப்பில்லை. நம்மை மாதிரி சாதாரண ஆட்களுக்கு மட்டுமல்ல, ஸ்டீ.ஃபன் ஹாக்கிங் போன்ற அறிவியல் ஜாம்பவான்களுக்கே அந்த அச்சம் இருந்தது என்பது தான் உண்மை.

இந்த அச்சத்தை மெய்ப்பிக்கும் விதமாகத் தான் ஆய்வு முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் பதினைந்தே வருடங்களில் உலகிலுள்ள ரோபோக்களின் எண்ணிக்கை, மனிதர்களின் எண்ணிக்கையை விட அதிகரிக்கும் என்கிறார் டாக்டர் இயான் பியர்சன் என்பவர். ஆர்டிபிஷியல் இண்டெலிஜென்ஸ் தொடர்பான பல ஆய்வுகளைச் செய்து வருபவர் அவர். அதுமட்டுமல்லாமல் 2028களில் மனித உணர்வுகளைப் போல உணர்வுகளால் ஆன ரோபோக்கள் நிச்சயம் வந்து விடும் என அடித்துச் சொல்கிறார் அவர்.


அதன் அடுத்த படியாக 2048களில் ரோபோக்களே உலகை ஆளும் காலம் உருவாகலாம் என்கிறார் அவர். அப்படிப்பட்ட காலத்தில் மனிதர்களை ரோபோக்கள் மிகவும் அடிமையாக நடத்தும் என சன் பத்திரிகைக்கு அவர் தெரிவித்தது தொழில் நுட்ப உலகில் அதிர்வலைகளை உருவாக்கியது.

பிரிட்டனில் நடத்தப்பட்ட இன்னொரு ஆய்வில், 71 விழுக்காடு மக்கள் ரோபோக்களின் வளர்ச்சியை திகிலுடன் தான் பார்க்கின்றனர். மனுக்குலத்துக்கு மாபெரும் அச்சுறுத்தல் என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். 43 விழுக்காடு மக்கள் ரோபோக்கள் சமூகத்தை ஆளும் என்றும், 37 விழுக்காடு மக்கள் ரோபோக்கள் அதி புத்திசாலிகளாய் இருக்கும் என்றும், 34 விழுக்காடு மக்கள் தங்களுக்கு வேலை இருக்காது என்றும், 25 விழுக்காடு மக்கள் ரோபோக்களும் மனிதர்களும் வித்தியாசமின்றி இருப்பார்கள் என்றும், 16 விழுக்காடு மக்கள் ரோபோ-மனித உறவுகள் நடக்கலாம் என்றும் நம்புகின்றனர்.

பாலியல் தொழிலுக்கு இன்றைக்கு ரோபோக்கள் உருவாக்கப்படுவதும், அவை அச்சு அசலாய் மனிதர்களைப் போல இருப்பதும், மனிதர்களைப் போல பேசுவதும், மனிதர்களைப் போல உணர்வுகளை வெளிப்படுத்துவதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

Easy Holiday
Travels & Tours
எம் மக்களின் அபிமானம் வென்ற
அனைவருக்கும் எங்கள்
உள்ளம் கனிந்த தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
Easy Holiday
Travels & Tours


தாய்நாடு சென்றுவர மலிவு விலையில்
● விமானச்சீட்டுக்கள்
● பயணக் காப்புறுதிகள்
● வாகன வசதிகள்
● வீசா உதவிகள் (இந்தியா இலங்கை)
● ஹோட்டல் வசதிகள்

உலகின் எப்பாகங்களுக்கும் சென்று வருவதற்கான விமான பயணச்சீட்டுகளை குறைந்த விலையில் நிறைந்த மனதுடன் தருகின்றோம்
தொடர்புகளுக்கு: Thureiraj Rukshan
Emirates ETIHAD Gulf Air OMAN AIR QATAR
Westring 36
44623 Herne
Germany
Mob:0152 1365 4331 - 0152 04153138
Tel:02323 965 4426 Fax:02323 9654427
e.mail: ezholiday16@gmail.com

அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

21ம் பக்கத் தொடர்ச்சி...

நவீன ரோபோக்கள் மனிதர்களைச் சார்ந்து வாழ்கின்ற நிலையை விட்டு விலகிவிடும் என்பது தான் இங்கே முக்கிய செய்தி. இவற்றுக்குத் தேவையான சக்தியை சூரிய ஒளி, காற்று என ஏதோ ஒரு இயற்கையிலிருந்து இழுத்துக் கொள்ளும். தனது செயல்பாடுகளுக்குத் தேவையான மென்பொருட்களை தானே எழுதிக் கொள்ளும். பிறருடைய செயல்பாடுகளைக் கண்டு அதை அப்படியே செயல்படுத்தவும் கற்றுக் கொள்ளும்.

அப்போது, மனிதனை விட பல மடங்கு வேகமும், விவேகமும் கொண்ட ரோபோக்கள் மனிதர்களை கின்னி பன்றிகளைப் போல நடத்தும் என்கிறார் டாக்டர் பியர்சன். இவற்றுக்கு மரணம் இல்லை என்பது அச்சத்தை அதிகரிக்கிறது.



உதாரணமாக இப்போது வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்ய பயன்படுத்தப்படும் ரோபோக்கள் நாளை நமக்கு எதிரான ஆயுதமாக மாறிவிட்டால் என்ன செய்வது ? என்பது ஒரு சின்ன கேள்வி !

ரோபோக்கள் என்றால் பெரிய பெரிய கண்ணாடி மாளிகையில் இருப்பவை எனும் சிந்தனை மாறிவிட்டது. அமேசான் நிறுவனம் வெஸ்டா எனும் ரோபோவை உருவாக்கிக் கொண்டிருப்பதாக செய்திகள் கசிகின்றன. இவை நமது வீட்டு ரோபோக்கள். ஏற்கனவே அலெக்ஸா எனும் கருவியின் மூலம் வியப்பை ஏற்படுத்திய அமேசான் வெஸ்டாவுடன் வரவிருக்கிறது. இனிமேல் வீட்டு வேலைகள் செய்ய ஆட்கள் தேவைப்படாது வெஸ்டாவே செய்யும். குழந்தைகளைப் பராமரிக்கும். வீட்டைப் பாதுகாக்கும். கூட மாட ஒத்தாசை செய்யும். கேட்பதற்கெல்லாம் பதில் சொல்லும். இன்னும் என்னென்ன செய்யும் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.



கடந்த வாரம் கூகிள் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை அறிமுகப்படுத்திய கூகிள் அசிஸ்டெண்ட் ஆர்டிபிஷியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் அடுத்த நிலை. ஒரு மென்பொருள் மனிதரைப் போல சூழலுக்குத் தக்கபடி பேசி 'அப்பாயின்யிண்ட்மெண்ட்' புக் செய்வதை அவர் செயல்படுத்திக் காட்டினார்.

மொத்தத்தில் மனிதர்கள் உறவுகளோடு வாழ்ந்த காலம் போய், தொழில்நுட்பத்தோடு வாழும் காலம் வந்திருக்கிறது. நாளை தொழில்நுட்பம் மனிதர்களை அடக்கியாளும் காலம் வரலாம் எனும் அச்சம் எங்கும் நிலவுகிறது. இதை பெரும்பாலான அறிவியலார்கள் ஆதரிப்பது தான் ரோபோக்கள் மீதான திகிலை அதிகரிக்கிறது. இயற்கை மனிதனை வளமாக்கியது, செயற்கை என்ன செய்யும் ? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்

Vettimani.com









**காட்சி1** ( மூன்று மரங்கள் ஒரு காட்டில் அருகருகே நிற்கின்றன )
மரம் 1 :
நான் இந்தக் காட்டுல வெயில் மழை எல்லாம் தாங்கி வளர்றேன். எனக்கு ஒரே ஒரு ஆசை தான். நான் இந்த உலகத்துலயே மிகப்பெரிய அரசனோட கட்டிலா மாறணும். எல்லாரும் என்னைப் பாத்து ஆச்சரியப்படணும். அது தான் என்னோட ஆசை. அதுக்கு தான் நான் கடவுள் கிட்டே செபம் செய்திட்டு இருக்கேன்.
மரம் 2 :
என்னோட ஆசை என்ன தெரியுமா ? ஒரு பெரிய கப்பலா மாறணும். தண்ணியில, அலைகளுக்கு இடையே சீறிப் பாயற கப்பலா மாறணும்.
அதுல உலகத்துலயே பெரிய அரசர் எல்லாம் பயணிக்கணும். அதான் என்னோட ஆசை. அதுக்காகத் தான் நான் பிரார்த்தனை செஞ்சுட்டே இருக்கேன்.
மரம் 3
என்னோட ஆசை என்ன தெரியுமா ? நான் வளர்ந்து வளர்ந்து வானம் வரை வளரணும். பூமிக்கும் வானத்துக்கும் இடையே ஒரு பாலம் மாதிரி வளரணும்.
என்னை பாக்கும்போ எல்லாம் கடவுளை எல்லாரும் நினைக்கணும். அது தான் என்னோட செபம்.
( ஒருவர் வந்து மரங்களை வெட்டி வீழ்த்துகிறார் )
மரம் 1 : ஹாய்... சூப்பர் .. நான் இன்னும் கொஞ்ச நாள்ல ஒரு பெரிய கட்டிலா மாறப் போறேன். அரசனை சுமக்கப் போறேன்..ஹையா.. ஜாலி.

மரம் 2 : நான் பெரிய கப்பலா மாறப் போறேன். கடல்ல கலக்கலா போகப் போறேன்.. ஹையா.. ஜாலி.

மரம் 3 : நான் வானம் வரை போணும்ன்னு நினைச்சேனே.. எப்படி என்னை வெட்டிட்டாங்க... ஐயோ... அந்த வாய்ப்பு எனக்கு இல்லையா ?

( அடுத்த காட்சி ) முதல் மரத்தை ஒருவர் ஒரு முன்னணையாகச் செய்கிறார்.

மரம் 1 : ஐயோ.. பெரிய கட்டிலா மாறணும்ன்னு நெனச்ச என்ன மாட்டுக்கு புண்ணாக்கு போடற பொட்டியா செஞ்சுட்டாங்களே. நான் வாழ்ந்ததே வேஸ்டா போச்சே. என் செபமெல்லாம் வீணாப்போச்சே... நான் என்ன செய்வேன்
( இரண்டாவது மரத்தை ஒருவர் ஒரு படகாகச் செய்கிறார். )
மரம் 2 :
என்னது ? நான் வெறும் மீன் பிடிக்கிற படகா ? மன்னன் வருவாருன்னு பாத்தா மீனு தான் வருமா ? மீன் எச்சில் பட்டு நாறி நாறித் தான் நான் இருப்பேனா. கப்பலா மாறணும்ன்னும், அரசனை ஏத்தணும்முன் நெனச்சேன்.. என்னை கவுத்துட்டாரே கடவுள்.. நான் என்ன செய்வேன்.
( மூன்றாவது மரம் அப்படியே கிடக்கிறது )
மரம் 3 : வானம் வரை வளரணும்ன்னு ஆசப்பட்டேன். என்னை பாக்கும்போ எல்லாம் கடவுளை மக்கள் நினைக்கணும்ன்னு ஆசைப்பட்டேன்.
ஆனா என்னை துண்டு துண்டா வெட்டி ஓரமா காயப்போட்டிருக்காங்களே... என் செபமெல்லாம் வேஸ்டா போச்சே..
(முதல் தொட்டிலில் இயேசு கிடத்தப்படுகிறார். ஞானிகள் வந்து தெண்டனிட்டு வணங்கு கின்றனர் )
மரம் 1 : ஓ.. வாவ்.. இப்போது தான் எனக்கு புரிகிறது. இவரை விடப் பெரிய அரசர் இங்கே வரப்போவதே இல்லை. அந்த அரசரையே சுமக்கும் பாக்கியம் எனக்குக் கிடைச்சிருக்கே.. ஹையா.. ஜாலி.. நல்ல வேளை நான் அரண்மனைல கட்டிலா மாறல. இப்போதான் கடவுளோட அன்பு புரியுது. என் செபத்தை கேட்டுட்டாரு கடவுள். நன்றி கடவுளே.

( இரண்டாவது மரமான படகில் பயணம் செய்கின்றனர் இயேசுவும் சீடர்களும். கடலில் படகு அலைகிறது. இயேசு எழுந்து காற்றையும் கடலையும் அமைதியாக்குகிறார் )
மரம் 2 : ஓ..மை..காட்... நான் எவ்வளவு பெரிய பாக்கியம் செஞ்சவன். இயேசுவையே சுமக்கிறேன். அவர் தான் மிகப்பெரிய அரசர்ன்னு எனக்கு இப்போ புரிஞ்சு போச்சு. நல்ல வேளை நான் பெரிய கப்பலா மாறல. கடவுளே உம்மோட திட்டமே திட்ட்டம்.. சூப்பர்.
( மூன்றாவது மரம் சிலுவையாகிறது. இயேசுவை அறைகிறார்கள் )
மரம் 3 : ஐயோ.. வானம் வரை போக ஆசைப்பட்டேன். வெட்டிச் சாய்ச்சாங்க. சரி நல்ல பயனுள்ள பொருளா மாத்துவாங்கன்னு பாத்தா, சும்மா ரெண்டு மரத்துண்டா மாத்திப் போட்டாங்க. பரவாயில்ல சும்மா கிடப்போம்ன்னு பாத்தா கொலைகாரப் பாவிங்களோட சிலுவையா என்னை மாத்திட்டாங்களே... ஒரு மனுஷனை வேற என் மேல தொங்கவிட்டு.. ஐயோ... கடவுளே... வாட் ஈஸ் திஸ் ?
( பின் குரல் : மூன்றாவது நாள் )
மரம் 3 : என்னது உலகமே சந்தோசமா இருக்கு. என்னப்பா விஷயம் ? என்னது ? இயேசு உயிர்த்துட்டாரா ? என் மேல அறையப்பட்ட மனுஷன் தானே அவரு ? வாட் ? அவரு கடவுளா ? வாவ்.. நான் கடவுளை சுமந்தேனா ? இனிமே என்னை பாக்கும் போ எல்லாம் மக்கள் கடவுளை நினைப்பாங்களா ? கடவுளே.. உங்க அன்பே அன்பு. உங்க திட்டமே திட்டம்.. நன்றி கடவுளே.
( முடிவுரை )
இயேசுவோட வாழ்க்கையை தான் நாம பார்த்தோம். ஒரு எளிமையான மாட்டுத் தொழுவத்தில் இயேசு பிறந்தார். தாழ்மையின் சின்னமாக பிறந்தார். நாமும் பணிவானவர்களா இருக்கணும் என்பது தான் இயேசுவோட ஆசை

இயேசு மனிதனாக வந்த கடவுள். இப்படி பல புதுமைகளை செய்திருக்கார். இறந்தவர்களை உயிர்ப்பித்திருக்கிறார், கடல் அலைகளை அடக்கியிருக் கிறார். ஐந்து அப்பத்தை ஐயாயிரம் பேருக்கு கொடுத்திருக்கிறார். இப்படி நிறைய. கடைசியில் அவர் சிலுவையில், கள்ளனாக அறையப்பட்டு இறந்தார். உலகத்தோட பாவத்தை தீர்க்க தான் கடவுள் பூமிக்கு மனிதனா வந்தார். அவர் கடவுளோட மகன் அதனால் தான் ஒட்டு மொத்த உலகத்தோட பாவத்தையும் அவரால தீர்க்க முடிஞ்சுச்சு.
மூணு மரங்களும் மூணு வேண்டுதல்கள் செஞ்சுது. கடைசில கடவுள் அதை நிறைவேற்றினார். ஆனா அவங்க அதை உடனே புரிஞ்சுக்கல. நாமளும் கடவுள் கிட்டே நம்முடைய வேண்டுதல்களை கேட்கும்போ அவர் வேற எதையோ தர மாதிரி இருக்கலாம். ஆனா அது தான் கடைசில நமக்குத் தேவையானதாகவும், கடவுளுக்குப் பிரியமானதாகவும் இருக்கும்





அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்


PALAZIO
EVENTS
உங்கள் இல்லத்தின்
சகல விதமான மங்கல வைபவங்களை
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் கொண்ட ஓர் அழகிய மண்டபம்.
0-100 மற்றும் 0-700 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய வாகனத்
தரிப்பிட வசதிகளுடனும் கூடியது.
மேலும் எம்மிடம்....
மாலைகள், ஐயர், தவில் – நாதஸ்வரக் கச்சேரி, போட்டோ – வீடியோ,
பாட்டுக் கச்சேரி, நடனம், தங்கு விடுதி,
மணமகள் அலங்காரம், மேடை அலங்காரம், சொகுசு வான வசதி,
Limousine Car மற்றும்
பல தேவைகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.
+ (49) 1525 3961138 Kasinostr. 25 |42103 Wuppertal

# ஊடகங்களின் சூதாட்டத்தில் அகதிகளுக்கு எங்கே புகலிடம்?

**ராம் பரமானந்தன்**





இன்று ஜேர்மனியை அகதி-நெருக்கடி ஆட்டிப்படைக்கிறது. தனியார் நிறுவனங்களுக்கு பொருளாதாரத்தில் வெற்றி இது. அதே நேரத்தில் அரசாங்கமும் ஊடகங்களும் திருவிளையாடல்களை விடுவதில்லை.
பழைய பாழடைந்த Hotelகளின் உரிமையாளர்கள் விடுமுறைப் பயணிகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில், தங்களது கட்டிடங்களை அகதி இல்லங்களாக மாற்றுகின்றனர். ஒரு நாள் ஒரு புகலிடக்கோரிக்கையாளருக்கு, கட்டிட உரிமையாளர் Frankfurt அரசாங்கத்திடமிருந்து குறைந்தது 13,- யூரோவிலிருந்து பணம் பெறுகிறார். (FAZ 02/2016) ஒரு சாதரண Hotel ல் 250 அகதிகளை குடியேற்றலாம் என்றால் ஒரு மாதத்தில் 100.000 யூரோக்கள் வரை வருமானம் பெறலாம். பெறும் வருமானம் சில விடுதிகளில் சரியான முறையில் செலவழிக்கப்படாததால் அகதிகள் ஆழ்ந்த கடுங்குளிர் காலத்திலும், வெப்பம் இல்லாத அறைகளில் குளிரில் நடுங்குவதும் உண்டு.

அகதி இல்லங்களில் மருத்துவ பரிசோதனை செய்யும் மருத்துவர்களுக்கு Frankfurt நகரம், 60,-இல் இருந்து சனி/ஞாயிறு மற்றும் விடுமுறைகளில் 100,- யூரோக்களை மணித்தியாலச்சம்பளமாக வழங்குகிறது. இப்படி Leo Lattasch, Frankfurt நகரின் அம்புலன்ஸ் சேவையின் தலைவர் குறிப்பட்டார் (FAZ). மேலும் வாரத்தின் எழு நாட்களிலும் குறைந்தது இரண்டு மணி-நேரங்கள், இரண்டு மருத்துவர்கள் அகதி இல்லங்களில் சேவை செய்கின்றனர். இருவரில் ஒருவர் குழந்தைமருத்துவராக இருக்கவேண்டும். குழந்தை மருத்துவர்களிற்கு Frankfurt ல் தட்டுப்பாடு உள்ளதால், ஓய்வூதியத்தில் உள்ள குழந்தை மருத்துவர்களை Lattasch, தன்னார்வ வழியிலே பணி புரிய வேண்டுகிறார். (FAZ) இதனால் அகதிச்சிறார்களுக்கு, சமீபத்திய மருத்துவ சேவை கிடைக்கிறதா? என்ற கேள்வியும் எழுகிறது. மாநிலங்களிடையே அகதிகளின் விடுதிகளுக்கான விதிகள் மாறுபடுவதால் சட்டங்கள் சாதகமாகப் பயன்படுத்தபடுகின்றன.

அரசாங்கம் ஒரு சில அகதிகளின் முன்னேற்றத்தை தேர்ந்தெடுத்து அவர்களது கதையை ஊடகங்களுக்கு எடுத்துச்சென்று தமக்கு சாதகமாக்குகின்றனர். உதாரணத்திற்கு சிரியாவில் இருந்து வந்த „Tamim Fattal“ இன்று நாடகக்கலைஞராக சிறப்பிக்கப்படுகின்றார்.

புகலிடம் தேடிவருவோருக்கு ஜேர்மன் மொழியை கற்பிக்கையில், இதுபோன்ற விடுதலையான வாழ்வுமுறை கடைசிவரையும் உங்கள் தாய்நாட்டில் கிடைக்காது என்று மூளைச்சலவை செய்யப்படுகிறது. என் வயது அகதிகளிடம் நான் பேசும்போது ஜேர்மனி மேல் இவர்கள் காட்டும் அன்பு, ஜேர்மனியிலே பிறந்து வளர்ந்த வெள்ளையர்களிடம் காணப்படும் தேசிய உணர்வைவிட கண்மூடித்தனமாகப் படுகிறது. காரணம் உள்நாட்டு அரசியற் செய்திகளை அகதிகளுடன் அதிகம் ஜேர்மன் ஆசிரியர்கள் பகிர்வது குறைவு.



Ram Paramanthan

முக்கியாமாக, தாய், தந்தை, உறவினர்களின் தொடர்பு குறைய, மாற்றாக ஜேர்மனியில் உள்ள ஜேர்மன் வயோதிபர்களை அகதிகளிற்கு பொறுப்பாக்கி „பெற்றோர்“ முறையை பேணு கின்றனர். தொடரும் தலைமுறை „Oma, Opa“ என்று அவ் வயோதிபர்களை அழைக்கிறது.

இப்படி அந்த புதிய பெற்றோர்களிடமும், ஜேர்மனியிடமும் சார்ந்து இருக்கும் நன்றிக்கடைமையை உணரவைக்கின்றனர். இதனால் அகதிகள், சமூகவைலைகளிலும், ஊடகங்களிலும், அரசாங்கமேடைகளிலும் ஜேர்மெனியின்மேல் பாரிய தேசிய உணர்வைக்காட்ட, மேற்கூறிய வித்தைகள் புதைபடுகிறது. அகதிகளில் சிலர், தமது வேர்களை மறந்து, தாம் „யேர்மனியர்“ என்றும் தம்மினத்தவரிடம் இருந்து தூரம் செல்கின்றனர்.

இதோடு ஜேர்மனியரிடையே அகதிகள் அனைவரும் மிகச் சிறப்பான வாழ்வையே வாழ்ந்து வருகின்றனர் என்ற கருத்தை பரப்புகின்றனர். யேர்மனியின் மேல் ஒரே ஒரு அகதி தீவிரபற்று காட்டும்போது, ஏனைய அகதிகள் குளிரில் நடுங்குவதும், அகதி இல்லங்களில் பெறும் துன்பங்களையும் யேர்மனியர் மறந்திடுகின்றனர். சிறப்பிக்கப்படுபவரின் வழியையும், அவர் பெற்றிருக்கக்கூடிய அனுகூலங்களையும் கருத்திற் கொள்ளாமல், அந்நபரை ஊடகங்கள் போற்றுகின்றனர். ஊடகங்களும் அரசியல்வாதிகளும் செய்யும் தந்திரங்கள் அப்பாவி மக்களுக்கு விளங்கிடுமா? இதெல்லாம் இவ்வாறு நடக்க ஜேர்மன் அரசாங்கம் அகதிகளிடம் தனி முன்னேற்றத்தில் போர் அக்கிரமங்கள் தொடரும் தாய்நாடுகளுக்கு திரும்ப, பணம் வழங்குவதாக சுவரொட்டிகளும், விளம்பரங்களும் ஜேர்மனிய புகையிரதநிலையங்களிலும், பொதுப் போக்குவரத்துச் சேவைகளிலும் யேர்மன், அரபு, ஹிப்ரூவ், குர்திஸ், பர்சி ஆகிய அகதிகள் அதிகம் பேசும் மொழிகளில் அதிகரித்து வருகின்றன. இந்த பிரச்சாரத்தின் தலைவர் யேர்மனியின் உள்த்துறை அமைச்சர் Horst Seehofer. அகதிகளுக்கு அதிகூடியது 1200.-யூரோக்கள் „Starthilfe Plus“ என அழைக்கப்படும் பணம் தாய் நாடு திரும்பினால் கொடுக்கப்படும் இதை IOM (International Organization for Migration சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு) குறிப்பிடுகிறது. அகதிகளின் நெருக்கடியை சீர்செய்ய இது வழியாக எடுக்கப்படுகிறது. நீல நிறத்தில் அப்பாவித்தனமாகத் தெரியும் இச்சுவரொட்டி வாழைப்பழத்தில் ஊசி போடுவதுபோல் உள்ளது. அகதிகள் சிலர் முன் செய்த குற்றங்கள் இன்றுவரை ஊடகங்களில் மீழாய்வு செய்யப்பட்டும், மக்களின் மனதுகளை விட்டு நீங்காமற்பண்ணப்படுகின்றன. எங்கு குற்றங்கள் நடந்தாலும் முதலில் அகதிகளின் மேலே பழி சுமத்தப்படுகிறது. அகதிகள் சிறப்பாக செய்தவையை ஊடகங்களில் குறைவாகவே காணலாம்.இப்படி அகதிகளுக்கு எதிரான அணுகுமுறைகளை மக்களிடையே பரப்புகின்றனர். அகதிகளின் தலையெழுத்துக்கள் ஒவ்வொன்றும் மாறுபட்டதாகவே உள்ளது, ஏனெனில், அகதிகளின் கதையை எழுதுவது ஒரு கரம் மட்டுமல்லாமல், பலர் கரங்களாக உள்ளது. இன்று ஒரு அகதிக்கு குடியிருப்பு அனுமதி கொடுப்பவர் எந்தச் சாயல் உள்ள செய்தி பார்த்தாரோ என்பது முக்கியமாகிறது. ஊடங்களின் சூதாட்டத்தில், அகதிக்கு எங்கே புகலிடம்?


மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen






அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

3ம் பக்கத் தொடர்ச்சி

## மீண்டும் ரணில் இனவாதத்தை கையில் எடுக்கும் மகிந்த........



இந்தப் பின்னணியில்தான் சபாநாயகர் கரு ஜயசூரிய முக்கியமான காய்நகர்த்தல் ஒன்றை வியாழக்கிழமை இரவு மேற்கொண்டார். நள்ளிரவில் ரணில், கரு ஆகியோர் ஜனாதிபதியின் வாஸஸ்தலம் வந்தார்கள். ஜனாதிபதியுடனான அவர்களுடைய சந்திப்பு 10 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது. ஆனால், 50 நாட்களாகத் தொடர்ந்த நெருக்கடிக்கு முடிவைக்கொண்டுவருவதாக அந்தச் சந்திப்பு அமைந்தது. ரணிலை மீண்டும் பிரதமராக நியமிக்க இதன்போது மைத்திரி இணங்கியதாகத் தெரிகின்றது.

திடீர்ப் பிரதமராக நியமிக்கப்பட்ட மகிந்த அரசுக்கு எதிராக 3 தடவை கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை, ரணிலுக்கு ஆதரவாகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கைப் பிரேரணை என்பவற்றுடன் நீதிமன்றம் வழங்கிய இரண்டு தீர்ப்புக்களும் ஜனாதிபதிக்கு கடுமையான அழுத்தத்தைக் கொடுத்தது. அந்த நிலையிலும், பிரதமராக நீங்கள் பதவியேற்க முடியாதா என இறுதியாக ஒரு தடவை கருவிடம் ஜனாதிபதி கேட்டுப்பார்த்திருக்கின்றார். அவர் அதனை மீண்டும் மறுக்க மைத்திரிக்கு மாற்று வழி இருக்கவில்லை.

இந்த நிலையிலும் ரணிலைப் பிரதமராக்க மறுத்தால் ஐ.தே.மு. இரண்டு நகர்வுகளை மேற்கொள்ளும் என்பது ஜனாதிபதிக்குத் தெரிந்திருந்தது. இந்த இரண்டு நகர்வுகளும் அவருக்கு அச்சத்தைக்கொடுத்தது.

ஒன்று - தனக்கு எதிராக குற்றப்பிரேரணை ஒன்றைக் கொண்டுவர ஐ.தே.மு. முற்படும் என ஜனாதிபதி அஞ்சினார். சம்பந்தனுடனான சந்திப்பின்போது அவ்வாறு குற்றப்பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டால் அதனை நீங்கள் ஆதரிப்பீர்களா என அவர் கேட்டிருந்தமை இவ்விடயத்தில் அவர் எந்தளவுக்கு அச்சமடைந்திருந்தார் என்பதைக் காட்டியது. அப்போது சம்பந்தன் மைத்திரிக்குச் சாதகமாகவே பதிலளித்தார். அவாவது அவ்வாறான பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டால் அதனை தான் ஆதரிக்கப் போவதில்லை என சம்பந்தன் அப்போது உறுதியளித்தார்.

இவ்வாறான குற்றப்பிரேரணை பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்ற முடியாமல் போனாலும் கூட அவ்வாறான பிரேரணை ஒன்று வருவதே தன்னுடைய நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்திவிடும் என மைத்திரி அஞ்சினார். அது குறித்த பதிவு தன்னுடைய அரசியல் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்திவிடும் என அவர் கருதியிருக்கலாம். அதனைவிட, அரசியலமைப்பை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டுக்கள் கூட தன்னைக் கடுமையாகப் பாதிக்கலாம் என்ற அச்சமும் இவருக்கு இருந்தது.

இரண்டு- கொழும்பில் பாரிய மக்கள் பேரணிகளை ஏற்பாடு செய்து தன்னுடைய செயலகத்தையும், வாஸஸ்தலத்தையும் சுற்றிவளைப்பதற்கு ஐ.தே.மு. ஏற்பாடு செய்திருந்தது. இதுவும் பெருமெடுப்பில் இடம்பெற்றால் தன்னைக் கடுமையாகப் பாதிக்கும் என அவர் கருதினார். தனது பிடியை அவர் தளர்த்திக்கொள்ள இந்த இரண்டும்தான் பிரதான காரணம் என்றாலும், அதற்கு சில துணைக்காரங்களும் உள்ளன.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தன்னுடன் முழுமையாக நிற்குமா என்ற கேள்வியும் மைத்திரிக்கு இருந்தது. மகிந்த ராஜபக்ஷ அமைத்த பொதுஜன பெரமுனவுடன் அவருக்கு ஏற்கனவே சில முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இந்தப் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷவும் (தான் வகிக்காத பிரதமர்) பதவியை ராஜினாமா செய்யப்போவதாக அறிவித்தார். ரணிலைவிட தம்மிடம் வேறு தெரிவுகள் இல்லை என்பதில் ஐ.தே.க. தலைமை உறுதியாக நின்றதும் மைத்திரிக்கு நெருக்கடியைக் கொடுத்தது. இதற்கு மேலும் பிடிவாதமாக ரணிலை நியமிக்கமாட்டேன் என பிடிதாவமாக நிற்பது தனக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மைத்திரி உணர்ந்தார்.

ரணில் மீண்டும் பிரதமராகியுள்ள நிலையில் மைத்திரியும், மகிந்தவும் மீண்டும் இனவாதத்தைக் கைகளில் எடுத்திருக்கின்றார்கள். தனது "பதவி துறப்பு" நிகழ்வில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ, புதிய அரசியலமைப்பின் மூலமாக ரணில் நாட்டைப் பிளவுபடுத்தப்போவதாகச் சொன்னார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பணயக்கைதியாக ஐ.தே.க. உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். அதேபோல, ரணிலின் பதவியேற்பு நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரி, இராணுவ அதிகாரிகளையும், பௌத்த பிக்குகளையும் ரணில் சிறையில் அடைத்ததாகக் குற்றஞ் சாட்டினார். ஆக, இருவருமே தமது அரசியல் எதிர்காலத்துக்காக இனவாதத்தை கைகளில் எடுத்துள்ளார்கள்.

13 ம் பக்கத் தொடர்ச்சி

## தொலைக்காட்சி தொடர் நாடகங்களும் தொலைந்து போன உறவுகளும்.

சுயத்தை இழக்க வைக்கும் பொழுது போக்கு விடயமாகவே இந்த தொடர் நாடகங்கள் அதிக அளவு மக்களோடு ஒன்றி இருக்கின்றது, இது பெரும் நேரச் சுரண்டல் செய்கின்றது, சிறுவர் உட்பட அதிக அளவு மக்களை இது அடிமையாக்கி வைத்திருக்கின்றது. நாம் பயணிக்க வேண்டிய பாதை மிக பெரிது ஆனால் இந்த சாதனங்கள் எம்மை ஒரு இடத்தில் தேக்கி வைத்து விடுகின்றன.

பலர் நேரங்களை கடத்துவதற்கே இந்த தொடர் நாடகங்களால் ஈர்க்கப் பட்டவர்கள், ஒரு நாளின் பல அழகான மணித்துளிகளை இதற்குள்ளே தொலைத்தவர்கள், அடுத்தநாள் அதே நேரத்தில் அந்த நாடகத் தொடரைக் காண்பதற்காகவே பல முக்கிய விடயங்களை தள்ளிப் போடுபவர்களும், தவிர்ப்பவர்களும் பலர். கிடைத்த அற்புதமான வாழ்வை தொலைக்கின்றோம் என்ற சிறு உணர்வு கூட இல்லாமல் தொலைத்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

எம் வாழ்வின் பெறுமதியை உணர்ந்துகொள்ள வேண்டுமாயின் எம்முடனே நாம் அதிக நேரத்தை வரவு வைக்க வேண்டும். கடந்து போகின்ற ஒரு வினாடியே கூட மீண்டும் எம்மால் என்ன விலை கொடுத்தும் கொண்டுவரவே முடியாது. எந்த கருவியும் அதற்கு உதவி புரியவும் முடியாது.

தொடரும் என்ற வார்த்தையே நிச்சயம் ஆனது அல்ல அடுத்த நொடியும் நிரந்தரம் அல்ல தொடர் நாடகங்களின் தொடரும் என்ற வார்த்தைகளை நம்பி காலத்தை வீணடிக்காதீர்கள், காலம் மிகப் பெரிய வரம். வாழ்வை வசந்தமாக விரும்பினால் உங்களின் அகப் பக்கங்களை புரட்டுவதற்கு உங்களை ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.



# கனா கண்டேன் தோழி!



**தனசேகர் .பிரபாகரன்**

முல்லைப்பூ போலே வெள்ளைக்கசவு அணிந்த மலையாளப் பெண்மணிகள் கூட்டமாய் எதிர் நிற்கின்றனர் போலும் என்று எண்ணவைக்கும் நாட்கள் ஐரோப்பாவில் பனி பெய்யும் நாட்கள், உலகில் சின்ன சின்ன ஆசைகளை பட்டியலிட்டால் அதில் "திசம்பர் - ஜனவரி" மாதங்களில் தினமும் காலை எழுந்து சாளரத்தின் திரையை நீக்கி அன்று வெண்பனி வந்ததா?" என்று பார்ப்பதை ஒன்றாய்ச் சேர்க்கலாம்.

கயல்விழிக்கு அந்த பழக்கம் தொற்றிக்கொண்டிருந்தது, நிதம் எழுந்ததும் சாளரத்தின் திரையை நீக்கிப் பார்ப்பாள், பனி இல்லையெனில் அது நாளை வருமென மனதில் நினைத்துக்கொண்டு செல்வாள். இவ்வாறு மார்கழியும் முடிந்து தையும் வந்துவிட்டது பனி பெய்வதாய் தெரியவில்லை.

கல்யாணப் பருவமெய்தி மணவாளனுக்கு காத்திருக்கும் பெண்களின் நிலை இரு தலைக்கொள்ளி எறும்பைப்போல் தான், அதுவும் மனதில் காதலை கொண்டு நடக்கும் பெண்களுக்கு மன இறுக்கத்தை அதிகம் தரும் காலம், கயல்விழிக்கு தெய்வாதீனமாய் வேலை நிமித்தமாய் ஐரோப்பா வந்த தருணம் கவலைகள் மறந்து சற்றே ஆசுவாசத்தை தந்திருந்தது.

சூபெரிய கவலைகளை சிறிய சந்தோஷ தருணங்களில் அவள் மறந்திருந்தாள், ஐரோப்பாவின் புது சூழலும் புது மனிதர்களும் அவளுக்கு உலகமெனும் பெரிய வீட்டை கண்முன் காட்டியிருந்தது.

சில நாட்கள் வார இறுதிநாட்கள் மகிழ்ச்சியாக நொடியென கடந்து சென்றுவிடும், சில நாட்கள் அது ஒரு யுகம்போலே இருக்கும், அந்த வார இறுதி உற்ற தோழி டென்சி ஊரில் இல்லை, அடுத்த நாள் வழக்கம் போலே அலுவலகத்தில் இருவரும் சந்தித்துக் கொண்டனர். என்ன கயல்விழி முகம் வாட்டமாயிருக்கு ? வெண்பனி வரவில்லையா ? அது தான் கவலையா என்றாள் டென்சி. சிறுமுறுவலுடன் ஆமாம் வெண்பனியும் வரவில்லை, வரவேண்டிய செய்தியும் வரவில்லை என்றாள். அட அவ்வளவு தானே இண்டைக்கு வீட்டுக்குப் போய் வெண்பனி, வேண்டியது, வேண்டாதது எல்லாத்தையும் ஒரு சீட்டில் எழுதி தலையணையின் அடியில் வைத்துவிட்டு தூங்கு அதுவே கனவில் வரும் நாளை நனவாகும் மாறும் என்றாள்.

"போ டென்சி எப்போதும் உனக்கு விளையாட்டு தான்" என்றாள், அட உண்மையை தான் சொல்கிறேன் வாய் கிழிய இலக்கியம் பேசும் உனக்கு தெரியாத இந்த கனவெல்லாம் பற்றி ? என்றாள் டென்சி, தெரியாது நீ தான் சொல்லேன் என்று கயல்விழி வினவ தொடர்ந்து அவள் சொன்னாள்.

மதுரைக்கு அப்புறத்தே திருவில்லிபுத்தூர் என்றொரு ஊர் உண்டு குயில்கள் கூட அந்த வீட்டு வாசலுக்கு வந்துதான் பாட கற்றுக்கொள்ளுமாம் அப்படிப்பட்ட வீடு அந்த பெண்ணுடைய வீடு, பேர் கோதை, அவள் நெடுநாள் கண்ணனை காதலித்தாள், இதென்ன மடமை எப்போதோ பிறந்த கண்ணனை அதுவும் தெய்வத்தை எப்படி இந்தப் பெண் காதலித்து மணமுடிப்பாள் அனைவரும் கேலி செய்திருந்தனர், ஆனால் அவளோ அது பற்றியெல்லாம் கவலைப்படவில்லை கனவு கண்டாள் அதை பாட்டாகவும் எழுதி வைத்தாள். இதோ ஒரு பாட்டு சொல்கிறேன் கேள்

"நாளை வதுவை-மணம் என்று நாள் இட்டு
பாளைக் கமுகு பரிசு உடைப் பந்தற் கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக் கண்டேன் தோழீ நான்"

இந்த ஊராரெல்லாம் சொல்கிறார்களே அவர்கள் வாய்கள் எல்லாம் அடைத்தார்த் போலே, நாளை திருமணம் என்று நிச்சயித்து பாக்கும் கமுகும் கொண்டு அலங்கரித்த பந்தலுக்கு காளை போன்ற அவன் வரக்கண்டேன் தோழி என்று தன்னுடைய கனவை உரைக்கிறாள்.

இப்படி கனவு கண்டவள் தான் கடைசியில் காதலித்தவனையே கைப்பிடித்தாள் என்று நீ கேள்விபட்டதில்லையா ? என்றாள், சிரித்தவளாய் கயல்விழி சொல்வாள் கேள்விப்பட்டிருக்கிறேன் ஆனால் இந்நேரத்தில் உன்வாயால் கேட்டது அந்த கோதையே வந்து தன்கதை சொன்னது போல இருந்தது என்றாள்.

வழக்கமாய் ட்ராமில் ஏறி அவரவர் நிறுத்தங்களில் இறங்கி இல்லங்கள் சேர்கின்றனர், கயல்விழி பலநாள் கழித்து டென்சி சொன்ன நாச்சியார்திருமொழியின் பக்கங்களை திருப்புகிறாள், மனதில் எண்ண ஓட்டங்களுக்கு ஆசுவாசமாக அமைந்தது அந்த வரிகள், அயர்ந்து உறங்கிவிட அடுத்தநாள் எழுந்து சாளரத்தின் திரைநீக்க வெள்ளை உடுத்தியிருந்தது ஆம்ஸ்ட்ராடம் நகரம், அதே சமயம் ஓரமாக அடித்த கைபேசியை எடுத்து காதில் வைத்த அவளுக்கு நல்லசெய்தியும் காத்திருந்தது !

தூரத்தில் அந்த வாரணமாயிரம் புத்தகத்தின் பக்கங்கள் மெல்ல "கைத்தலம் பற்றக் னாக்கண்டேன் தோழீநான்" என்ற வரிகளை காட்டி நின்றது.










# மனைவி வீட்டில் இல்லாத போது ....

12ம் பக்கத்தொடர்ச்சி...





கௌசி

உலகத்துக்குப் புத்தி சொன்ன திருவள்ளுவரே மனைவி இல்லாவிட்டால் தன்னுடைய நிலை என்ன என்று மனைவிக்காகப் பாடிய வரிகளில்

“அடிசிற் கினியாளை அன்புடை யாளைப்
படிசொற் பழிநாணு வாளை – அடிவருடிப்
பின்துஞ்சி முன்னுணரும் பேதையை யான் பிரிந்தால்
என்துஞ்சுங் கண்கள் எனக்கு”

என்று பாடியிருக்கின்றார். மனைவி ஒரு வீணை அல்ல. வாசித்து முடித்த பிறகு அதைச் சுவரில் உங்கள் விருப்பப்படி சாய்த்து வைத்து விட முடியாது என்று ரஷ்யா பழமொழி சொல்வது போலவும் தன் மனைவியைக் கௌரவிக்காதவன் தன்னையே கேவலப்படுத்திக் கொள்ளுகின்றான் என்று ஸ்பெயின் நாடு சொல்வது போலவும் நாட்டின் உயர்வுக்கு வீட்டைக்காக்கும் பெண்களின் நிர்வாகமும் முக்கியமானது.

ஒரு வீடும், வீட்டு அங்கத்துவர்களும் சரியான முறையில் வழி நடத்தப்பட்டால் ஒரு நாடு சிறப்பான முறையில் இருக்கும்.

“அபூர்வமான அழகு, அளப்பரிய பண்பு, அபரிமிதமான கருணை, ஆவேசம், அசட்டுத்தனம், அபாரமான ஞாபகசக்தி, அடங்காத ஆசை, அற்பசந்தோசம், அறிவாற்றல் போன்ற பல விஷயங்களின் அதிசயமான கலவை பெண்” என்று அரிஸ்டோட்டில் சொல்லுகின்றார்.

என்ன இது ஆண்களின் திண்டாட்டம் சொல்ல வந்து பெண்களைப் புகழ்ந்து கொட்டிவிட்டேன் என்று நினைக்காதீர்கள். ஆணும் பெண்ணும் இணைந்த இராச்சியமே குடும்பம். என்னுடைய இப்பதிவானது ஒரு கை இழந்தால் மறு கை தவிக்கும் தவிப்பின் நிலைமை.

# How to improve your memory?



S.Jayanthan

How to improve your memory?

We all used to think that brain function peaked during our early adulthood and then slowly declined in the later years. Now it's known that our lifestyle plays an important role. We are more and more exposed to toxins, chemicals, poor diet, lack of sleep and much more. Having a healthy diet encourages your brain to grow new neurons, a process known as neurogenesis. Your brain's hippocampus, i.e. the memory centre, is especially able to grow new cells and it's now known that your 'memory centre 'regenerates throughout your entire lifetime but you need to give it the right tools to do so.

These "tools" are mostly lifestyle-based. You don't need an expensive prescription medicine or any medical procedure at all to boost your brain, and your memory. You simply must try out the following actions to improve your memory.

1. **Eating the right food**- It's not only the food that you eat but also the food that you don't eat play a crucial role in your memory. For instance, curry, celery, broccoli, cauliflower and walnuts protect your brain health. Increasing your omega-3 fat intake is also very important and Coconut oil is very good for your brain function.

2. **Exercise**- It encourages your brain to work at best by stimulating nerve cells to multiply, strengthening their interconnections and protecting them from damage.

3. **Stop Multitasking** — It may actually slow you down, make you prone to errors as well as make you forgetful.

4. **Get a Good Night's Sleep!** — It will enhance your memories and help you "practice" and improve your performance of challenging skills.

5. **Play Brain Games** — If you don't sufficiently challenge your brain with new, surprising information, it eventually begins to deteriorate.

6. **Master a New Skill** — Engaging in "purposeful and meaningful activities" stimulates your neurological system, counters the effects of stress-related diseases.

Meditation and Yoga is also said to help to have a better memory.Our memory is a skill, and just like other skills, it can be improved with practice and healthy overall habits.




03 ம் பக்கத் தொடர்ச்சி

## உருளைக் கிழங்கு நல்ல உணவா?



**நீரிழிவு உள்ளவர்களும் சாப்பிடலாமா**

சமைக்காத அரிசியில் 80 சதவிகிதமும், உருளைக் கிழங்கில் 20, வத்தாளையில் 20 மரவெள்ளி 38 சதவிகிதம் என மாப்பொருள் இருந்தபோதும் சமைத்தபின் இவற்றில் பெரு மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மாப்பொருள் உணவுகள் ஜீரணமடைந்து குளுக் கோசாக குருதியில் கலந்து எமது உடலின் செயற்பாடுகளுக்கான சக்தியை வழங்கும். சக்தி கலோரி அலகுகளில் குறிப்பிடப்படுவதை அறிவீர்கள். சமைக்காத உருளைக் கிழங்கு 100 கிராமில் 70 கலோரிகள் இருக்கிறது. புழுங்கல் அரிசியில் 77 கலோரிகள் உள்ளது. எனவே ஏறத்தாள சமஅளவே அரிசிலும் உருளைக் கிழங்கிலும் உள்ளது.

அதே நேரம் அவித்த உருளைக் கிழங்கில் 80ம், சுட்டதில் 85ம், மசித்ததில் 108ம், பொரித்ததில் 150 கலோரிகளும் உண்டு. அதே போல அரிசியை அவித்து சோறாக்கும் போது அதன் கலோரி வலு அதிகமாகவே செய்யும். ஆனால் பொரிக்கும் போது அல்லது பட்டர் போன்றவை சேர்ந்து மசியலாக்கும்போது உருளைக் கிழங்கின் கலோரி வலு அதீதமாகக் அதிகரிப்பதைக் மேலே கண்டீர்கள்

மாப்பொருளைப் பிரதானமாக இது வழங்குகின்ற போதும் இதில் விட்டமின் C மிக அதிகம் உண்டு. ஒரு கப் அவித்த உருளைக் கிழங்கானது எமது தினசரி விட்டமின் C தேவையின் கால்வாசியை வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றைத் தவிர vitamin B6, copper, potassium, manganese ஆகியவையும் தாராளமாகக் கிடைக் கின்றன. எனவே நல்ல உணவுதான்.

மிக முக்கியமாகக் குறிப்பட வேண்டியது அதிலுள்ள நார்ப்பொருள் ஆகும். ஒரு கப் அவித்த உருளைக் கிழங்கில் சுமார் 2.93 கிராம் உள்ளது. அமெரிக்க விவசாய ஆய்வுத் திணைக்களமானது இதில் 60 ற்கு மேற்பட்ட phytochemicals மற்றும் விட்டமின்கள் இருப்பதாக அறிவித்துள்ளது. இவற்றுள் உடல் ஆரோக்கியத்திற்கு அவசிய மான ஒட்சிசன் எதிரிகளான (antioxidents) carotenoids, flavonoids போன்றவையும் அடங்கு கின்றன.

இவற்றைத் தவிர பிரஷரைக் கட்டுப்படுத்தக் கூடிய இரசாயனமான kukoamines உருளைக் கிழங்கில் இருப்பதாக ஆய்வுகள் சொல்கின்றன. ஆனால் பிரஷரைக் கட்டுப்படுத்துவதற்காக உருளைக் கிழங்கைச் சாப்பிடுங்கள் என எந்த மருத்துவரும் சிபார்சு செய்ய மாட்டார்கள்.

ஏனெனில் எவ்வளவு சாப்பிட்டால் எவ்வளவு குறையும் அதன் பலன் எவ்வளவு நேரத்திற்கு நீடிக்கும் என்பது பற்றிய தெளிவான முடிவுகள் எதுவும் இதுவரை கிடையாது.

உருளைக் கிழங்கைச் சமைக்கும்போது நன்கு கழுவிய பின் தோல் நீக்காமல் சமைப்பது அவசியம். ஏனெனில் அதிலுள்ள நார்ப்பொருளில் பெரும்பகுதி அதிலேயே உள்ளது. விற்றமின் களும் தாதுப்பொருட்களும் அதில் அடங்கி யுள்ளன.

**உணவுகளில் மாப்பொருள் ஒப்பீடு**

ஒரு முட்டையின் அளவுடைய அவித்த உருளைக் கிழங்கு, ஒரு மேசைக் கரண்டி சோறு, ஒரு மெல்லிய பாண் துண்டு ஒரு சிறிய நானில் (NAN) ¼ துண்டு, கோர்ன் பிளேக் இரு மேசைக் கரண்டி, ஆகியவற்றில் கிட்டத்தட்ட ஒரேயளவு மாப் பொருள் உண்டு.

பழங்களைப் பொறுத்தரையில் மாப் பொருள் குறைவு. ஒவ்வொரு அப்பிள், ஒரேன்ஜ், பியேர்ஸ், சிறிய வாழைப்பழம் ஆகியவற்றிலும் கிட்டத்தட்ட அதேயளவு மாப்பொருள் உண்டு. எனவேதான் நீரிழிவு உள்ளவர்களை மாப்பொருள் அதிகம் உள்ள உணவுகளைக் குறைத்து காய்கறி பழவகைகளை அதிகம் உண்ணும்படி சிபார்சு செய்யப்படுகிறது.

ஆனால் அதேநேரம் மாப்பொருள் உணவுகள் வேண்டாதவை அல்ல. எமது உடலுக்கு அவசியம் என்பதை மறக்கக் கூடாது. ஏனெனில் அவைதான் எமது இயக்கதிற்கு அவசியமான சக்தியைக் கொடுக்கின்றன. இது நீரிழிவு நோய் உள்ளவர் களுக்கும் பொருந்தும்.

**நீரிழிவும் உருளைக் கிழங்கும்**

உண்மையில் உருளைக் கிழங்கு நீரிழிவாளர் களுக்கு ஆகாத உணவா?

நீரிழிவு உள்ளவர்கள் மாப்பொருள் உணவுகளான சோறு, பாண், இடியப்பம் பிட்டு போன்றவற்றை உண்பதைப் போலவே உருளைக் கிழங்கையும் உண்ணலாம். ஆனால் அவற்றின் அளவுகளில் கவனம் எடுக்க வேண்டும். உருளைக் கிழங்கு எமது பிரதான உணவு அல்ல. நாம் அவற்றை பொதுவாக பிரதான உணவுகளான சோறு இடியப்பம் பிட்டு பாண் போன்றவற்றுடன் கறியாக கலந்து உண்கிறோம்.

எனவே இரண்டையும் அளவு கணக்கின்றி உண்ணக் கூடாது. உருளைக் கிழங்கை அதிகம் எடுத்தால் அதற்கேற்ப பிரதான உணவின் அளவில் சற்றுக் குறைக்க வேண்டும்.

உருளைக் கிழங்கு சோறு இரண்டிலும் நார்ப் பொருள் உள்ள போதும் மேலும் அதிக நார்ப்பொருள் உள்ள காய்கறிகளை சேர்த்து உண்பது நல்லது.

குருதியில் சீனியின் அளவு திடீரென அதிகரிப் பதை இது குறைக்கும். கீரை வகைகள், ஏனைய நார்த்தன்மையுள்ள காய்கறிகள் போன்றவை அவ்வாறு சேர்த்து உண்பதற்கு ஏற்றவையாகும் ஆனால் அதற்கு மேல் பயற்று இன வகை உணவுகளான பருப்பு பயறு கௌபீ சோயா கடலை போஞ்சி பயிற்றை போன்றவற்றை சேர்த்து உண்பது மேலாகும்.

இவற்றுடன் முட்டை, மீன், கொழுப்பற்ற இறைச்சி போன்றவற்றை தேவைக்கு ஏற்றளவு சேர்த்துக் கொள்ளலாம்.

சமைக்கும்போது எண்ணெய், நெய், பட்டர் போன்றவற்றில் உருளைக் கிழங்கை வதக்கிச் சமைத்தல் நல்லதல்ல. ஏனெனில் அதன் கலோரி வலு அதிகரிக்கும். அது நீரிழிவு கொலஸ்டரோல் அதீத எடை உள்ளவர்களுக்கு அவ்வாறே ஏற்றதல்ல.

பொரித்த உருளைக் கிழங்கின் கலோரி வலு வானது அவித்ததை விட இரண்டு மடங்கு அதிகம் என்பதை ஏற்கனவே கண்டோம். எனவே நீரிழிவாளர்கள் மட்டுமின்றி தமது ஆரோக் கியத்தில் அக்கறை உள்ள எவரும் அவற்றை தவிர்ப்பது நல்லது. அல்லது ஓரிரு துண்டுகள் என மட்டுப்படுத்திக் கொள்வது நல்லது

இன்றைய இளைய வயதினருக்கு ஏற்றவிதமாக பல உள்ளூர் வெளிநாட்டு உணவகங்கள் பொட்டேட்டோ சிப்சை பரிமாறுகிறார்கள்.

இது எமது உருளைக் கிழங்கு பொரியலைப் போன்றதே. மிக அதிக கலோரி வலு கொண்ட தாகும்.

உருளைக் கிழங்கில் பெரு விருப்பம் கொண்ட வர்கள் சலட்டாகத் தயாரித்து உண்ணலாம். அவித்த உருளைக் கிழங்கு துண்டுகளுடன் அவித்த போஞ்சி கோவா, சலட் இலை போன்றவை சேர்ந்த சலட் ஆரோக்கியமான உணவாகும்.

புதிய உருளைக் கிழங்கை ஒருபோதும் பிரிட்ஜில் வைக்கக் கூடாது. வைத்தால் அதிலுள்ள சீனிச் சத்து அதிகமாவதுடன் அதன் சுவையும் மணமும் கெட்டுவிடும். வெளியே பாதுகாக்கும் போதும் வெங்காயத்துடன் சேர்த்து வைக்கக் கூடாது. பேப்பர் பையில் சேமித்து வைப்பது நல்லது. சரியான முறையில் சேமித்தால் 2 மாதம் வரை கெடாது இருக்கும் என்கிறார்கள்









அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

# யவனர் தேசம் கிரேக்கம்!



**சேரலன்**

மேற்கத்திய கலாச்சாரத்திற்கு முகவரி கொடுத்த நாடுகள் எதுவென்று தேடிப் பார்த்தால் ,ரண்டு நாடுகளை கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். ஒன்று கிரேக்கம் மற்றொன்று ரோமாபுரி. உலக வரலாற்றையே புரட்டிப் போட்ட ,வ்விரு நாடுகள் ,ன்னும் தங்கள் பழமையை தாங்கிக்கொண்டு வரலாற்று சாட்சியாக காட்சியளிக்கின்றன. சமீபத்தில் ஏதென்ஸ் நகரம் சென்று அதனை சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.
கடலோரத்தில் மலைகள் சூழ ஆலிவ் மரங்களின் காடுகளின் நடுவே கம்பீரமாய் காட்சியளிக்கிறது ஏதென்ஸ் நகரம்.

## மதுரை - கிழக்கின் ஏதென்ஸ்

மாயோன் உந்தித்தாமரை போல அரசன் கோயிலும் அதை சுற்றி வீதிகளும் கொண்ட மதுரையை எதென்ஸ் நகரோடு ஒப்பிடுவர் ! அக்ரோபோலிஸ் மலையே இந்நகருக்கு நடுநாயகம். எங்கிருந்து பார்த்தாலும் ஏத்தேனா தேவி கோவில் தெரிகிறது. மதுரையில் நீங்கள் எங்கிருந்து பார்த்தாலும் இதே போன்று நான்கு கோபுரங்கள் உங்கள் கண்களில் நிறையும். அன்றிலிருந்து இன்றுவரை மக்கள் தொடர்ந்து வாழ்ந்துவரும் நகரங்களாக மதுரையும் இந்நகரமும் விளங்குகின்றன.

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 400 - 500 ஆண்டுகளுக்கு முன்னர் உலகமே வியக்க இந்த மலைமேலே கிரேக்கர்கள் விண்ணுயர் பெரியகோயில் பணித்தனர். பாரசீகர்களை வெற்றிகொண்டதன் நினைவாக அதனை அமைத்தனர். கிரேக்கர்களின் பொற்காலமாக அந்த காலகட்டம் குறிக்கப்படுகிறது !
இந்த நகரம் கிரேக்க தெய்வம் ஏத்தனாவின் பெயரால் அழைக்கப்படுகிறது. இதற்கு பின்னால் ஒரு அருமையான கதை சொல்லப்படுகிறது.

## ஏத்தனா ஆலீவ் மரம் !

ஏதென்ஸ் நகரம் அமைக்கப்பட்டபோது அதற்கு யாரை காவல் தெய்வமாகக் கொள்வதென அரசனும் மக்களும் யோசித்தனர், ஏத்தனா தேவியும் பொசைடன் என இரு கருத்துகள் நிலவ, அக்ரோபோலிஸ் மலைமீது இருவருக்கும் போட்டி வைக்கமுடிவு செய்யப்பட்டது. இருவருள் நகரத்திற்கு சிறப்பான பரிசு தருவோரே வெற்றியாளராகவும் காவல் தெய்வமாகவும் சிறப்பிக்கப்படுவர் !

பொசைடன் தன்னுடைய திரிசூலத்தில் நிலத்தை கீர, தண்ணீர் ஊற்றெடுத்தது ஆனால் பொசைடன் கடலரசனாதலின் அந்நீர் உப்புநீராய் வெளிப்பட்டது. உப்புநீர் எதற்குமே பயன்படவில்லை. ஆனால் ஏத்தனா தேவியோ ஒரு ஆலிவ் மரத்தை வளரச்செய்தாள். அது எண்ணெய்யை தரும் பயனுள்ளதாக இருந்ததால் (இன்றும் கிரேக்கத்தில் மக்கள் ஆலிவ் எண்ணெய்யை மிகுதியாக பயன்படுத்துகின்றனர்)அவளே வெற்றிபெற்று மலைமேலே குடியேறி காவல் தெய்வம் ஆயினாள். அவளுக்கு மலைமேல் அழகிய தூண்களோடு பெரியகோவிலொன்றை கிரேக்கர்கள் அமைத்தனர், காலவெள்ளத்தில் படையெடுப்புகளாலும், இன்ன பிற காரணங்களாலும் அவை பழுதடைந்து போயின. எனினும் அந்த 2500 ஆண்டுகால எச்சமாய் இன்றும் அக்ரோபோலிஸ் மலையும் பார்த்தினான் கோவிலும் இன்றும் விளங்குகின்றன.

## தப்பிப்பிழைத்த ஒரே கிரேக்க கோயில் !



பாகன் ஆலயங்கள் என்று கிரேக்கத்திலும் ரோமாபுரியிலும் பல கோயில்கள் ,டிக்கப்பட்டுவிட்டன அவற்றுள் சில தப்பிப்பிழைத்தும் சில கடவுளர் சிலைகள் கையறுப்பட்டும் மூக்குடைக்கப்பட்டும் உலகின் பல அருங்காட்சியங்களில் விற்கப்பட்ட நிலைமை தான் இன்று !
உலகமே வியக்கும் கோவில்களும் கலைகளும் செழித்திருந்தது பண்டைய கிரேக்கத்தில் ! மலைமேல் இருக்கும் ஏத்தனா கோயில் போலவே நகரில் பல தெய்வங்களுக்கு கோயில்கள் இருந்தன.

ஒலிம்பஸ் திருமலைமேல் வாழும் பன்னிரண்டு தெய்வங்களுள் ஒருவரான எப்பெஸ்டஸ் கொல்லர்கள் மற்றும் உலோக தொழில்களின் தெய்வம், எனவே பொ.யு.மு 449 (B.C) இல் அந்த பகுதியில் வாழந்த கொல்லர்கள் மற்றும் உலோகத்தொழிலாளிகள் இக்கோவிலை கட்டி எப்பெஸ்டஸ் தெய்வத்திற்கு அர்ப்பணித்தார்.
காலப்போக்கில் படையெடுப்புகளால் கோயில் சிதைவுற்றது, கி.பி 7 ஆம் நூற்றாண்டில் இக்கட்டிடம் கிறிஸ்தவ தேவாலயமாகப் - சென் ஜோர்ஜ் தேவாலயமாக - பயன்படுத்தப்பட்டது, இக்கட்டிடம் நல்ல நிலையிலிருப்பதற்கு முக்கிய காரணமாகும். எனினும் இதே காரணம் ,தன் உட்புறத்தின் பழங்கால அம்சங்கள் அகற்றப்பட்டு கிறித்தவ தேவாலயத்துக்கேற்ற புதிய உட்புறம் அமைவதற்கு ஏதுவாகியது.
தேவாலயாமாக மாறியதால் இக்கோவில் காலவெள்ளத்தில் தப்பிப்பிழைத்தது இ,ன்று வெறும் கோயில் மட்டுமே எப்பெஸ்டஸ் இல்லாமல் !

பின்னிரவில் சற்றே ஆலிவ் மரங்கள் சூழந்த ஏதன்ஸ் நகர சாலைகளில் நடந்தால்... நீங்கள் முதலில் காணும் காட்சி இதுதான் ! ஆயிரமாயிரம் நூற்றாண்டுகள் கடந்தும் அவளுடைய பெயரை சொல்லிகொண்டு அந்த மண்டபத்தின் தூண்கள் அசையாமல் நிற்கின்றன ! சியூஸின் சிரிப்பும் ஹீரோவின் மந்திரபுன்னகையும் ஹெர்குலிஸின் கர்ஜனையும் காலச்சக்கரத்தை பின்னே சுழலவைத்து உங்களை வியக்கவைக்கும் ! அக்ரோபோலிஸ் மலைக்கு ஓர் ஈர்ப்பின் சக்தி இருக்கத்தான் செய்கிறது !









**மணமகன் தேவை!**
இந்து வேளாளர் குலம் யேர்மனியில் பிறந்து யேர்மனியில் படித்து யேர்மனியில் (Doctor) டாக்டராகக் கடமையாற்றும் 31 வயதுடைய அழகிய பெண்ணிற்கு மணமகன் யேர்மனியில் தேவை. சுவிஸ் லண்டனைச் சேர்ந்தவர்கள் யேர்மனியில் வந்து வசிப்பவர்களானால் தொடர்பு கொள்ளவும்.
பெற்றோர் சுளிபுரம் பண்ணாகத்தைச் சேர்ந்தவர்களாவர்.
தொடர்புகளுக்கு :
0049 4211 6981 499 - 0152 175 405 80

அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்


எமது ஸ்தாபனம் வெள்ளிவிழாக் காண
ஆதரவு தந்த வாடிக்கையாளர்களுக்கு எமது நன்றி
25 YEAR ANNIVERSARY
APIRAAMI ENTERPRISE
அபிராமி என்ரபிறைஸ்
தைப்பொங்கல் மற்றும் எமது ஸ்தாபனத்தின்
வெள்ளிவிழாவையும் முன்னிட்டு
APIRAMI ENTERPRISE Exotic Food A.to.Z
மாபெரும் மலிவு விற்பனை
10.01.2019 முதல் 21.01.2019 வரை
முதல் 25 பேருக்கு 100€ பெறுமதியான வவுச்சர்
அதிக பணத்திற்கு 10ம் திகதி முதல் 21 ம் திகதி வரை கொள்வனவு செய்யும் முதல் 25 பேருக்கு 100 € பெறுமதியான வவுச்சர் 22.1.2019 செவ்வாய்க்கிழமை வெள்ளிவிழா அன்று வழங்கப்படும்
25 X 100€
SPECIAL OFFER
FLASH SALE
ABIRAMI
PONNI RICE
5kg
வெள்ளிவிழா
22.01.2019
75€ மேல்
22.01.2019 அன்று
பொருட்கள் வாங்குபவர்களுக்கு
5 Kg பொன்னி அரிசி, அல்லது
5 Kg குத்தரிசி அன்பளிப்பு!
TRS
BASMATI RICE
RED SPLIT LENTILS
GRAM FLOUR
CHILLI POWDER
MINCED GINGER
அனைவருக்கும் எங்கள் தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
VALUTRANS MONEY TRANSFER
துரித பண மாற்றுச் சேவை!
Ria Worldwide Money Transfer
Tilda PURE BASMATI
Pferdemarkt 9
45127 ESSEN
Tel.: 0201/236925



# திருமந்திரமும் வாழ்வியலும் 33

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருக்குறளும் திருமந்திரமும்

கிறீஸ்த்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் திருவள்ளுவரின் திருக்குறளும், கிறீஸ்த்துவுக்குப் பின் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் திருமூலநாயனாரின் திருமந்திரமும் பல விடையங்களில் கருத்தொற்றுமை மட்டுமல்லாமல் சொற் பிரயோகங்களிலும் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் பாயிரத்தில் இரண்டாம் அதிகாரத்தில் வான்சிறப்பு பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 11 இலிருந்து 20 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதின்நான்காம் அதிகாரத்தில் வான்சிறப்பு பற்றி வரும் இரண்டு பாடல்களும் (பாடல் எண் 248, 249 ) வான்சிறப்புப் பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் பாயிரத்தில் நான்காம் அதிகாரத்தில் அறம் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 31 இலிருந்து 40 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதின்நான்காம் அதிகாரத்தில் அறம் பற்றி வரும் இருபது பாடல்களும் (பாடல் எண் 250 இலிருந்து 269 வரையும்) அறம் பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் இல்லறவியலில் எட்டாம் அதிகாரத்தில் அன்புடைமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 71 இலிருந்து 80 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதினெட்டாம் அதிகாரத்தில் அன்புடைமை பற்றி வரும் பத்துப் பாடல்களும் (பாடல் எண் 270 இலிருந்து 277 வரையும், 279, 280 பாடல்களும்) அன்புடமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் இல்லறவியலில் பன்னிரண்டாம் அதிகாரத்தில் நடுவுநிலைமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 111 இலிருந்து 120 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபத்திமூன்றாம் அதிகாரத்தில் நடுவுநிலைமை பற்றி வரும் நான்கு பாடல்களும் (பாடல் எண் 320 இலிருந்து 323 வரை) நடுவுநிலையைப் பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் இல்லறவியலில் பதினைந்தாம் அதிகாரத்தில் பிறன்மனை நயவாமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 141 இலிருந்து 150 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபத்திமூன்றாம் அதிகாரத்தில் பிறன்மனை நயவாமை பற்றி வரும் எட்டுப் பாடல்களும் (பாடல் எண் 201 இலிருந்து 208 வரை) பிறன்மனை நயவாமை பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் இருபத்தி ஆறாம் அதிகாரத்தில் புலால் மறுத்தல் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 251 இலிருந்து 260 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் ஏழாம் அதிகாரத்தில் புலால் மறுத்தல் பற்றி வரும் பாடல் எண் 199 இல் புலால் மறுத்தல் பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் இருபத்தி ஏழாம் அதிகாரத்தில் தவம் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 261 இலிருந்து 270 வரை) திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் ஐந்தாம் அதிகாரத்தில் தவம் பற்றி வரும் இருபத்திஒரு பாடல்களும் (பாடல் எண் 1624 இலிருந்து 1644வரை) கொல்லாமை பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்தி மூன்றாம் அதிகாரத்தில் கொல்லாமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 321 இலிருந்து 330 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் ஆறாம் அதிகாரத்தில் கொல்லாமை பற்றி வரும் இரண்டு பாடல்களும் (பாடல் எண் 197, 198) கொல்லாமை பற்றிக் கூ றுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்திநான்காம் அதிகாரத்தில் செல்வம் நிலையாமை பற்றி வரும் மூன்று குறள்களும் (குறள் எண் 331 இலிருந்து 333 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் மூன்றாம் அதிகாரத்தில் செல்வம் நிலையாமை பற்றி வரும் ஆறு பாடல்களும் (பாடல் எண் 168 இலிருந்து 173 வரை) செல்வம் நிலையாமை பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்திநான்காம் அதிகாரத்தில் யாக்கை நிலையாமை பற்றி வரும் ஏழு குறள்களும் (குறள் எண் 334 இலிருந்து 340 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இரண்டாம் அதிகாரத்தில் யாக்கை நிலையாமை பற்றி வரும் இருபத்தைந்து பாடல்களும் (பாடல் எண் 143 இலிருந்து 167 வரை) யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்திஐந்தாம் அதிகாரத்தில் துறவு பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 341 இலிருந்து 350 வரை) திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் நாலாம் அதிகாரத்தில் துறவு பற்றி வரும் இரண்டு பாடல்களும் (பாடல் எண் 1614, 1623) துறவு பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்திஏழாம் அதிகாரத்தில் அவா அறுத்தல் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 361 இலிருந்து 370 வரை) திருமந்திரத்தில் எட்டாம் தந்திரத்தில் நாற்பதாம் அதிகாரத்தில் அவா அறுத்தல் பற்றி வரும் பத்துப் பாடல்களும் (பாடல் எண் 2613 இலிருந்து 2622 வரை) அவா அறுத்தல் பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் அறத்துப்பாலில் ஊழியலில் முப்பத்தி எட்டாம் அதிகாரத்தில் ஊழியல் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 371 இலிருந்து 380 வரை) திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரத்தில் பதின்மூன்றாம் அதிகாரத்தில் ஊழியல் பற்றி வரும் ஆறு பாடல்களும் (பாடல் எண் 2847 இலிருந்து 2852 வரை) ஊழியல் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் அரசியலில் முப்பத்தொன்பதாவது அதிகாரத்தில் அரசாட்சி முறை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 381 இலிருந்து 390 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதின்மூன்றாவது அதிகாரத்தில் அரசாட்சி முறை பற்றி வரும் பத்துப் பாடல்களும் (பாடல் எண் 238 இலிருந்து 247 வரை) அரசாட்சி முறை பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் பொருட்பாலில் அரசியலில் நாற்பதாவது அதிகாரத்தில் கல்வி பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 391 இலிருந்து 400 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபதாவது அதிகாரத்தில் கல்வி பற்றி வரும் ஒன்பது பாடல்களும் (பாடல் எண் 290 இலிருந்து 298 வரை) கல்வி பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் நட்பியலில் தொண்ணூற்றுஇரண்டாவது அதிகாரத்தில் விலைமாது பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 911 இலிருந்து 920 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் ஒன்பதாவது அதிகாரத்தில் விலைமாது பற்றி வரும் ஐந்து பாடல்களும் (பாடல் எண் 204 இலிருந்து 288 வரை) விலைமாது பற்றிக் கூறுகின்றன.
திருக்குறளில் நட்பியலில் தொண்ணூற்றுமூன்றாவது அதிகாரத்தில் கள்ளுண்ணாமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 921 இலிருந்து 930 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபத்திநாலாவது அதிகாரத்தில் கள்ளுண்ணாமை பற்றி வரும் ஒன்பது பாடல்களும் (பாடல் எண் 324 இலிருந்து 332 வரை) கள்ளுண்ணாமை பற்றிக் கூறுகின்றன. திருக்குறளில் பொருட்பாலில் குடியியலில் நூற்றி ஐந்தாவது அதிகாரத்தில் நல்குரவு பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 1041 இலிருந்து 1050 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பத்தாவது அதிகாரத்தில் நல்குரவு பற்றி வரும் ஐந்து பாடல்களும் (பாடல் எண் 209 இலிருந்து 213 வரை) நல்குரவு பற்றிக் கூறுகின்றன.

ஓம் பூரணம் ஓம்
மானுடம் முழுமை பெறும் பூரணம்
பூரண ஆச்சிரமம்
சுவிற்சர்லாந்து
0041 79 839 27 73
உடலினையும் மனதினையும் உறுதி செய்து
வாழ்வினை வெற்றி கொள்வோம்
யோகா, தியானம், மன ஒருங்குவிப்பு, உடல் உள நல பயில்வு, ஐயதய சாதனைகள்
Purna Ashram Gotthelfstrasse 44, 3400 Burgdorf Switzerland Tel: 0041 34 413 02 65


Dortmund
மாநகரத்தில்
அனைவருக்கும் எங்கள் உள்ளங்கனிந்த
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
StaR Impex
Asiatische & Afrikanische -Lebensmittel Grosshandel
StaR-Impex
தைப்பொங்கலை
சிறப்பாக கொண்டாடி
எமது புதியவரவான
பொங்கல் பானைகளை
எங்கும் பெற்று மகிழ்வாகக்
கொண்டாடுங்கள்
பொங்கல் பொங்கட்டும்! மகிழ்ச்சி தங்கட்டும்!!
பொங்கல் பொதி
இனிய
பொங்கல்!!
நல்வாழ்த்துக்கள்
பொங்கலோ!
பொங்கல்!!
Available in Asian Shops around Germany
உங்கள் சிறப்பு
நிகழ்வுகளுக்கு எமது
அகம் தயாரிப்பான
"நிறைகுடம்"
எங்கும் கிடைக்கும்.
WELCOME SET
AGAM
Healthy and tasty Foods
அகம்
PONGAL PAANAI SET
INGREDIENTS
Aachi
CURRY POWDER
MANGO CHUTNEY
WELCOME SET
நிறைகுடம் செட்
Franziusstrasse 150 (Tor 3)
DE:44147 Dortmund
Tel:0231 860 26 96
Fax:0231 860 2698
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
e.mail:Info@star-impex.de web:www.star-impex.de

# இருகோடுகளில் ஒரு கோடு



**ஆழ்வாப்பிள்ளை**

கே.பாலச்சந்தரின் நாடகங்களைப் பார்த்து அவரின் திறமையை அறிந்து சத்யா மூவிஸ் தயாரித்த "தெய்வத்தாய்" திரைப்படத்தில் கதை வசனம் எழுத வைத்தவர் எம்.ஜி.ஆர்.

தனது "மேஜர் சந்திரகாந்" நாடகத்தை எம்.ஜி.ஆரை வைத்து திரைப்படமாக்க கே.பாலச்சந்தருக்கு ஒரு விருப்பம் இருந்தது. ஆனால் அது எம்.ஜி.ஆருக்குப் பொருத்தமான கதை அல்ல என்ற எண்ணத்தால் அதை அவர் கைவிட்டு விட்டார். தன்னை அறிமுகம் செய்த எம்.ஜி.ஆரை வைத்து அவர் ஒரு படமும் இயக்கவில்லை. "இருவரும் சேர்ந்து படம் பண்ணினால் அது எம்ஜி.ஆர் படமாகவும் இருக்காது, பாலச்சந்தர் படமாகவும் இருக்காது" என்பது அவரது அபிப்பிராயமாக இருந்தது. தன்னை திரையுலகத்திற்கு அறிமுகம் செய்த எம்.ஜி.ஆரிடத்தில் அவர் இறுதிவரை மரியாதை வைத்திருந்தார் என்பதை அவர் தனது பேட்டிகளில் பலமுறை சொல்லி இருக்கிறார்.

எம்.ஜி.ஆருக்கு "தெய்வத்தாய்" படத்துக்கு வசனம் எழுதியவர், சிவாஜி கணேசனுக்காக "நீலவானம்" படத்திற்கு வசனம் எழுதினார். நடிகர் திலகம் சிவாஜி கணேசனை வைத்து அவர் "எதிரொலி" என்ற படத்தை இயக்கும் "பொழுது எல்லோரிடமும் மிகுந்த எதிர்பார்ப்பு இருந்தது. நடிப்பின் சிகரமும் இயக்குனர் சிகரமும் இணைகிறார்கள் என்று பத்திரிகைகள் ஊதிப் பெரிதாக்க, அது இரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விட்டது. ஆனால் படம் வெற்றி பெறவில்லை. "பெரிய நடிகர்களை வைத்து இயக்கும் பொழுது, அது எனது படமாகவோ அவர்கள் படமாகவோ இல்லாமல், இரண்டும் கெட்டான் நிலைக்குப் போய் விடுகிறது" என்று தனது கருத்தைச் சொன்னார். அது உண்மையாகவே இருந்தது. அன்றைய இளம் நாயகர்களாக இருந்த ரவிச்சந்திரன், ஜெய்சங்கரை இணைத்து வண்ணத்தில் அவர் எடுத்த "நான்கு சுவர்கள்" என்ற திரைப்படத்தின் தோல்வியும் அதற்கு ஒரு சான்று.

நாகேஸ் அவரது திரைப்படத்தில் முக்கிய நாயகனாக சில காலங்கள் வலம் வந்தார். ஆரம்ப காலங்களில் அவரது படத்திற்கான இசைக்கு வி. குமாரைப் பயன்படுத்தினார். ஒரு நிலைக்கு வந்த பின்னர் எம்.எஸ்.விஸ்வநாதனின் இசையை தன் படங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

சிறிய பட்ஜெட் படங்களே அவருக்கு முதலில் கைகொடுத்தன. ஒரு படம் எவ்வாறு உருவாகிறது என்பதை "சர்வர் சுந்தரம்" என்ற திரைப்படத்தில் அவர் சொல்லி இருப்பார். இதனால் பெரிய நாயகர்களிடமும் தயாரிப்பாளர்களிடமும் இருந்து அதிருப்தியை அப்பொழுது சம்பாதித்துக் கொண்டார்.

நாகேஸ், ஜெமினிகணேசன், ஜெய்சங்கர், முத்துராமன், பாலையா, ஜெயந்தி, சௌகார் ஜானகி என அவருக்கு என்று அன்று நடிகர்கள் இருந்தார்கள். நாகேஸ், ஜெமினி கணேசன், ஜெயசங்கர் ஆகியோரையே அவர் அதிகமாக அப்பொழுது பயன்படுத்தினார். இதனால் இம் மூவரும் பாலச்சந்தரின் (சிவன், விஸ்ணு, பிரம்மா) மும்மூர்த்திகள் என்று அழைக்கப்பட்டனர்.

குடும்ப பாங்கான திரைப்படங்கள் என அப்பொழுது பலராலும் பரிந்துரைக்கப்பட்ட படங்களாக இவரது படங்கள் இருந்திருக்கின்றன. இவரது படங்கள் நாடகங்களில் இருந்து உள்வாங்கப் பட்டதாலோ அல்லது நாடக உலகில் இருந்து இவர் வந்ததாலோ என்னவோ நாடகப் பாணிகளாகவே இருக்கும். ஆனாலும் அதை யாருமே ஒரு பொருட்டாக அன்று கருதவில்லை. ஜெமினி கணேசனுக்காக "நான் அவனில்லை", சௌகார்ஜானகிக்காக "காவியத்தலைவி", ஆலங்குடி சோமுவுக்காக "பத்தாம் பசலி" என்று தன்னுடன் நெருங்கியவர்களுக்கு அவர்கள் தயாரிப்பில் இவர் படம் செய்து கொடுத்திருக்கிறார்.

கே.பாலச்சந்தரின் வெற்றி பெற்ற படங்களில் "அவள் ஒரு தொடர் கதை"யும் ஒன்று. இரண்டு கதாநாயகிகள். அதில் இரண்டு பெண்களை மையப்படுத்தி இருப்பார். ஒருத்தி ஆங்கில நாவல்கள் படிக்கிறாள். மற்றவள் ஜெயகாந்தனின் நாவல்கள் படிக்கிறாள். ஆங்கில நாவல் படிப்பவளை வெற்றி பெறுபவளாகவும் ஜெயகாந்தனின் நாவல்களைப் படிக்கும் நாயகியை தோல்வி கண்ட பெண்ணாகவும் திரைப்படத்தில் காட்டி இருப்பார். இது பாலச்சந்தருக்கு தேவை இல்லாத வேலை என அன்று எழுத்தாளர்கள் மத்தியில் ஒரு புயல் கிளம்பி இருந்தது. ஆனாலும் திரைப்படத்தில் ஜெயகாந்தனின் "சில நேரங்களில் சில மனிதர்கள்" என்ற நாவலைக் காட்டியதால் அந்நாவல் இலங்கையில் விற்பனையில் சாதனை படைத்தது என்பது உண்மை.

"இருகோடுகள்" திரைப்படமும் அன்று பலரால் பேசப்பட்டது. சௌகார் ஜானகி கடைந எங்கே? என்று கேட்க, அது தொலைந்துவிட்டது என ஜெமினி பதில் தருவார். அதற்கு நான் டகைந ஐயே தொலைத்து விட்டேன் என சௌகார் ஜானகி சொல்வார். நான் கடைந ஐப் பற்றிச் சொல்கிறேன் என்று ஜெமினி இடைமறிக்க, கடைந க்கும் டகைந க்கும் ஒரே எழுத்துதான், ஆனால் இடம் மாறி இருக்கின்றன என சௌகார் ஜானகி பதில் சொல்வார். இது அன்று பெரிதும் பாராட்டுப் பெற்ற உரையாடல்.

"எதிர் நீச்சல்" நூறாவது நாளுக்கு கேடயங்கள் வழங்கி வாழ்த்தியவர் அன்றைய முதல்வராக இருந்த அறிஞர் அண்ணாத்துரை. "இருகோடுகள்" படம் தயாரிப்பில் இருக்கும் பொழுது அறிஞர் அண்ணாத்துரை காலமாகிப் போனார். அவரின் மீது கொண்ட ஈடுபாட்டால் "இருகோடுகள்" படத்தில் கலெக்டராக நடிக்கும் சௌகார் ஜானகி முதல்வருடன் பேசும் காட்சி ஒன்றை படத்தில் உருவாக்கி இருப்பார். அந்தக் காட்சியில் முதல்வரைக் காட்டாது, அறிஞர் அண்ணாத்துரையின் குரலை மட்டும் ஒலிக்கச் செய்து புதுமை படைத்திருப்பார். பலராலும் பாராட்டுப் பெற்ற காட்சி அது.

"எதிர் நீச்சல்" படத்தில் இருமல் தாத்தா என்ற ஒரு பாத்திரத்தையும் உருவாக்கியிருந்தார். கடைசி வரையில் அந்தப் பாத்திரத்தை அவர் காட்டவேயில்லை. இருமலை மட்டும் கேட்க வைத்து புதுமை படைத்தார். இப்படி அன்று இயக்கத்தில் சிகரமாக நின்று பல சாதனைகள் செய்திருந்தாலும், தனது படத்தில் பிரச்சனையான விடயங்களைச் சொல்லி இருந்தாலும், கதை முடிவில் தீர்வை ஆழமாகச் சொல்லி விடாமல் நழுவி விடுவார். உதாரணத்துக்கு அரங்கேற்றம் திரைப்படத்தை எடுத்துக் கொண்டால், சந்தர்ப்ப வசத்தால் விபச்சாரத்துக்குள் தள்ளப்படும் ஒரு பெண்ணுக்கு வாழ்வு தருவதாக கதையை அமைத்து, இறுதியில் அவளை பைத்தியமாகக் காட்டி இருப்பார். ஆனாலும் படத்தின் கதை நகர்வைத் திறமையாகக் கையாண்டு அந்தப் படத்தில் வெற்றி பெற்றிருப்பார். அரங்கேற்றம் திரைப்படமும் அதில் இடம் பெற்ற பாடல்களும் இன்றும் மறக்க முடியாதவை.

இப்படி இவரைப் பற்றி நிறையவே சொல்லிக் கொண்டே போகலாம். இவர் இயக்கிய ஒவ்வொரு படத்தைப் பற்றியும் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டே போகலாம்.

இரு கோடுகளில் ஒரு கோட்டை அழிக்காமல் அதை எப்படி சின்னக் கோடாக்குவது என்ற கேள்வியை எழுப்பி ஒரு தத்துவத்தை இலகுவாகப் புரிய வைத்திருப்பார். ஆனால் இவரின் இழப்பை (24.12.2014) சின்னதாக்க முடியாமல் இருக்கிறது என்பதுதானே உண்மையாக இருக்கிறது. நன்றி மன ஓசை 24.12.2014







திருமதி கௌசி அவர்களின் சிறுகதைத் தொகுப்பான

## வெள்ளை உடைக்குள் கரையும் பருவம்

படங்கள்: வெற்றிமணி,. **Thiru Raju**

08.12.2018 அன்று யேர்மனி தமிழ் கல்விச்சேவையானது திருமதி கௌசி அவர்களின் சிறுகதைத் தொகுப்பான வெள்ளை உடைக்குள் கரையும் பருவம் என்னும் நூலை Helmholtz Gymnasium, Münster str 122, Dortmund என்னும் இடத்தில் அறிமுகம் செய்து வைத்தது.

இந்நிகழ்ச்சி அறிவிப்பாளர் முல்லைமோகன் அவர்கள் தொகுத்து வழங்க, யேர்மனி தமிழ் கல்விச்சேவை தலைவர் பொ. ஸ்ரீஜீவகன் தலைமையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினரான சிரேஷ்ட விஞ்ஞானி திருமதி Dr. Geethanjali Pickert (Maiz University, Germany), சிறப்புவிருந்தினர்களாகிய இசைக்கலைமணி திருமதி.தர்மினி தில்லைநாதன், கலாநிதி.மு.க.சு. சிவகுமாரன் வெற்றிமணி, சிவத்தமிழ் -ஆசிரியர்), ஈழத்து மெல்லிசை மன்னன் M.P.பரமேஸ் ஆகியோரின் சிறப்பான உரைகளுடனும் டென்மார்க் இலிருந்து வருகைதந்த எழுத்தாளர் ஜீவகுமாரன் அவர்களின் நூல்நயவுரையுடனும் இளையோர்களின் தமிழ்மொழி வாழ்த்து, நடனம், இசைக்கச்சேரி, என அற்புதமான கலைப் படைப்புக்களுடனும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

எழுத்தாளர்களின் வாழ்த்துரைகளுடன் குறிப்பாக இளையோர்களான ராம் பரமானந்தன், சிவவிநோபன் இருவரின் உரைகளும் கவரத்தக்கதாக இருந்தன. அமைதியாக செவிக்கு நல்ல இலக்கிய படையலும் வயிற்றுக்கு நிறைவான உணவுப் படையலும் என நிகழ்வு நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் அமைந்திருந்தது.






ஒரு வளமிக்க கிராமத்தின் கதை

# காதலி யார் சம்மளங்குளம்




நான் எனது கிராமமாகிய காதலியார் சம்மளங்குளம் பற்றி வாய்மொழியாகக் கேட்டும், பார்த்தும் அறிந்தவற்றை ஒரு பதிவாகத்தருவது பயனுள்ளதாக அமையும் என்று எண்ணுகின்றேன். தாயகத்தில் வன்னியின் செழிப்பையும் மக்களின் ஒற்றுமையையும் இங்கு உள்ள இளம் சந்ததியினருக்கு காட்ட உதவும் என நம்புகின்றேன்.

வன்னிமண்ணில் வீரம்செறிந்த இறுதித்தமிழ் மன்னன் பண்டார வன்னியன். அந்த மன்னன் காலடிபட்ட நிலம் எமது கிராமம். பண்டாரவன்னியனின் காதலி குருவிச்சை நாச்சியார் வாழ்ந்ததும் நமது கிராமத்தில்தான்.

எமது கிராமத்தின் முன்னைய பெயர் சம்மாளங்குளம். இங்கு சம்மள மரங்கள் அதிகம் நிறைந்த காட்டில் பெரிய குளம் அமைந்து இருந்தமையால், கிராமத்தின் பெயரும் சம்மாளங்குளமாகிவிட்டது. பின்னர் ஆங்கிலேயர் காலத்தில்

பண்டாரவன்னியனை தேடித்திரிந்த வெள்ளையர்கள் சம்மாங்குளத்தில் வந்து, பண்டாரவன்னியின் காதலியார்? காதலியார்? என்று சம்மாங்குளத்தில் விசாரித்து திரிந்துள்ளனர். Who is the lover of Pandaravaniyan? சம்மாளங் குளத்தில் காதலியார் யார் காதலியார் என்று கேட்டு அலைந்தமையால், காதலியார் சம்மாளங்குளம் என்னும் பெயர் கிராமத்தின் பெயராகவே மாறிவிட்டது.

பண்டாரவன்னியன் காட்டிக்கொடுக்கப்பட்டு இறந்தபோது நமது கிராமத்தின் எல்லையில் வாழ்ந்த குருவிச்சை நாச்சியாரும் விஷக்கிழங்கு உண்டு தற்கொலை செய்துகொண்டதாக கதைகள் உண்டு. இன்றும் குருவிச்சைநாச்சியர் இருந்த இடத்தில் உள்ள ஆற்றை குருவிச்சை ஆறு என்றே அழைக்கப்படுகின்றது.

காதலியர் சம்மாங்குளத்தின் அழகை விபரிக்கமுடியாது அன்று வன்னியில் விவசாயமே முதன்மைபெற்று இருந்தது. விவசாயத்திற்கு வேண்டிய நீரினைப் பெற மன்னர்கள் பல குளங்களை வெட்டினர். அப்படி வெட்டப்பட்ட குளங்களில் சம்மாளங்குளமும் ஒன்று.

குளத்தின் நடுவே மரங்கள் ஆங்காங்கே இருக்கும். குளத்தின் ஒரு கரையில் குடிமக்களும், மறுகரையில் தண்ணீர்குடிக்க மான்கள் யானைகள் கரடி புலி என அனைத்தும் வந்து போகும். யானைகளைப் பார்ப்பதற்கு என்றே சிறுவர்கள் குளக்கட்டில் பலமணி நேரம் அமர்ந்திருப்பார்கள்.

யானை வரவில்லை என்றால் யானைக்குட்டி பிளிறுவதுபோல்கூட குரல் எழுப்புவார்கள். பயமறியாத பருவம் அது. குளத்தில் பட்டமரத்தில் கொக்குகள் அமர்ந்திருந்து பாய்ந்து பாய்ந்து மீன்பிடிக்கும். குளத்தின் அழகை சொல்வது என்றால் அக்காட்சி ஓவியம் போல் இருக்கும்.

ஆலயங்கள் என்று பெரிதாக இல்லை. கிராமமே ஓர் ஆலயம்போல் இருந்தது. வீடுகளின் கிணற்றடியை அண்டியும் வாழைத் தோட்டங்களை அண்டியும் ஒரு கல்லுப்பிள்ளையார் வீற்று இருப்பார். செதுக்கப்பட்ட பிள்ளையார் அல்ல. கல்லைப்பார்த்து நீங்கள்தான் மனதுக்குள் பிள்ளையாரைச் செதுக்கவேண்டும். இதனை எவ்வளவு தூரம் நம்மனங்களை ஒருநிலைப்படுத்தும், ஒரு பக்குவம் தரும், பயிற்சியாகக்கூடக் கொள்ளலாம்.



பொ.நற்குணராஜா

சம்மாங்குளத்தின் கரைப்பகுதியில் நீருக்குள் மூழ்கியபடி ஒரு பிள்ளையர் இருப்பார் ஆனிமாதம் வெயிலுக்கு நீர்வற்ற அந்தக் கல்லுப்பிள்ளையார் தலைகாட்டுவார். அப்போ அதற்கு பொங்கல் செய்வது வழக்கம்.

பண்டாரவன்னியன் நினவுக்கல்




எனது கிராமத்தில் என் பாட்டனார் பூட்டனார் வாழ்ந்த மண். அங்குதான் நான் பிறந்து வளர்ந்தேன். எனது தந்தையார் 1935 ஆண்டு யாழ்மாவட்டத்தில் இருந்து என் தாயாரை மணம்முடித்து காதலியார் சம்மாளங்குளத்திற்கு வந்தார். அப்போது ஒட்டுசுட்டானில் இருந்து ஒற்றையடி வண்டில் பாதை மட்டுமே அக்கிராமத்திற்கு இருந்தது. ஒரு பத்துக்குடிமக்கள் மட்டுமே அங்கு மண்குடிசைகளில் வாழ்ந்து விவசாயம் செய்துகொண்டு இருந்தனர்.


யானை புலி கரடி எல்லாம் கூட கிராமத்தை அண்டியே இருந்தன. அதுமட்டுமல்லாமல் பாம்புகளுக்கும் பஞ்சமில்லை. இரவுநேரங்களில் வீட்டுக்கு அருகாமையில் யானைகள் வந்து போன அடிகளை நான் பலதடவை பார்த்து இருக்கின்றேன். இந்த நிலையில் அங்கு வாழ்ந்தவர்கள் ஆண்டவனையே நம்பினார்கள். அதனால் பனைமரங்களுக்கு அடியிலும், அங்கு இருந்த இரண்டு சிறிய ஆனால் ஆழமான கிணற்றடியிலும் (குடுவைக்கிணறு) கல்லுப்பிள்ளையாரை வைத்து தமது மக்களுக்கு கொடிவிலங்குகளாலும், விஷயந்துகளாலும் ஆபத்து வராது காக்கும்படி வேண்டி குலதெய்வங்களாகப்போற்றி பொங்கல் வைத்து வழிபாடு செய்வார்கள். தொடர்ச்சி 38 ம் பக்கம்



புதிதாக அமையும் குருந்தடி விநாயகர் ஆலயம்-
காதலியார் சம்மளங்குளம் ஒட்டுசுட்டான்



# ரஜினியுடன் நடித்த அனுபவம் பற்றி திரிஷா சொல்கிறார்



“நான் ரஜினிகாந்தின் தீவிர ரசிகை. 165 படங்களில் ரஜினி நடித்துள்ளார். அவருடன் பேட்ட படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்ததை பெருமையாக நினைக்கிறேன். படப்பிடிப்பில் அவருடன் பழகிய அனுபவங்கள் மறக்க முடியாதவை. மூத்த நடிகர், ஜூனியர் நடிகர் என்று வித்தியாசம் பார்க்காமல் எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியாக பழகுவார்.


அனைவருக்கும் மரியாதை கொடுத்தார். அன்பாகவும் எளிமையாகவும் இருந்தார். ரஜினி குணத்தில் பத்து சதவீதம் இருந்தாலே அவரைப்போல் நல்ல பெயர் எடுக்க முடியும். காலை 9 மணிக்கு படப்பிடிப்பு என்றால் காலை 6 மணிக்கே அரங்குக்குள் வந்து விடுவார். நேரம் தாண்டியும் படைப்பிடிப்பை நடத்துகிறார்களே என்று சொன்னால் வேலை என்று வந்துவிட்டால் அதை முடித்து கொடுக்க வேண்டும் என்பார்.
இந்த உலகத்தில் அவரைபோல் ஒருவரை பார்க்க முடியாது. பண்பானவர், பந்தா இல்லாத மனிதர். ரஜினியும், கமலும் இவ்வளவு உயரங்களை அடைந்ததற்கு அவர்களின் உழைப்புதான் காரணம்.” இவ்வாறு திரிஷா கூறினார்

37 ம் பக்கத் தொடர்ச்சி...

## காதலி யார் சம்மளங்குளம்

தங்களது பிரார்த்தனையாக 10 சதத்தை மரத்தில் துணியில் முடிந்து கட்டியும் விடுவார்கள். தோட்டத்தில் முதல் வாழைக்குலை போட்டதும் பொங்கல்தான். இன்ன இன்ன நாளில் பொங்கல் என்று பெரியவரையறை எதுவும் கிடையாது. ஆண்டவனுக்கு நன்றிசொல்லத்தோன்றும் நாள் எல்லாம் பொங்கல் மடைதான்.
அந்தக் குடவைக்கிணறுபற்றி கூறியாகவேண்டும். கிணற்றின் விட்டம் மிகக்குறைவு சிலசமயங்களில் எமது சக நண்பர்கள் அந்தக் கிணத்தை பாய்வதும் உண்டு. அடியில் இருந்து மேல்வரை செங்கட்டியால் ஒரு வகை மண்பூசி (சீமெந்துக்குப்பதிலாக) கட்டியுள்ளார்கள். அவை அப்படி அகலம் குறைந்த ஆனால் ஆழமான ஒரு அதிசயக்கிணறுகள். அக்கிணறுகள் இன்றும் உள்ளன.
எனது தந்தையின் கூற்றுப்படி அங்கு 350, 400 வருடங்களுக்கு முன் எமது பரம்பரை வாழ்ந்ததாகச்சொன்னார். எனது பாட்டன் 1860 களில் பிறந்தவர் அவரின் தந்தையும் அங்குதான் பிறந்தவராம். 90 வயதிலும் திடகாத்திரமாக நோய்நொடி இன்றி வாழ்ந்தார்களாம்.

அவர்களுக்கு எல்லாம் கல்லுப்பிள்ளயார்தான் காவல் தெய்வம். ( 5 கிலோ எடையுடைய கல்லு இது சிவலிங்கம்போல் இருந்தாலும் அது பிள்ளையார்வடிவமாகவே எம்மனங்களில் அமர்ந்துவிட்டார்) கிராமத்தில் ஒரு சிறிய பாடசாலை 5ம்தரம் மட்டுமே அங்கு இருந்தது அங்கேதான் என் ஆரம்பக்கல்வியும் அமைந்தது.



அமரர் மு.க.சுப்பிரமணியம்

பின்னர் அக்காலத்தில் அதிபராக இருந்த அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் என்னை மேற்கொண்டு படிக்க யாழ்மாவட்டத்திற்கு அழைத்துச்சென்று வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் படிக்கவும் வழிசமைத்துவிட்டார்.

அந்த சிறிய பாடசாலை அருகே ஒரு தென்னந்தோப்பு இருந்தது. அன்று ஒரு கிராமத்தில் இருந்து ஒரு கிராமத்திற்கு போவது என்றால் கால்நடையாகவே போவார்கள். அதனால் தாகம் எடுக்கும். இதனை உணர்ந்த ஒரு நம்மூர் வள்ளல் ஒரு பெரிய தென்னந்தோப்பு காணியை அப்படியே தருமக்காணியாக வழிப்போக்கர்கள் இளைளப்பாறி இளநீர் குடித்து தாகசாந்தியடைய எழுதி வைத்துவிட்டார். அதனால் தருமக்காணி காலங்காலமாக தாகமென வந்தவர்களுக்கு இளநீர்கொடுத்து அரவணைத்தது. ஆலயங்கள் பெரிதாக இல்லாமல் குலதெய்வழிபாடுமட்டும் இருந்தபோதும் கிராமமே ஓர் ஆலயமாக இருந்துள்ளது. அங்கு வாழ்ந்த தர்மசிந்தனையாளர்களின் மனதைக் காணும்போது இவை நன்கு புலனாகும்.
நான் வாலிபனாக இருந்த காலத்தில் வண்டில் மாடு மட்டுமே இருந்தது, பின்னர் மெல்ல மெல்ல உழவு இயந்திரத்தின் ஓசையும் கேட்கத் தொடங்கியது. துலாக்கிணறுகள் மெல்ல மெல்ல அருகி நீர் இறைக்கும் இயந்திரமும் வந்தது. பின்னர் மண்வீடுகள் கல்வீடுகளாக மாறின.

ஒற்றுமைக்கு எமது கிரமம் பெயர் பெற்றது. நெல்விதைப்பாக இருக்கட்டும் அறுவடையாக இருக்கட்டும் ஏன் புதிய கிணறு வெட்டுவதாக இருக்கட்டும், ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்து ஒன்றாக உழைத்து யாவரும் பயன்பெறப்பாடுபடுவர். கூலிக்கு என்று எவரையும் அழைத்ததும்கிடையாது. யாவுமே கூட்டுமுயற்சிதான்.
எல்லோரிடம் நிறைய மாடுகள் இருந்தன எமது வீட்டுக்கு அருகே இலட்சுமி அக்கா என்று ஒருவர் இருந்தார், அவர் தன் வீட்டில் வைத்திருக்கும் மிதமிஞ்சிய தயிரை யாவருக்கும் கொடுத்து மகிழ்வார். நாம் எல்லாம் அங்கு தயிர்வேண்டி உண்டு இருக்கிறோம்.

எமது கிராமத்தின் எல்லையில் ஒட்டுசுட்டான் உள்ளது அங்கு தான்தோன்றீஸ்வர ஆலயம் உண்டு. ( சிவன் ஆலயம்) நாம் எல்லாம் அங்குசென்றே வழிபடுவோம். யுத்தகாலத்தில் எமது கிராமம் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. அங்கு பலர் இறந்தனர், பலர் இடம்பெயர்ந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழ்ந்தனர். வாழ்கின்றனர். உள்நாட்டில் வாழ்ந்த சிலர் மீண்டும் அங்கு குடியேறினர்.
2011 ஆண்டு நான் அங்கு சென்ற பார்த்தபோது அழுவதைத்தவிர வேறு எதுவும் முடியவில்லை.சோலையாக இருந்தபூமி காலியாக இருந்தது.
இந்த அழிவுகளில் இருந்து தப்பி இன்று வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் வாழும் நம் இளைஞர்கள் அன்று எமது கிராமம் கண்ட அதே ஒற்றுமையுடன் கூட்டாக ஒரு அடையாளமாக குருந்தடி விநாயகர் ஆலயத்தை ஆகமமுறைப்படி கட்டி இன்று கும்பாபிஷேகம் செய்வது எவ்வளவு ஆனந்தத்தை எனக்கு தருகிறது என்பதை அளவிடமுடியாது.

வன்னிமண் செழிக்கவும் வாழ்வு வளம்பெறவும் குருந்தடி விநாயகர் துணைநிற்பார்.அவன் அருள் யாவருக்கும் கிட்டுவதாக. அந்த அரும்பணி யாற்றும் ஆலய நிர்வாக குழுவினருக்கு எனது நன்றியும் வாழ்த்துக்களும்.




# அஜித் படங்கள் 2 ஒரே ஆண்டில்



அஜித், நயன்தாரா நடிப்பில், சிவா இயக்கியுள்ள விஸ்வாசம் படத்தின் இரண்டு பாடல்கள் இதுவரை வெளியிடப்பட்ட நிலையில், அனைத்து பாடல்களின் ஆடியோவும் தற்போது வெளியாகி கலக்குகின்றது.

அஜித் நடிக்கும் பிங்க் பட மறுபதிப்பான தல 59 வெளியீடுத் திகதி பற்றி பேசியுள்ளார் அப்படத்தின் தயாரிப்பாளரும், மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் கணவருமான போனிகபூர்.

விஸ்வாசம் படத்தைத் தொடர்ந்து ஹெச்.வினோத் இயக்கத்தில் புதிய படமொன்றில் நடிக்கிறார் அஜித். இப்படத்தை ஸ்ரீதேவியின் கணவரும், பிரபல பாலிவுட் தயாரிப்பாளருமான போனிகபூர் தயாரிக்கிறார்.

இப்படத்தின் பூஜை 16.12.2018 நடைபெற்றது. பொதுவாகவே அஜித் படங்களின் வெளியீட்டுத் திகதி மாறிக்கொண்டே இருக்கும். அவரது ரசிகர்கள் மிகவும் ஆர்வமாக எதிர்பார்ப்பார்கள். ஆனால் அவர்கள் வெறுத்துப் போகும் விதமாகவே சமீபகாலமாக அஜித் பட மாற்றப்பட்டு நீண்டநாட்களாக வராமல் இழுத்தடிக்கப்பட்டது.


விஸ்வாசம் திருவிழா: படக்குழு இதற்கு பல்வேறு காரணங்கள் சொன்னாலும், அஜித் ரசிகர்கள் படம் வராமல் அதிகம் ஏமாற்றமடைந்தது மறுக்க முடியாத உண்மை. பொங்கலுக்கு வெளிவரும். விஸ்வாசத்தைக் கொண்டாட இப்போதே தயாராகி வருகின்றனர். தனது அடுத்தப்பட வேலையைத் தொடங்கி விட்டார் அஜித்.இப்படத்தின் பூஜை ஆரம்பித்து விட்டது. பூஜை போட்ட கையோடு அப்படத்தின் தயாரிப்பாளரான போனிகபூர், தல ரசிகர்களுக்கு மகிழ்ச்சியான ஒரு செய்தியைத் தந்துள்ளார். ஒரே ஒரே ஆண்டில் 2 படங்கள்: அதாவது, அடுத்தாண்டு அஜித்தின் பிறந்தநாளான மே 1ம் தேதி இப்படம் வெளியாகும் என அவர் தெரிவித்துள்ளார். அஜித் படத்திற்காக ஆண்டுக்கணக்கில் காத்திருந்தது போக, அடுத்தாண்டே ஜனவரியில் விஸ்வாசமும், மே மாதத்தில் தல 59 படமும் வெளிவருவது அஜித் ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.





கமலகாசன் ஸ்ரீதேவி இருவரும் பல படங்களில் சிறந்த ஜோடிகளாக நடித்துள்ளனர். இவர்களை இரசிகர்களே சேர்த்து வைக்கத்துடித்த ஒரு காலமும் இருந்தது. அன்று Me too இருந்திருந்தால் இரசிகர்கள் ஒரு வழிசெய்து இருப்பார்கள். அது ஒரு கனாக்காலம்.





# இது காதல்

6 படம் வெளியாகி 75 நாட்களைக் கடந்துவிட்டது. ஜானுவையும், ராமையும் ரசிகர்கள் தொடர்ந்து கொண்டாடுவதற்கு நன்றி தெரிவித்துள்ளார் த்ரிஷா. முன்னாள் காதலி விண்ணைத் தாண்டி வருவாயா படம் பார்த்தபோது ஜெசி போன்று ஒரு காதலி கிடைக்க மாட்டாளா என்ற ஏக்கம் மட்டுமே ரசிகர்களுக்கு ஏற்பட்டது.

ஆனால் 96 படம் பார்த்த பலருக்கும் தங்களின் பள்ளி பருவத்து காதலி கண் முன்பு வந்து சுகமான வலி கொடுத்துள்ளார்.

அப்படி பழைய நினைவு வந்து பள்ளி காலத்து காதலியின் செல்போன் எண், பேஸ்புக் கணக்கை தேடி அலைந்தவர்கள் பலர். விஜய் சேதுபதி விஜய் சேதுபதி 96 படத்தில் அப்படி என்ன சிறப்பு என்றால் உயர்வான காதல். பல ஆண்டுகள் கழித்து சந்தித்துக் கொண்ட ஜானுவும், ராமும் ஒரே வீட்டில் தனியாக இருக்க நேர்ந்தபோது அவர்கள் நினைத்திருந்தால் எது வேண்டுமானாலும் செய்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் எல்லை மீறாமல் அளவோடு நடந்து கொண்டது தான் ரசிகர்களை ஈர்த்துவிட்டது.




ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt

தரமும் மலிவும் நிரந்தரம்!

ஆசிய ஆபிரிக்க மற்றும், இலங்கை, இந்திய பலசரக்குப் பொருட்கள்,மரக்கறி வகைகள், கடல் உணவுவகைகள், அனைத்திற்கும், எம்மை நாடுங்கள்.

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Mönchengladbach
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven

அனைவருக்கும் எங்கள் தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
அனைவருக்கும் எங்கள்
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
அனைவருக்கும் எங்கள் தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
அனைவருக்கும் எங்கள்
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
0170 334 4059
பிருந்தாஸ்
அனைவருக்கும் எங்கள்
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
Ludwig str.87a - 70197 Stuttgart
Tel: 0711 615 8976


Photography
Video Filming
Album Making
Graphic Desiging
அனைவருக்கும் எங்கள்
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
Your Dreams Comes True
AKR Visualizers
BOOK A SESSION NOW AT
professional photography & cinematography
0049 231 5337 5366
0049 162 803 1647
Rheinische Str. 72
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com


SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
அனைவருக்கும் எங்கள்
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


Dortmund மாநகரில்
தாயக மரக்கறிகள்
பழவகைகள் மற்றும்
உணவுப் பொருட்களை
மொத்தமாக
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
அனைவருக்கும் ஸ்டார் இம்பெக்ஸ்
நிறுவனத்தரின்
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Star - Impex
Asiatische & Afrikanische
Lebensmittel Grosshandel
Franziusstrasse 150 (Tor 3)
DE:44147 Dortmund
Tel:0231 860 2696
Fax:0231 860 2698